விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 04 திங்கட்கிழமை (18.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 150

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## மாணவியின் கொலையுடன் தொடர்புடைய
# மேலும் நான்கு சந்தேக நபர்கள் நேற்று மாலை பொலிஸாரால் கைது
## மக்கள் திரண்டதால் புங்குடுதீவில் பதற்றம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மேலும் நான்கு பேரை பொலிஸ் புலனாய்வுத்துறையினர் கைது செய்துள்ளனர். நேற்று மாலை இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் குறிகாட்டுவான் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது அங்கு திரண்ட மக்கள் அவர்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

குறித்த சந்தேக நபர்கள் தப்பிச் செல்ல முற்பட்டவேளை கைது செயயப்பட்டதாக கூறப்பட்டது. கைது செய்யப்பட்ட இவர்கள் குறிகட்டுவான் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு 23ஆம் பக்கம் பார்க்க....

## வேலணையில் தாக்குதல்

(வேலணை)

புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி நள்ளிரவு வேளை ஆட்டோவில் வந்த ஒருவர் வேலணைப் பகுதியில் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டார்.

இவருடன் வந்த மேலும் ஒருவரும் ஆட்டோவும் தப்பிச் சென்றுள்ளது.

நேற்றுமாலை கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை பொலிஸார் கொண்டு வருவதாக கிடைத்த தகவலையடுத்து வீதிகளை மறித்து அதிகளவான இளைஞர்கள் காத்திருந்தனர்.

அவ்வேளை புங்குடுதீவில் இருந்து 23ஆம் பக்கம் பார்க்க....

## முள்ளிவாய்க்கால் கோரப் படுகொலை நினைவுகள் மே-18
# தமிழர் தாயகம் எங்கும் இன்று உணர்வெழுச்சி!

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நடைபெற்ற இறுதிப் போரில் கொல்லப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூரும் வகையில் இன்றைய தினம் தாயகத்திலும் புலம்பெயர் தமிழர் தேசங்களிலும் முள்ளிவாய்க்கால் கோரப் படுகொலை நினைவு நாள் இன்று எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது. தாயகத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் புலம்பெயர் தேசங்களில் இந்தியா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ் உட்பட தமிழர்கள் அதிகம் வாழ்கின்ற நாடுகளிலும் அனுஷ்டிக்க ஏற்படாகியுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)



## முச்சக்கரவண்டி - இ.போ.ச பேருந்து யாழ்.கோப்பாய் சந்தியில் விபத்து
### திருமலை வாசி உயிரிழப்பு, இருவர் காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முச்சக்கரவண்டியும் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்தும் மோதியதில் முச்சக்கரவண்டியில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும், முச்சக்கரவண்டி சாரதி மற்றும் அதில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா 24ஆம் பக்கம் பார்க்க....

## கொமாண்டோ களஞ்சியமாக குடும்பிமலை முருகன் ஆலயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில், குடும்பிமலை முருகன் ஆலயத்தின் மூலஸ்தான கதவு படையினரால் உடைக்கப்பட்டு அங்கு மின் இணைப்பிற்கான உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த ஆலயத்தின் முன்வாயிலில் ஆங்கிலத்தில் கொமாண்டோ (COMMANDO) எனஎழுதியிருப்பதையும் காணமுடிகிறது என பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

குடும்பிமலை முருகன் ஆலயம் குடும்பிமலை உச்சியில் ஆதிகாலம் தொடக்கம் சைவ சமயத்தவரால் கட்டப்பட்டு ஆண்டு தோறும் பூசைகள் இடம் பெற்று வந்தன.

கடந்தகால ஆயுதப்போராட்ட காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் 24ஆம் பக்கம் பார்க்க....

## ஆறு ஆண்டுகளாகியும் முள்ளிவாய்க்காலில் ஆறாவடுக்களாக தீராப் பிரச்சினைகள்
### முள்ளிவாய்க்கால் மீள்குடியேற்ற வாசிகள் பகிர்வு

(முல்லைத்தீவு)

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும், இறுதி யுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பிரதேசம், இப்போதும், பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கும் பகுதியாக அங்கு மீள் குடியேறியுள்ளவர்கள் கூறுகின்றார்கள்.

கடற்தொழிலையே இப்பகுதி மக்கள் தமது வாழ்வாதாரத்திற்கான பிரதான தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். எனினும் பல குடும்பங்கள் இன்னும் வறுமையில் வாடுகின்றன.

உணவுக்கும் பிள்ளைகளின் கல்விக்கும் அல்லாட நேர்ந்துள்ளதாக அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

தொண்டு நிறுவனங்களின் உதவியோடு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்ற போதிலும், அந்த வீடுகள் முற் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாத் சாலிக்கு எதிராக கண்டியில் நேற்று ஆர்ப்பாட்டம்



மத்திய மாகண சபை உறுப்பினர் அசாத் சாலியின் கண்டி காரியாலயம் திறப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்களுக்கும் அசாத் சாலியின் ஆதரவா ளர்களுக்கும் இடையில் கடும் வார்த்தைப் பிரயோகங்களும் இடம்பெற்றன.

இதனையடுத்து பொலிஸாரின் தலையீட் டினால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் முஸ் லிம்-சிங்கள நல்லுறவை சீர் குலைக்கும் அசாத் சாலி கண்டிக்கு வேண்டாம் எனவும் கோஷங்களை எழுப்பியிருந்தனர். (செ-11)







தமிழகத்தின் மாற்றத்துக்கான மாணவர் இளையோர் இயக்கத்தினால் மே 17 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடைபயணம், ஒன்றுகூடல் என்பன நேற்று மெரீனா கடற்கரையில் நடத்தப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.

# வித்தியாவின் பரிதாப மரணம் சமுதாய சீரழிவை வெளிப்படுத்துகிறது

## முதலமைச்சர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மாணவி வித்தியாவின் பரிதாப மரண மும் அதற்கு முன்னர் அவர் மீது நடத்தப்ப ட்ட வன்புணர்வும், சித்திரவதையும் எமது சமுதாயத்தின் இன்றைய சீரழிந்த நிலை யையே எடுத்துக் காட்டுகின்றது.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் தான் பிரதிப் பொலிஸ்மா அதிபராக யாழ்.மாவ ட்டத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஜி.கே. பெரேராவுடன் வடமாகாணத்தில், குறிப்பாக யாழ்.குடாநாட்டில், அதிகரித்துக் கொண்டு போகும் குற்றங்கள் சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தேன். பொதுமக்கள் உதவியு டன் இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்போவதாக அவர் வாக்களித்தார். எனி னும் நிலைமை கட்டுக்கடங்காது செல்கின் றதோ என்று எண்ண வேண்டியுள்ளது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் தெரிவித்தார்.

மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சில சமயங்களில் பொலிஸாரின் பொறுப் பற்ற நடவடிக்கைகளும் குற்றங்கள் இழை க்க ஏதுவாக அமைந்து விடுகின்றன. உதார ணத்திற்கு பொலிஸாரிடம் சம்பவம் நடந்த மாலையே குறித்த பெண்ணின் தாய் தந்தை யர் முறையிட்டபோது ஊடகங்களின் படி "காதலித்த பொடியனுடன் ஓடிப்போயிருப்பாள் காலமை வந்திடுவாள்" என்று பொலிஸார் கூறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பேர்ப் பட்ட கரிசனையில்லாத் தன்மை, முன்கருத லற்ற கூற்றுக்கள், தாமதங்கள் ஆகியன மேலும் மேலும் குற்றங்கள் புரிய ஏதுவாக அமைவன என்பதை அதிகாரத்தில் உள்ள யாவரும் உணர வேண்டும்.

போர் முடிந்த பின்னர் சட்டத்தின் ஆதிக் கம் குறைந்து வருவதாகத் தென்படுகிறது. சட் டத்திற்கு அமைவாகச் சமுதாயம் நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைச் சீரழிப்ப தாகப் பல நடவடிக்கைகள் நடந்துகொண்டி ருப்பது மனவருத்தத்தைத் தருகின்றது.

மனித உரிமைகள் முக்கியமாக பெண் களின் உரிமைகள் பற்றி எமது சமுதாயம் போதிய அளவு அறிந்து வைத்திருப்பது அவசியம். இவை முன்னர் எமது பண்பாட் டுச் சூழல் காரணமாக இயற்கையாகவே மக் களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் இனி நாங்கள் அறிவையும் விழிப்புணர்வையும் கட்டாயமாக மக்கள் மத்தியில் பரப்புவதன் மூல மாகத்தான் மாற்றத்தைக் கொண்டுவர முடியும். இதற்குக் கல்லூரிகள், பல்கலைக்க ழகங்கள், பொது அமைப்புக்கள், சமய சார் பான நிறுவனங்கள் போன்ற பலவும் உதவ முன்வர வேண்டும்.

அருமருந்தன்ன ஒரு கெட்டிக்காரப் பெண ணின் வாழ்க்கையைச் சீரழித்து கொன்று விட் டிருக்கின்றது எமது சமுதாயம். சமுதாயத்தில் குடி கொண்டிருக்கும் வன் எண்ணங்களின், சீர்கேட்டின் பிறழ்நடப்புக்களின் பிரதிபலிப்புக் களாகவே குற்றம் இழைத்தோரை நான் காண்கின்றேன்.

சமுதாய விழிப்புணர்ச்சி இனியேனும் எம்முள் எழ வேண்டும். வித்தியா சம்பந்த மாக விளம்பல்களைச் செய்து விட்டு சில கால த்தின் பின்னர் வாழாதிருப்பதில் பயனில்லை. பல விடயங்களை ஆராய வேண்டியுள்ளது. வித்தியாமீது குற்றங்கள் இழைத்தவர்களு க்கு அப்பால் அண்மையில் வன்செயல்கள் அதிகரித்திருப்பதற்கு அரசியல் காரணங்கள் உண்டா? எமக்கு யாராவது பாடங்கள் சில புகட்ட எழுந்திருக்கின்றார்களா? அவை என்ன? என்ற பல கேள்விகளும் ஆராய வேண டியுள்ளன. தீவகப் பகுதிகளில் பிறிதொரு அரசியல் அலகோ என்று எண்ணும் வண் ணம் சிலர் செயல்பட்ட காலங்கள் இருந் தன. ஆனால் அக்காலம் மலையேறிவிட்டது. மக்கள் மனத் திடத்துடன் இனி முன்னேற முன்வர வேண்டும்.

மரணித்த மகளை எமக்கு ஈடுசெய்ய முடி யாது. தாய், தந்தையர், உற்றார், உறவினரின் கலக்கத்தையும், சோகத்தையும், மனவரு த்தத்தையும் நாங்கள் நன்கு உணர்கின் றோம். அவர்களுக்கு எமது அடி மனதில் இருந்து வரும் அனுதாபங்களைத் தெரிவிக் கின்றோம். வடமாகாண சபையினர் தம் மால் முடியுமான உதவிகள் அனைத்தை யும் செய்ய கடமைப்பட்டிருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட குற்றங்கள் இனியும் ஏற்படாத வகையில் நடந்து கொள்வோமாக, வித்தி யாவின் ஆத்மா இறைவனடி சேர்வதாக என்றுள்ளது. (எ-8)

# பாடசாலை மாணவியை கொலை செய்த பாதகர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

## அனைத்துலக ஈழத்தமிழ் மக்களவை கண்டனம்

18 வயது பாடசாலை மாணவி வித்தியா மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல்வன்புணர்வை யும் கொலையையும் வன்மையாகக் கண் டிக்கின்றோம் என அனைத்துலக ஈழத்தமி ழர் மக்களவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு வெளியி ட்டுள்ள அறிக்கையில்,

2009-ம் ஆண்டுக்குப் பின்பு வடக்குக் கிழ க்கு மாகாணங்களில் அதிகரித்து வரும் பெண் களுக்கெதிரான வன்முறைகள் சரியான முறையில் அரசகாவல்துறையால் கட்டுப்படு த்தப்படவில்லை. அரசாங்கத்தின் அசமந்தப் போக்கே இன்று புங்குடுதீவு மகா வித்தியா லய மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் மீது மேற்கொள்ளப்பட்ட காமவெறிக்கும் படு கொலைக்கும் காரணமாகும்.

செல்வி வித்தியா பாடசாலை சென்று கொண டிருக்கும்போது கடத்தப்பட்டு மிகக்கொடூர மான முறையில் கட்டி வைத்துப் பாலியல் வன் புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் படு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவ் அப்பாவி இளந்தளிரின் மீதான பாலி யல் வல்லுறவு மற்றும் படுகொலையை அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் இச் சிறாரை இழந்த பெற்றோர்களுக்கு நீதி கிடைக்கும் வண்ணமும் இப்படியான சம்பவங்கள் இனிமேல் நடைபெறாது இருக்க வேண்டும் என்பதாலும் பாதகர்களுக்கு கடும் தண்டனை அளிக்கப்படவேண்டும் என வலியுறுத்து கின்றோம்.

எமக்குக் கிடைத்த தகவலின்படி சம்பவ தினத்தன்று மாணவி வீடு திரும்பாமை தொடர்பில் குடும்பத்தினரால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டபோது பொலிஸார் முறையற்ற வார்த்தைகளால் பேசி குடும்பத் தினரை அவமரியாதை செய்து அனுப்பியுள் ளனர். இலங்கை அரச பொலிஸாரின் பொறுப் பற்றவிதமான பதிலும் செயற்பாடும் குற்ற வாளிகளுக்கு துணை போவதோடு இப்படி யான வன்முறைகள் நடைபெறவும் தூண்டு வதாக அமைந்துள்ளது.

2009ற்குப் பிறகு தமிழர் பிரதேசங்களில் அதிகரித்து வரும் சந்திச்சண்டை, வாள் வெட்டுக்கள், பாலியல்வன்புணர்வுகள், போதைப்பொருள்பாவனை போன்ற சமூ கச்சீர்கேடுகள் அரசபடைகளினதும் பொலி ஸாரினதும் ஒத்துழைப்புடனேயே நடப்பதா கச் சந்தேகங்களை கிளப்புகின்றது. பொலி ஸாரின் இத்தகைய பொறுப்பற்ற செயற்பாட் டினை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின் றோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப் ட்டுள்ளது. (செ)

# ஊரெழு வெடிபொருள் பரலில் பணமோ, நகைகளோ இல்லை

## வெடிபொருட்களே இருந்ததாக கோப்பாய் பொலிஸ் தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊரெழு கணேசா வித்தியாசாலை க்கு அண்மையில் மீட்கப்பட்ட வெடி பொரு ட்கள் அடங்கிய பிளாஸ்ரிக் பரலில் எவ்வித பணங்களோ நகைகளோ இல்லை என கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்ட வெடிபொருட்கள் நீதிமன்ற உத் தரவிற்கமைய அழிக்கப்பட உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த இடத்தில் வீடொன்றின் கட்டட வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பிளாஸ்ரிக்கிலான மூன்று பரல்கள் தெரிய வந்தன. இதனை அடுத்து கோப்பாய் பொலி ஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பின்னர் சம்பவ இடத்திற்கு நேற்றுமுன் தினம் சென்ற விசேட அதிரடிப்படையினர் நேற்றும் நேற்றுமுன்தினமும் மீட்பு நடவடி க்கையில் ஈடுபட்டு வெடி பொருட்களை மீட்டு பொலிஸாரிடமும் கையளித்துள்ளனர்.

இந்நிலையில் மீட்கப்பட்ட பரல்கள் அனை த்திலும் வெடிபொருட்களே இருந்துள்ளது. அதில் பணங்களோ நகைகளோ இல்லை. வெடிபொருட்கள் அனைத்தும் யாழ்.நீதி மன்ற உத்தரவுக்கு அமைய விரைவில் அழி க்கப்படும் என கோப்பாய் பொலிஸார் தெரி வித்தனர். (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் அனைத்து மக்களும் பங்கேற்க வேண்டும்

## பிரதியமைச்சர் விஜயகலா சுட்டிக்காட்டு

**இறுதி யுத்தத்தில் கொன்று குவிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை நினைவுகூர்ந்து இன்று நடைபெறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் அனைத்துத் தமிழ் மக்களும் பங்கேற்று உயிரிழந்த தமிழ் மக்களின் ஆன்மா ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்க வேண்டியது அவசியமானதாகும் என்று மகளிர் விவகார பிரதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2009ஆம்ஆண்டு முற்பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான எமது உறவுகள் கொன்று குவிக்கப்பட்டனர். பெருமளவானோர் அங்கவீனர்களாகவும், பெருமளவானோர் காணாமற் போயுள்ளனர். இவ்வாறு பேரவலம் ஏற்பட்டு இன்றுடன் 6 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன.

இந்த பேரவலத்தில் உயிரிழந்த எமது ஒவ்வொரு உறவுகளையும் நாம் நினைவுகூரவேண்டும். அது எமது தார்மீக கடமையாகும். உயிரிழந்த அப்பாவி மக்களைக் கூட நினைவுகூர முடியாத அச்சமான சூழ்நிலை கடந்த அரசாங்க காலத்தில் இருந்தது. உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தால் அவர்களையும் புலிகள் எனக்கூறி தண்டிக்கும் காலம் கடந்த ஐந்து வருடங்களாக நிலவி வந்தது.

தற்போதைய அரசாங்கமானது உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூரலாம் என அனுமதி வழங்கியுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். மகிந்தராஜ பக்ஷ ஆட்சிக் காலத்தில் யுத்த வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டு அவர்களது உறவினர்கள் துயர் தோய்ந்திருந்த நிலையில் அந்த மக்களது மனதை புண்படுத்தும் வகையிலேயே கடந்த அரசாங்கமானது இராணுவ கவச வாகனங்களையும் போர் விமானங்களையும் காட்சிப்படுத்தி வெற்றிவிழாக்களை கொண்டாடியிருந்தது.

தற்போதைய அரசாங்கமானது வெற்றிவிழா என்ற பெயரில் இத்தகைய நிகழ்வை ஏற்பாடு செய்யாது பிரிவினைக்கு எதிரான நிகழ்ச்சியாகவே இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. உண்மையிலேயே பலியிடப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உறவுகள் என்றும் தமது உறவுகளை எண்ணி கண்ணீர் வடித்தபடியே சோகத்துடன் வாழ்கின்றன. இந்த மக்களின் சோகத்தில் நானும் பங்கேற்றுக் கொள்கின்றேன். இன்றைய தினம் வடக்கு, கிழக்கு உட்பட தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் இந்த முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடத்தப்பட வேண்டும்.

இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். அமைதியான முறையில் பலியான தமது உறவுகளை நினைவேந்தல் செய்வதற்கு சகலருக்குமே உரிமை உள்ளது. இந்த நினைவேந்தலிலும் மக்களின் சோகத்திலும், நானும் பங்கேற்றுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)



வெள்ளக்காடாகக் காட்சியளிக்கும் கந்தர்மடம் குமாரசாமி வீதியைப் படத்தில் காணலாம்.


### நிரந்தர தொழில்வாய்ப்பு

நம்பிக்கையோடு வாருங்கள் உங்களுக்கு வெற்றி நிச்சயம். பல வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள். இன்றே தொடர்பு கொள்ளுங்கள். சம்பளம் 18000/=,- 50000/= (தொழில் அடிப்படையில்) கொழும்பை அண்மித்த பிரசித்திபெற்ற தொழிற்சாலைகள் (ஜேம், டொபி, கோடியல், பால்மா, காமென்ட், கிளவுஸ்) தனியார் துறைமுகம், விமான நிலையம் (துச்சு, வெல்டர், இலக்ரீசன், சாதாரண ஊழியர், காகோ, கேட்டரிங்,லொன்றி) மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர், மேசன் (கம்பிபாஸ், செடலிங், டைல்பாஸ், பெயின்ரர்/ உதவியாளர்) பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில்.

உடன்தொடர்பு:- 077 111 6770

### உடனடியாக தேவை

உள்நாட்டிலே பல வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள். இன்றே தொடர்பு கொள்ளுங்கள். சம்பளம் 18000/=, -38000/= கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம், டொபி, பிஸ்கட், கோடியல், பால்மா, சொக்லெட், PVC, காமென்ட்... போன்றவற்றில் உற்பத்தி, லேபல், பொதியிடல், களஞ்சிய பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். நண்பர்கள் குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலையில் உடன்தொடர்பு.

தொடர்புக்கு- 077 817 6234

CNR WORLD WIDE EXPRESS & TRAVELS யாழ்ப்பாணத்தில் மங்களகரமான ஆரம்பம்

'அலுவலக திறப்பை முன்னிட்டு நீங்கள் அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது'.

- வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் (AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)



(C-954)

சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை

401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062


## இராசி பலன்

18.05.2015
(வைகாசி 04, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
அமாவாசை முற்பகல் 10.13 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 10.45 மணிவரை
இராகுகாலம் 7.23-8.53 மணிவரை
சுபநேரம் 11.53-1.23 மணிவரை
கார்த்திகை விரதம்

வளவன்

**மேடம்** யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட வெற்றி பெறுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**இடபம்** பல நாட்களாக பார்க்கமாலிருந்த உறவினர் ஒருவரை திடீரென சந்திக்கும் வாய்ப்புண்டு, தொழில் நலன்கருதிய பயணமொன்று இடம்பெறலாம், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், வியாபாரத்தில் மாற்றம் செய்ய முற்படுவீர்கள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சயனசுகக் குறைவான நாள்.

**கடகம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும்.

**கன்னி** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வர வேண்டிய வரவுகள் வந்து சேரலாம், திடீர் பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**துலாம்** விட்டுக்கொடுத்து செல்வதன் மூலம் வெற்றி கிடைக்கும்,எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், [illegible]ளை வழிபட்டு காரியம் தொ[illegible] வேண்டிய நாள்.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், சுப செல[illegible]வுகள் அதிகரிக்கும் நாள், பிறரி[illegible] [illegible] வந்து சேரலாம்.

**தனுசு** வருங்காலம் பற்றிய சிந்தனை[illegible] மேலோங்கும் நாள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், உடல் நலன் சீராகும் சுவாரஸ்யமான நாள், தடைப்பட்ட காரியங்களை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மை[illegible]யுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும், தாய்வழி உறவினர்களால் ஆதரவுகள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மீனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், இழு[illegible]பறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வரு[illegible]மானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவே தொழில்

# வெற்றியை நிர்ணயிப்பது எது?




வெற்றிகரமான தொழிலதிபர்களாக வலம்வருவோரின் பின்னணியில் அவர்களுடைய வெற்றியின் சூத்திரங்களாக விளங்கியவை இலக்கும், திட்டமிடலும்தான். இலக்கை நிர்ணயிப்பது திட்டமிடுவது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கடந்த வாரம் பார்த்தோம்.

பாடசாலை, கல்லூரி மாணவர்களைக் கேட்டால், எந்தெந்த பாடங்களை எவ்வளவு நாளில் படிக்க வேண்டும், பரீட்சைக்கு எவ்வாறு தயார் செய்து கொள்ள வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளதாகக் கூறுவர்.

ஆனால் புத்தகத்தின் புதுமணம் போகப்போக மாணவர்களின் இலக்கும் குறைந்துகொண்டே போகும். இதனால் பரீட்சையின் போது பெருமபாலான மாணவர்கள் சோபிக்காமல் போவதை பார்க்கிறோம்.

தொழில்முனைவோராக தொழில தொடங்குவோர் ஆரம்ப காலத்தில் இலக்கை நிர்ணயித்து செயல்படுவர். ஆனால் காலம் போகப்போக அவர்களது ஆவேசம் குறைந்து போகும். இதனால் நிர்ணயித்த இலக்கை எட்ட முடியாமல் பின்னடைவைச் சந்திக்க நேரும்.

இலக்கு, திட்டமிடுதல் மட்டுமே வெற்றிகரமான தொழில் முனைவோராக உருவாக போதுமா? என்றால் அது போதாது. அதற்கு மேல் செயல்படுத்துதல் (Execution) அதாவது திட்டமிட்ட இலக்கை நோக்கி நமது செயல்பாடுகள் அமைந்துள்ளதா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

தொழில் முனைவோராக தொழில் தொடங்குவோர் ஆரம்ப காலத்தில் இலக்கை நிர்ணயித்து செயல்படுவர். ஆனால் காலம் போகப்போக அவர்களது ஆவேசம் குறைந்துபோகும். இதனால் நிர்ணயித்த இலக்கை எட்ட முடியாமல் பின்னடைவைச் சந்திக்க நேரும். இலக்கு, திட்டமிடுதல் மட்டுமே வெற்றிகரமான தொழில் முனைவோராக உருவாக போதுமா? என்றால் அது போதாது. அதற்கு மேல செயல்படுத்துதல் (Execution) அதாவது திட்டமிட்ட இலக்கை நோக்கி நமது செயல்பாடுகள் அமைந்துள்ளதா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

தொழில் முனைவோராகத் தொடங்கி இலக்கை நிர்ணயித்து அதைத் திட்டமிட்டு செயல்படுகிறவர்கள் நிச்சயம் வெற்றியை எட்டியுள்ளனர். தோல்வியைச் சந்தித்த பெரும்பாலானோர் நிர்ணயித்த இலக்கிற்கு உரிய செயல்வடிவம் கொடுக்கவில்லை என்பதுதான் ஆராய்ச்சிபூர்வமான உண்மை. இலக்கை நிர்ணயித்து, அதற்காக திட்டமிடலை உருவாக்க அதிக நேரம் செலவிடுகிறோம்.

ஆனால் அதை செயல்படுத்த உரிய நேரம் அளிக்கிறோமா என்றால் இல்லை என்பதுதான் பெரும்பாலானோரின் பதிலாக உள்ளது. திட்டத்தை செயல்படுத்துவதில் தொடர்ச்சியான கண்காணிப்பு மிக மிக அவசியம். தினசரி, வாரந்தோறும், மாதந்தோறும் கண்காணித்து திட்டப் பணிகளில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும். செயல்வடிவம் கொடுப்பதில் சுணக்கமாக சோர்ந்து போனால் இலக்குகளை எட்ட முடியாது. தலைசிறந்த தொழிலதிபர்களின் வெற்றி ரகசியம் நிர்ணயித்த இலக்கை, நிர்ணயித்த காலத்தில் எட்டியதுதான்.

இலக்கை நிர்ணயித்து அதை உரிய காலத்தில் உரிய நேரத்தில் சென்றடைய தேவையான திருத்தங்களை அவ்வப்போது மேற்கொண்டு செயல்படுத்தாவிட்டால் வெற்றியாளராகும் வாய்ப்பை இழந்து விடுவோம். தொழில் முனைவோருக்கு இலக்கு,, திட்டமிடுதல் ஆகியவற்றோடு அதை செயல் படுத்துவதற்கான செயல்திட்டம், கண்காணிப்பது மிக அவசியம்.

வெற்றிபெற்ற தொழிலதிபர்கள் அல்லது துறைகளில் சாதனை புரிந்தவர்கள் குறிப்பாக விளையாட்டு வீரர்கள் என அனைவருமே தங்கள் துறைகளில் எட்ட வேண்டிய இலக்கை நிர்ணயித்து அதை செயல்படுத்தி வெற்றி கண்டவர்களாக இருக்கின்றனர். இலக்கு, திட்டமிடுதல், செயல்படுத்துதல் இவற்றையெல்லாம் மீறி கூடுதலாக ஒரு விடயமும் அவசியம். அதாவது எந்தத் தொழிலில் இறங்கியுள்ளோமே அத்தொழில் துறை வல்லுநர்களை நமது ஆலோசகர்களாகக் கொண்டு செயல்படுவது அவசியம்.

நமது வியாபாரம், நமக்குத் தெரியாதா? இதில் எதற்கு அடுத்த நபரின ஆலோசனை என்று தோன்றக்கூடும்.

ஆனால் இத்தகைய ஆலோசகர் இருந்தால், அவர்களது அறிவுரை நமது தொழிலை சீர்படுத்த உதவும். நாம் நிர்ணயித்த இலக்கை நோக்கி செல்கிறோமா, நிர்ணயித்த இலக்கு சாத்தியமானதா என்பதை யெலலாம் இத்தகைய ஆலோசகர்கள் மிகத் துல்லியமாகக் கூறிவிடுவர். எனவே தொழிலில் வெற்றி பெற நிபுணர்களின் அறிவுரை, ஆலோசனை மிகவும் அவசியம்.

இதில் வெற்றி, தோல்வி இரண்டுக்கும் யார் காரணம். நாமே தான். எனவே எந்தத் தொழில் தொடங்கினாலும் அதில் வெற்றி பெறுவதற்கு ஆலோசகர்கள் மிகவும் அவசியமாகிறார்கள்.

நீங்கள் ஒரு தொழிலை நடத்திக் கொண்டிருக்கும்போது அது சரியானபடி நடக்கிறதா அல்லது இலக்கு மாறிச் செல்கிறதா என்று உங்களால் எளிதில் உணர முடியாது. ஏனெனில் தொழிலின் ஒரு அங்கமாக நீங்கள் மாறி விடுவீர்கள். உணர்ச்சிபூர்வமான ஈடுபாடு உங்களுக்கு ஏற்பட்டு விடும்.

ஆனால் வெளியிலிருந்து அதாவது மூன்றாம் நபராக பார்ப்பவர்களுக்கு இதில் உள்ள நல்லது, கெட்டது தெளிவாகப் புரியும். ஆலோசனை கூறுவதோடு, மாற்றுத் தீர்வுகளையும் அளிப்பர்.

நீங்கள் சரியான பாதையில் செல்கிறீர்களா இந்த திசையில் சென்றால் இலக்கை எட்ட முடியுமா என்று கூறுவர். இலக்குமாறும் போது அதை உணர்த்தி சரியான பாதைக்கு திருப்புவதில் வெற்றியாளர்களின் பங்கு மகத்தானதாக உள்ளது.

நீங்கள்யாராக உருவாக வேணடும் என்பதில் உங்களுக்கு ரோல் மாடல் எனப்படும் முன்னோடிகள் இருக்கலாம். ஆனால் அவ்விதம் உருவாவதற்கு உங்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள் உங்களது ஆலோசகர்கள்தான்.

இலக்கு, திட்டமிடுதல், செயல்படுத்துதல் ஆகிய மூன்றும் செயல்படுத்தினால் கிடைப்பது ரிசல்ட். அது எவ்வாறு இருக்கும் என்பது வரும் வாரங்களில் பார்க்கலாம்.?

## தோல்வி என்பதே கிடையாது

ஒரு வெற்றிகரமான தொழிலதிபராக இலக்கை நிர்ணயிப்பது, அந்த இலக்கை எட்ட திட்டமிடுவது, திட்டமிட்டதை செயல்படுத்துவது என பல்வேறு நிலைகளைப் பார்த்தோம். திட்டமிட்ட இலக்கை நோக்கி செயல்படுகிறோமோ என்று தொடர்ந்து கண்காணித்தால் மட்டுமே பலன் கிடைக்கும்.

நிர்ணயித்த இலக்கை எட்டும் வகையில் உங்களுக்கு ரிசல்ட் கிடைத்தால் அது வெற்றி. அதை எட்டவில்லை என்றால் நீங்கள் ஆரம்பித்த தொழிலின் மூலம் உங்களுக்குக் கிடைத்த பாடம் என நினைக்க வேண்டும். எந்தத் தொழிலிலும் தோல்வி என்ற ஒன்று கிடையாது.

இன்று முன்னணியில் திகழும் வெற்றி பெற்ற தொழிலதிபர்கள் மற்றும் வெற்றிகரமான விளையாட்டு வீரர்கள் அனைவருமே தோல்வியைச் சந்திக்கவில்லை. அவர்கள் நிர்ணயித்த இலக்கை எட்டாதபோது, அதன் மூலம் கிடைத்த அனுபவத்தைப் பாடமாகக் கொண்டனர்.

எந்த ஒரு தொழிலிலும் தோல்வி என்ற ஒன்று கிடையாது. அது அந்தத் தொழிலின் மூலம் உங்களுக்குக் கிடைத்த பின்னூட்டம் (ஃபீட்பக்) என்று நினைக்க வேண்டும்.

நீங்கள் நிர்ணயித்த இலக்கை எட்டவில்லை எனில் எந்த பகுதியில் தவறு நிகழ்ந்தது என்று ஆராய வேண்டும். தொடங்கிய தொழில் தவறானதா அல்லது தொடங்கிய காலம் தவறானதா என்று பார்க்க வேண்டும்.

எட்டமுடியாத இலக்கை நீங்கள் நிர்ணயித்துவிட்டீர்களா என்று ஆராய வேண்டும். அடுத்து இலக்கை எட்டுவதில் அதாவது செயல்படுத்தும நிகழ்வில் எந்தப் பகுதியில் தவறு நடந்தது என்று பார்க்க வேண்டும்.




### 129 ஆண்டுகளை கொண்டாடும்

# கொகா-கோலா






1886-ம் ஆண்டு மேமாதம் 8-ம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தினம் முதல் 129 வருடங்களாக கொகா-கோலா தமது மகிழ்ச்சியை அனைவருடனும் பகிர்ந்து வருகின்றது. இந்த சந்தோசமான தருணத்தில் உலகத்திற்கு புத்துணர்வூட்டுவதான கொகா-கோலாவின் இலக்கினை நோக்கிய பயணத்தில் இணைந்திருந்த அத்தனை பேருக்கும் நிறுவனம் தமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

உலகின் மிகப்பெரும் குளிர்பான நிறுவனமான கொகா-கோலா ஸ்தாபனத்தில் 3,500 றகும் மேற்பட்ட வகை தயாரிப்புகள் உற்பத்தி செய்யப்படுவதுடன், உலகளாவிய ரீதியில் 200றகும் மேற்பட்ட நாடுகளில் 17 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான வர்த்தக நாம பெறுமானத்தினை கொணடுள்ளது. 2020ம் ஆண்டுக்கான நிறுவனத்தின் இலக்கினை நோக் கி வீறு நடைபோடும் நிறுவனமானது, தமது வர்த்தக நாமத்தின் தூண்களான - இலாபம், மக்கள், சேவைத தொகுப்பு, பங்காளர்கள், பூகோளம் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றல் ஸ்திரமான வளர்ச்சியை பெறும் நோக்குடன் செயலாற்றுகின்றது.

எம் வர்த்தக அடையாளங்களை நேசித்து அதற்கு ஆதரவளிப்பவர்கள் இன்றேல் எம்மால் இந்த மைலகல்லை அடைந்திருக்கவே முடியாது. கொகா-கோலாவுடன் கடந்த 129 ஆண்டுகள் இணைந்திருந்தவர்கள் இன்றேல் உலகத்திற்கு புத்துணர்வூட்டுதலை எம்மால் மேற்கொண்டிருக்கவே முடியாது. இந்த வருடம் முழுவதும் நாம் எமது வருடந்த கொண்டாட்டங்களை முன்னெடுக்க இருக்கின்றோம்.

அதன்போது இலங்கையில் மட்டுமல்லாது, உலகளாவிய ரீதியில் எம்முடன் இணைந்திருந்து கொகா-கோலா வர்த்தக நாமத்தினை இந்த இடத்திற்கு கொண்டு வந்த அனைவருக்கும் எமது நன்றியறிதலை தெரிவிக்க விளைகின்றோம். கொகா-கோலா வெறுமனே ஒரு பானம் மட்டுமல்ல. அது ஒரு கருத்தாக்கம், ஒரு இலக்கு, ஒரு உணர்வு என குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியாவில் அடுத்தது பொருளாதார புரட்சிதான்!

### – பிரதமர் மோடி

(பீஜிங்) இந்தியாவில் அடுத்தது நடக்கப்போவது பொருளாதார புரட்சிதான் என்று மோடி தெரிவித்தார். சீனாவுக்கு 3 நாள் பயணமாக சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, சிங்குவா பல்கலை கழகத்தில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார். அவர் பேசியதாவது, இந்தியாவில் அடுத்ததாக பொருளாதார புரட்சி ஏற்படப்போகிறது. இதற்கான ஆய்வுகளில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். இந்தியாவில் உள்ள 80 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். அவர்களுடைய ஆர்வமும், துடிப்பும், முயற்சியும், திறமையும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமையும். அதுமட்டுமின்றி, அடுத்த தலைமுறையில் இந்தியாவில் சாலை, துறைமுகங்கள், ரயில்வே, விமான நிலையங்கள், தொலைத் தொடர்புதுறை, டிஜிட்டல் நெட்வோர்க் போன்றவற்றின் உள்கட்டமைப்புகளில் முதலீடு அதிகரிக்கும்.

காப்பீடு, கட்டுமானம், ராணுவம் மற்றும் ரயில்வே துறைகளும் முதலீட்டை ஈர்க்கும் இலக்கில் அடங்கும். இந்த 5 ஆண்டுகளில் இந்தியா தெளிவான ஒன்றுபட்ட பார்வையை பெற்றிருக்கிறது. இது மற்ற நாடுகளுடன் இந்திய சந்தையை ஒன்றிணைக்கும்.

கொள்கைகளில் மாற்றம் செய்வது என்பது மன நிலையையும், பணிமுறையையும் மாற்றுவதை விட எளிதானது என்பதை நான் அறிவேன். ஆனால், நாங்கள் சரியான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். இந்தியாவில் நிகழக்கூடிய மாற்றத்தை நீங்கள் உணர்வீர்கள். இந்திய நாட்டின் வளர்ச்சியை கண்கூடாக காண்பீர்கள். பொருளாதார வளர்ச்சி தற்போது 7.5 சதவீதத்தை எட்டியுள்ளது. எங்கள் வளர்ச்சியை சர்வதேச வல்லுனர் பாராட்டியும் ஊக்குவித்தும் வருகிறார்கள். இவ்வாறு மோடி பேசினார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,212.47 | 7,258.67 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,058.62 | 4,050.68 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 9,265.908

உயர்வடைந்த பங்குகள்(ரூ.): ரெக்னிஸ்(115.90), சிங்கபுத்திர பினா.(68.00), கீல்ஸ் பூட்(144.00), லங்கா அலுமினியம் (81.60), சனச டெவலப் பாங்(145.20).

சரிவை அடைந்த பங்குகள்(ரூ.): சிரஸ் லிசா்(W) (0.20), ஒபிஸ் ஈகுப்மண்ட் (1801.00), புளு- டைமண்ட்(W)(0.60), அஸ்கொட் ஹோல்டிங்(31.00), ஜேகேஎச் (W) (21.90)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 133.15 | 135.99 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 209.26 | 215.21 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 151.00 | 155.99 |
| சுவிஸ் பிராங் | 135.70 | 140.45 |
| கனேடிய டொலர் | 117.30 | 121.16 |
| அவுஸ்திரேலிய டொலர் | 106.33 | 110.53 |
| சிங்கப்பூர் டொலர் | 100.28 | 103.51 |
| ஜப்பான் யென் | 1.10 | 1.14 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.10 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.31 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி மரையடித்தகுளம் பகுதியில்

# 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்க்கல்வெட்டு கண்டுபிடிப்பு



யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் இணைப்பாளரும் பேராசிரியருமான ப.புஸ்பரட்ணம் தலைமையில் தொல்லியல் ஆசிரியர்கள். மாணவர்கள் மற்றும் தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்கள் கபிலன். மணிமாறன் ஆகியோர் இணைந்து மேற் கொண்டு வரும் தொல்லியல் ஆய்வின் போது வன்னியில் மரையடித்த குளத்திற்கு அருகே பெரிய புளியங்குளம் என்ற இடத்தில் கி.பி 12-13 ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டொன்றை அடையாளம் காண்டுள்ளனர். இக் கல்வெட்டு குடும்பத்தாரால் அங்குள்ள வயல்வெளியில் இருந்து எடுத்துவரப்பட்டு அங்குள்ள வைரவர் ஆலயத்தில் தெய்வச்சிலைகளை வைப்பதற்கான பீடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அக்கல்லில் உள்ள எழுத்துக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த வவுனியா பிரதேசசபை ஆய்வு உத்தியோகத்தர் ஜெயதீபன் இது பற்றிய செய்தியை மணி மாறனுக்கு தெரியப்படுத்திய தன் பேரில் இக்கல்வெட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்க ழக தொல்லியல் பிரிவினரி னரின் ஆய்வுக்கு உட்படுத்த ப்பட்டு வருகிறது.

பல வரிகளில் எழுதப்பட்டிருந்த கல்வெட்டின் உடைந்த கீழ்ப்பாகமே தற்போது எமக்கு கிடைத்துள்ளது. அதில் ஐந்து வரிகள் காணப்படுகின்றன. அதன் முதலாவது வரியில் உள்ள எழுத்துக்கள் பல பெருமளவு சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. அதனால் அவ்வரியில் சொல்லப்பட்ட பெயர்களை அல்லது செய்திகளை அறிய முடியவில்லை. ஏனைய நான்கு வரிகளையும் தெளிவாக வாசிக்க முடிகிறது. அவற்றைத் தமிழக கல்வெட்டு அறிஞர் பேராசிரியர் சுப்பராயலு பின்வருமாறு வாசிக்கிறார்.

1)................

2)ஆஞ்ஞை மூந்று த

3)(ன்ம) ஆஞ்ஞை வல்ல-

4)வரையன் சத்தியம் இ-

5)து அழிப்பார் நர(கம்) புகுவார்.

இக்கல்வெட்டை எழுதிய தன் நோக்கம் ஒரு ஆலயத்திற்கு கொடுக்கப்பட்ட தானத்தை அல்லது அரசால் அல்லது ஒரு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறி நடப்போர் அழிந்து நரகத்திற்கு போவது நிச்சயம் என்ற செய்தியைச் சொல்வதாகும். இதில் வரும் மூந்றுத(ன்ம) என்ற சொல் 12-13ஆம் நூற்றாண்டில் வன்னியில் செயற்பட்ட தமிழ் வணிக கணங்களை அல்லது வேளைக் காரர். இடங்கை. வலங்கை ஆகிய தமிழ் படை அமைப்பைக் குறிக்கலாம். வல்லவராயன் என்ற பெயர் வன்னியில் ஆட்சி புரிந்த அரசனை அல்லது விநாயகக் (கணபதி) கடவுளைக் குறித்திருக்கலாம். தமிழகத்தில் 11-12ஆம் நூற்றாண்டு காலத்திற்குரிய கல்வெட்டுக்களில் வரும் வல்லவராயன் என்ற பெயர் விநாயகரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. ஆயினும் கல்வெட்டின் எஞ்சிய பாகம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் ஊகமாக சொல்லப்பட்ட விளக்கம் உறுதிசெய்யப்படும் என எதிர்பார்க்கலாம்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தற்போது கிடைத்த கல் வெட்டு அங்குள்ள காட்டுப்பகுதியில் ஒரு கட்ட அழிபாடுகள்இடையே இருந்து எடுக்கப்பட்டமை தெரியவந்துள்ளது. இதனால் இக்கல்வெட்டின் மிகுதிப் பாகம் அக்கட்டட அழிபாடுகள் இடையே இருக்கும் என எதிர்பார்க்கலாம். தொடர்ந்தும் இங்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் கல்வெட்டின் எஞ்சிய பாகமும். வேறு கல்வெட்டுக்களும் அங்கு கிடைக்க வாய்ப்புண்டு. எவ்வாறாயினும் வன்னிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது இடைக் காலத் தமிழ்க் கல்வெட்டென்ற வகையில் வன்னி பற்றிய ஆய்வில் இக்கல்வெட்டுக்கு தனிமுக்கியத்துவம் உண்டு என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. (இ)

# முன்னாள் அமைச்சர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களை ஒப்படைக்கவில்லை-ராஜித

முன்னாள் அமைச்சர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களை இன்னமும் ஒப்படைக்கவில்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் பதவி வகித்த பல அமைச்சர்கள் தங்களது உத்தியோகபூர்வ வாகனங்களை இன்னமும் ஒப்படைக்கவில்லை.

புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதனைத் தொடர்ந்து அதற்கு முன்னர் பதவி வகித்த அமைச்சர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களை அமைச்சில் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு வாகனங்களை ஒப்படைக்காதவர்கள் தொடர்பில் விரைவில் அறிக்கை வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார்.

இது குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி பணித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் சில உத்தியோகபூர்வ வாகனங்களை தங்களது சொந்த அரசியல் நடவடிக்கைகளுக்காக தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றனர் என அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# நேபாளத்திற்கு விரைந்து உதவ வேண்டும் உலக நாடுகளுக்கு ஐ.நா.வலியுறுத்தல்

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்தில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள உலக நாடுகள் விரைவாக உதவ வேண்டும் என ஐநா வலியுறுத்தியுள்ளது.

இதை முன்னிறுத்தி ஐநா சபையில் இந்தியா கொண்டு வந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அதில். அடுத்த மூன்று மாதங்களுக்குள் நேபாளத்தில் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய சுமார் 2 ஆயிரத்து 600 கோடி ரூபாய் பணத்தை உலக நாடுகள் அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நேபாளத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தினால் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. அங்கு மீட்புப்பணிகள் ஏறத்தாழ முடிவடைந்த நிலையில். தற்போது மறுசீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. (இ-5)

கண்டி-கொழும்பு

# அதிவேக வீதி நிர்மாணப்பணிகள் தேர்தலின் பின் ஆரம்பிக்கப்படும்

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தகவல்



(கொழும்பு)

பொதுத்தேர்தல் வெற்றியின் பின்னர் கண்டி - கொழும்பு அதிவேகப் பாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதுடன் ஒரு போதும் கண்டிராத வகையில் நாட்டின் அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படும் என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டி தங்கொல்லையில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தோட்டத்துறை உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை கையளிக்கும் வைபவத்தின் போதே அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் தெரிவிக்கையில்,

எமது அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத் திட்டங்கள் மிக வெற்றிகரமாக பூர்த்தியடைந்துள்ளன. இதன் பொருட்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உரிய வகையில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.க. அதிக பலத்துடன் வெற்றி பெறுவது நிச்சயம். இதனை உணர்ந்த எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் பிழையான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

எவர் எவ்வாறான கருத்துக்களை தெரிவித்து வந்தாலும் மக்கள் அவர்களின் செயற்பாடுகள் குறித்து நன்கு அறிந்தும் புரிந்தும் உள்ளனர். எனவே மக்களை இனிமேல் ஏமாற்றவோ அச்சுறுத்தவோ முடியாது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அவ்வாறான அரசியல் வாதிகளுக்குப் பாடம் புகட்டியது போல் எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் சிறந்த பாடங்களை புகட்டுவார்கள்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் எல்கடுவ தோட்ட கம்பனி என்பவற்றிற்கும் தோட்டத்துறை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறைகள் இருந்து வருகின்றது. இதன் பொருட்டு உதவி தோட்டத்துறை அதிகாரிகள் சிலருக்கான நியமனக்கடிதங்கள் இன்று கையளிக்கப்படுகின்றது.

அதேபோன்று தோட்டத்துறை பயிற்சியாளர்கள் 50 பேருக்கும் நியமனங்களை இன்று வழங்கியுள்ளோன்.

தோட்டத்துறைகளை அபிவிருத்தி செய்யவும் முன்னேற்றவும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இதன் ஊடாக தோட்ட தொழிலாளர் மக்களுக்கு உயர்ந்த சேவைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம் என [illegible] மேலும் தெரிவித்தார். (இ-5)

இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 17.25
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: கணக்காளர்/ லண்டன் PR
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/4506

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 30.75
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4510

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 73 செவ். 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: BSc, MSc/ தனியார் தொழில்
தொ.இ: B/4511

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 47.5
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்
தொ.இ: B/4514

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 43 சூரி, செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc
தொ.இ: G/4521

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 41.5
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: சித்த வைத்தியர்
தொ.இ: G/4525

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 26 செவ் 7 இல்
உயரம்: 4'5"
தகைமை/தொழில்: O/L தனியார் தொழில்
தொ.இ: G/4527

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 28.5
தகைமை/தொழில்: QUANTITY SURVERING
தொ.இ: G/4529

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலகம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய்த் தொற்றுக்குள்ளானவர்களின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை

## யாழ். மாவட்ட காசநோய்க்கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் காசநோய் தொற்றுக்குள்ளானவர்கள் உரிய முறையில் சிகிச்சை பெறாவிட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி ஆர்.மணிவாசகன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் காசநோய் சிகிச்சை பெற்று வருபவர்கள் வறுமை, குடும்பப் பிரச்சினை, மன உளைச்சல் போன்ற காரணத்துக்காக காசநோய் சிகிச்சையை இடை நிறுத்தி விடுகிறார்கள். அவ்வகையானவர்களை இனங்கண்டு அவர்களுடைய வீடுகளுக்குச் சென்றுச் ஆலோசனை மற்றும் சிகிச்சைகள் வழங்கி வருகின்றோம்.

ஆனால் சில நோயாளிகள் தொடர்ந்தும் சிகிச்சை பெறுவதில் தயக்கம் காட்டுகிறார்கள். இதனால் நோய்த்தொற்று அதிகமாவதற்கு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

நடப்பாண்டில் இதுவரை 111 பேர் காசநோய் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றார்கள். இந்த எண்ணிக்கையானது கடந்த ஆண்டு மேமாதம் வரையான காலப் பகுதியில் ஏற்பட்ட நோய் தொற்றைவிட இக்காலப்பகுதியில் அதிகமாக காணப்படுகின்றது. இந்த அதிகரிப்புக்கு உரிய முறையில் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளாமையே இதற்குக் காரணமாகும்.

இதில் காசநோய் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 49 பேரும் காச நோய் தொற்று உறுதிப்படுத்தப்படாமல் 33 பேரும் நுரையீரல் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் காசநோய் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு 29 பேரும் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்கள். ஒழுங்கான முறையில் சிகிச்சை பெறாவிடில் இந்த நோய் தீவிரமடைந்து உயிரிழப்பை ஏற்படுத்துவதோடு சமூகத்தில் விரைவான தொற்றையும் ஏற்படுத்தும்.

சிகிச்சையை தொடர்ந்து பெற்றுக் கொள்வதன் மூலம் பூரண குணமடைய முடியும். யாழ்.மாவட்டத்தில கூடுதலாக ஆண்கள் இந்த நோய் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்கள். எனவே இது எமது சமூகத்துக்கும் நாட்டிற்கும் சவாலான காரணியாக உள்ளது.

விரைவாக இந்த நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது அனைவரின் கடமையாக இருப்பதால் நோய் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறவர்கள் உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# ஹயஸ்வான் மோதியதில் மதில் இடிந்து வீழ்ந்தது




யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் அமைந்துள்ள மின்சாரசபை வளாக மதில்மீது ஹயஸ் வான் மோதியதில் மதில் இடிந்து வீழ்ந்ததுடன் வாகனமும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆட்டோ ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாவதைத் தவிர்க்கும்நோக்குடன் சடுதியாக வாகனத்தை நிறுத்த முற்பட்டவேளை மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதேவேளை ஆட்டோவும் சிறு சேதத்திற்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வது குறித்து வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருடன் சந்திப்பு



வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பாடசாலையில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக பிரதேச கிராம மக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வடமராட்சியில் அமைந்துள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்வி பணிப்பாளர் நந்தகுமாரிடம் தமது பாடசாலை எதிர்நோக்கிவரும் வளப்பற்றாக்குறை தொடர்பாக மகஜர் ஒன்றைக் கையளித்து கலந்துரையாடினர்.

இவர்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட பணிப்பாளர் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். இப் பிரதேசங்களில் போக்குவரத்து பிரச்சினை காணப்படுவதால் பணியமர்த்தப்படும் ஆசிரியர்கள் இப்பிரதேசங்களில் பணியாற்ற பின்னடிப்பதாகவும் மக்கள் பிரதிநிதிகளால் எடுத்துக்கூறப்பட்டது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வடமராட்சி கிழக்கின் வீதிகள் புனரமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பில் கட்டைக்காட்டு கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் கடற்தொழிலாளர் கூட்டுறவுசங்க மற்றும் பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிகள் கலந்து கொண்டனர். (இ-3-60)

# ஒருதேசம் என்ற அங்கீகாரத்தைப் பெறுவதன்மூலமே தமிழினம் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்

## கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழின அழிப்பை நாங்கள் தடுப்பது என்றால் தமிழினம் ஒரு தேசம் என்ற அங்கீகாரத்தை பெற வேண்டும். அந்த தேசத்தின் அங்கீகாரம் பெற்று இலங்கைக்குள் ஒரு சமஷ்டி தீர்வினை நாம் பெற்று வாழ வேண்டும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கான வெளியில் உள்ள வழி எனும் தலைப்பில் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் பாதிரியார் ஜெயக்குமார் தலைமையில் கருத்தாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது எமது பிரதேசம் கலாசார சீரழிப்பு, கல்வி சீரழிப்பு, காணி அபகரிப்பு திட்டமிடப்பட்ட பொருளாதார அழிப்பு என சென்று கொண்டுள்ளது. இதனை ஒவ்வொன்றாக பார்த்தால் சிறிய பிரச்சினைகளாக தோன்ற கூடும். எல்லாவற்றையும் தொகுத்து பார்த்தால் பாரிய பிரச்சினையாக தோன்றும். இது தமிழர்கள் ஒரு தேசம் என்பதனை அழிப்பதற்கான முயற்சிகள் தான் நடைபெற்றுக்கொண்டிருப்பது புலப்படுகின்றது.

நாம் சுய ஆட்சி கோரி போராடி வருவதால் தமிழர்கள் மீது சிங்களவர்கள் மத்தியில் பயம் ஒன்று உண்டு. இந்த பயத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்படுத்தவில்லை. ஆரம்ப காலம் தொட்டே சிங்கள மக்கள் தமிழர்கள் மீது பயம் கொண்டவர்களாக இருந்து வந்துள்ளனர். இதனை மகாவம்சமும் சுட்டிக்காட்டுகின்றது.

சிங்கள மக்களை பொறுத்த வரையில் அவர்களுக்கென வேறு ஒரு நாடு இல்லை. ஆனால் தமிழர்கள் அவ்வாறு இல்லை. அவர்கள் இந்தியா உட்பட உலகின் பெரும்பாலான நாடுகளில் உள்ளனர்.

ஆசிய பிராந்தியத்திற்குள் உள்ள மிகச்சிறிய இனமாக உள்ள தம்மை சிங்கள இனம் தமிழ் இனம் விழுங்கிவிடும் என்ற பயம் உள்ளது.

ஆகையால் தமிழர் தேசம் என்பதனை இல்லாமல் செய்து இலங்கை தீவு முழுவதை யும் தம்முடையதாக்க வேண்டும் என்ற ஆசை சிங்களவர்களுக்கு உண்டு. இந்நிலையிலேயே எமது தேசத்தை அவர்கள் திட்டமிட்டு பலவழிகளில் இல்லாமல் செய்யும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

இவ்வாறு எமது தேசத்தை அழிக்கும் முயற்சிக்கு தீர்வாக தமிழர்கள் ஒரு தேசம் ஒன்றினை பெறுவதாகத்தான் இருக்கும். இதனையே வட்டுக்கோட்டை தீர்மானத்தில் தந்தை செல்வாவும் தமிழீழ கோட்பாடு ஒன்றினை முன்வைத்து தமிழ்த்தேசத்தை காப்பாற்ற முயன்றார்.

இந்தியா எமக்கான அதிகாரங்களை பெற்றுக்கொடுப்பதற்கு அன்று எமக்கு ஆதரவளித்தாலும் தமிழீழ கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை. திம்பு மாநாட்டிலும் தனிநாட்டு கோரிக்கைக்கு பதிலாக தீர்வு பற்றிய யோசனை ஒன்றை முன்வையுங்கள் என்றே இந்தியாவினால் தமிழ் தரப்பிடம் கூறப்பட்டது.

தமிழ் இனத்தின் கடந்தகால சரித்திரங்களை பார்க்கும் போது தேசம் அல்லது தேசியம் அடிப்படையில் தான் தமிழர் அரசியல் வளர்ந்து வந்துள்ளது.

2011 ஆம் ஆண்டு தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு என இருந்த கட்சி தேசிய கோட்பாட்டை வலியுறுத்தும் வகையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என பெயர் மாற்றப்பட்டு அதிலேயே தேர்தலிலும் போட்டியிருந்தோம்.

இந்த நிலைப்பாட்டையே தொடர்ந்தும் நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

13 ஆம் திருத்தத்தையே தர மறுக்கும் இந்த அரசு தேசியத்தை தருமா? என கேள்வி எழுப்ப முடியும். தேசம் என்பது அரசியல் ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மக்கள் கூட்டமொன்று தனித்துவமாக வாழ்வதை அடையாளப்படுத்துவது. நாடு என்பது சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலங்கை என்பது பல தேசியங்கள் கொண்ட நாடாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

ஆனால் சிங்கள இனம் தாம் இலங்கை முழுவதும் ஒரு தேசம் எனவும் நாங்கள் தமிழர்கள் சிறுபான்மை என்றே கூறுகின்றது. இலங்கையில் உள்ள இனப் பிரச்சினைக்கு சர்வதேச பரிமாணமும் ஒன்று உள்ளது.

இலங்கையை மையப்படுத்தி கடும் பூகோள அரசியல் போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்திய- இலங்கை ஒப்பந்தம் சீனாவை இலங்கையிலிருந்து வெளியேற்றவே கொண்டு வரப்பட்டது. இவ் ஒப்பந்தத்திலேயே 13ஆவது திருத்தமும் தோன்றியது.

இந்த இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை நாம் நிராகரித்து இருந்தால் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும் என்ற நிலை காணப்பட்டது.

இவ்வாறான அடுத்தவரின் நலனுக்காக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தையே நாம் இன்று பேசிக்கொண்டு உள்ளோம்.

மூன்றாம் உலக மகாயுத்தம் தோன்றினால் அதில் இலங்கைக்கும் ஒரு பங்கு உண்டு என்ற சூழ்நிலையில் தான் தமிழ் மக்கள் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பல்கலைக்கழகங்களின் 2014/15

# பட்டப்படிப்பில் நெறிக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யும் முறைகள்

**பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாமையால், பரீட்சார்த்திகள் சிலருக்கு அனுமதி கிடைக்கவில்லை. சிலருக்கு எதிர்பார்த்த துறை கிடைக்கவில்லை. சிலருக்கு எதிர்பார்த்த பல்கலைக்கழகம் கிடைக்கவில்லை. அத்துடன் புதிய துறைகள் வருடத்துக்கு வருடம் அறிமுகப்படுத்துவது உண்டு. இத்தகைய பாதிப்புக்களை தவிர்ப்பதற்காக பல்கலைக்கழக அனுமதிப்பத்திர விண்ணப்பம் பூர்த்தி செய்யும் முறைகள் தொடர்பாக 'வலம்புரி "பத்திரிகை தகவல்களை வழங்குவது உண்டு. அந்த வகையில் இந்த வருடமும் (2014/15) பல்கலைக்கழக அனுமதி விண்ணப்படிவம் பூர்த்தி செய்யப்படும் முறைகள் வெளியிடப்படுகிறது.**

இலங்கை பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கான கொள்கை காலத்துக்கு, காலம் வகுக்கப்படுகின்றது. மாணவர்கள் பெற்றுக் கொண்ட Z புள்ளியின் அடிப்படையில் தெரிவு ஒழுங்கு இடம் பெறும். அனுமதிக்கப்பட்ட பாடங்களுக்கு மூன்று (3) 'S" சித்தி குறைந்தது பெற்று இருத்தலுடன் பொதுச்சாதாரண தரத்திலும் 30 புள்ளிகளுக்கு குறையாமல் பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு 30 புள்ளிகளுக்கு குறைவாக எடுத்தோர் முதல்தடவையில் அல்லது அடுத்த தடவையில் இப் புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியுடையவர் ஆவார். ஆனால் உரிய காலத்தில் விண்ணப்பப் படிவம் சமர்பிக்க வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதியானது தீவாளாவிய திறமை அடிப்படை, மாவட்ட அடிப்படை, ஆகிய இரண்டின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது. Z புள்ளி நிரலின் வரிசைப்படி 40% திறமையின் அடிப்படையில் வழங்கப்படும் நாட்டின் மொத்த சனத்தொகைக்கு எவ்வளவான வீதத்தில் மாவட்ட சனத்தொகை இருக்கின்றது. எனக் கணித்து 55% வரை 25 மாவட்டங்களுக்கு வழங்கப்படும். மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதற்கு பரீட்சைக்கு முதல் நாளில் இருந்து மூன்று வருடம் சட்டப்படி குறிப்பிட்ட பாடசாலையில் படித்தவராக இருக்க வேண்டும். இதற்கு மேலாக 5 வீதம் 16 மாவட்டங்களின் சனத்தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் அனுமதிக்கப்படும். இத்தெரிவுகளும் பெற்றுக்கொண்ட Z புள்ளி ஒழுங்கில் ஒதுக்கப்படும்.

**விசேட அனுமதி**

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது விளையாட்டுக்கள், கலை, கலாசாரம் ஆகியவற்றில் திறமை காண்பித்தோர், கண்பார்வையற்றோர், அங்கவீனா், ஆயுதபடைகளைச் சார்ந்த ஆளணியினர், ஆசிரியர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் போன்ற விசேட வகுப்புக்களைச் சார்ந்த மாணவர்களுக்கு ஒரு சில இடங்களை ஒதுக்குவது பல நாடுகளில் பொதுவான வழக்கமாகும். ஒரு சிறு எண்ண்ணிக்கையினரே மேற்கூறிய விசேட காரணங்களுக்காக அனுமதிக்கப்படுகின்றனர். அனுமதிக்காக வேண்டப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டே விண்ணப்பிக்க வேண்டும்.

**ஆசிரியர்களின் அனுமதி**

கலை, உயிரியல், விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் மற்றும் பிரயோக விஞ்ஞானங்கள் ஆகிய கற்கைநெறிகளுக்கு ஒவ்வொரு வருடமும் பின்வரும் பிரிவினரைச் சார்ந்த ஆசிரியர்களை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் அனுமதிக்கலாம்.

(அ) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு பொதுக் கலைத் தகுதிகாண் (வெளிவாரி பரீட்சையில் (GAQ) 2010 இலும், அதன் பின்னரும் சித்தியடைந்த ஆசிரியர்கள் கலையின் கற்கைநெறியொன்றிற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவார்கள்.

(ஆ) விஞ்ஞானமாணி(வெளிவாரி) பட்டத் திட்டத்தின் முதல் பரீட்சையிலும், அதன் பின்னரும் சித்தியடைந்த ஆசிரியர்கள் உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் மற்றும் பிரயோக விஞ்ஞானங்கள் ஆகிய கற்கை நெறியொன்றிற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவார்கள்.

அனுமதிக்கு தகுதி பெறுவதற்கு, மேலே உள்ள பிரிவுகளில் ஒன்றைச் சார்ந்த ஆசிரியர் ஒருவர் பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்

1. ஆசிரியராக குறைந்தது ஐந்து வருட கால சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2. தெரிவின் போது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் /கல்விக் கல்லூரியில் மாணவராக சேர்ந்திருக்க கூடாது.

3. உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் மற்றும் பிரயோக விஞ்ஞானங்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், பல்கலைக்கழகத்தில் உள்ள கற்கை நெறியொன்றிற்கு தெரிவு செய்யப்படுவதற்கான முன்நிபந்தனையாக க.பொ.த (உ/த) பரீட்சையில் அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத் திட்டத்தின் முதல் பரீட்சையில் அதற்கான பாடங்களை அபேட்சகர் எடுத்திருக்க வேண்டும். கல்வித் திணைக்களத்தின் ஊடாக இவ்விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

**மேலதிக அனுமதி**

கலைப் பிரிவில் குறிப்பிட்ட துறைக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படாத நிலையில் பல்கலைக்கழகங்களின் வேண்டுதலுக்கு அமைவாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குறிப்பிட்ட துறைக்கு தெரிவு செய்யப்படலாம். மேலதிக அனுமதிக்கு குறிப்பிட்ட பாடத்தில் குறைந்தது (C) திறமைச்சித்திபெற வேண்டும். ஆங்கிலமெனின் (S) சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**பாடப்பிரிவுகளும் கற்கை நெறிகளும்**

இலங்கையில் 14 தேசியப் பல்கலைக்கழகங்களும் 3வளாகங்களும் 5 நிறுவனங்களும் கற்றல் நெறிகளை கற்பதற்கு மாணவர்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவு செய்கின்றது. 2014/2015 கல்வி ஆண்டிற்கு சுமார் 101 துறைகளில் 25395 மாணவர்களை அனுமதிப்பதற்கு தீர்மானி த்துள்ளது.

**விண்ணப்பப்படிவம் நிரப்பும் போது கவனிக்கவேண்டிய முக்கிய விடயங்கள்**

1.விண்ணப்பப்படிவம் இலத்திரனியல் விண்ணப்பப்படிவம் மூலமும், வழமையான சாதாரண விண்ணப்பப்படிவம் மூலமும் விண்ணப்பிக்கலாம். ஆனால் சாதாரண **விண்ணப்பப்படிவம்** மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்புவது சிறந்தது. ஏனெனில் ஏற்படக்கூடிய சில அசௌகரியங்களைத் தவிர்க்கலாம். நிழற் பிரதி ஆதாரமாகவும் அமையும்.

2.கறுப்பு மை குமிழ் முனைப் பேனாவைப் பாவித்தல் வேண்டும்.

3.BLOCK CAPITAL ஆங்கில எழுத்துக்களில் நிரப்புதல் வேண்டும்.

4.ஒரு கூட்டுக்குள் ஒரு எழுத்து மட்டுமே எழுதப்பட வேண்டும். ஒரு சொல் முடிந்ததும் ஒரு கூடு இடை வெளி விட்டு நிரப்புதல் வேண்டும்.

5. பத்திரத்தில் திருத்தும் பதார்த்தத்தை (Correction fluid) பாவித்தல் கூடாது.

6.விண்ணப்பப்படிவத்தில் தவறாது கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும்.

7.சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் தனிப்பட்ட பரீட்சாத்திகள் பாடசாலை விலகற் சான்றிதழின் மூலப்பிரதி **(Original of the School Leaving Certificate)** அல்லது மாணவர் பதிவு அறிக்கையின் மூலப்பிரதி **(Original)**,மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் கிடைக்கப் பெறும் தேர்தல் தொகுதி இடாப்பின் பிரித்தெடுப்புக்களின் **(Extracts if Electoral Register)** மூலப்பிரதி (ஆண்டு 2011,2012,2013, மற்றும் 2014) மற்றும் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்படும் உத்தியோகபூர்வ முத்திரையிடப்பட்ட கிராம சேவகரின் சான்றிதழின் மூலப்பிரதி **(Original )** இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலும் தனிப்பட்ட பரீட்சாத்திகள் 01.08.2011ல் இருந்து பாடசாலையில் சேர்ந்த, விட்டு விலகிய சரியான திகதிகள் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பெயர்கள் வேறுபடுகின்ற சந்தர்ப்பத்தில் சத்தியவோலை (Affidavit) இணைத்தல் வேண்டும்.

8.விசேட அனுமதிக்காக சில குறிப்பிட்ட பத்திரங்கள் வேண்டப்படும் சந்தர்ப்பத்தில் அவை இணைத்து விண்ணப்பப்பத்திரத்தினுள் குறிப்பிட்ட இடத்தில் வைத்து அனுப்பப்பட வேண்டும்.

9.விசேட அனுமதிக்கான விண்ணப் பப்படிவங்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலில் குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு அமைவாக குறிப்பிட்ட அதிகாரிகளினூடாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு அனுப்புதல் வேண்டும்.

10. விசேட அனுமதிக்கான கண்பார்வையற்ற, அங்கவீனர்களான பரீட்சார்த்திகள் அதற்கெனவுள்ள படிவத்தில் பத்திரிகை விளம்பரத்துக்கு அமைவாக குறிப்பிட்ட முகவரிக்கு உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் அனுப்புதல் வேண்டும்.

11.பதிவுத்தபாலில் விதந்துரைக்கப்பட்ட தபாலுறையும், அதிலுள்ள முடிவுத்திகதிக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்பி வைத்தல் வேண்டும்.

12.அனுப்பப்படுகின்ற விண்ணப்பப்படிவமும், இணைத்து அனுப்பப்பட்ட பத்திரங்களும் நிழற்பிரதிகள் (photo copy) எடுத்து வைத்தல் வேண்டும். அத்துடன் பதிவுத்தபால் பற்றுச்சீட்டும் பாதுகாப்பாக எடுத்து வைத்தல் வேண்டும்.

13. பொது அறிவுப்பரீட்சையில் 30% க்கு குறைவாக எடுத்து இருப்பின் கடந்த வருடம் இப்பாடத்திற்குப் பெற்ற புள்ளியை பயன்படுத்தலாம். அல்லது அடுத்த வருடம் இப்பாடத்தில் 30% க்கு மேல் புள்ளிகளைப் பெற்று அனுமதிக்கான தகைமைகளைப் பெறலாம்.

**14.விண்ணப்பப்படிவத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகள்**

(1)கடித முகவரி எழுதும் போது படிவத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்

(2)அனுமதிக்கான நிர்வாக மாவட்டத்தை தெரிவு செய்யும் போது பரீட்சை எழுதிய முதல் நாள் வரை குறிப்பிட்ட பாடசாலையில் குறைந்தது 3 வருடம் படித்து பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(3) பரீட்சை சுட்டெண், Z.Score சரியாக எழுதப்பட வேண்டும். அத்துடன் பரீட்சையில் தோற்றிய தடவைகளின் விபரம் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

(4)கற்கை நெறி ஒழுங்கில் மாற்றம் செய்ய விரும்பின், முடிவு திகதியில் இருந்து ஒரு மாதத்திற்கு கைநூலில் அதற்கெனவுள்ள படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.

15.விண்ணப்பப்படிவத்தின் 8ம் பிரிவினை நிரப்பும் போது; 9ஆவது பிரிவினை நிரப்பும் போது; புத்திசாலித்தனமாக அல்லது தந்திரோபாயமாக நிரப்புதல் வேண்டும்.

16.விண்ணப்பப்படிவத்தின் 10வது பிரிவான கற்கை நெறி ஒழுங்கினையும், பல்கலைக்கழக ஒழுங்கினையும், தெரிவு செய்யும் போது மிகவும் நிதானமாகவும் கூடிய கவனமும் செலுத்தி எழுதப்பட வேண்டும். இதன் வழி வந்ததாக இதேபோன்று கணனித் தரவுத் தாளிலும் துறைகள், பல்கலைக்கழக ஒழுங்குகள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

17.கலைத்துறை, வணிகவியல், உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் ஆகிய 4 பிரிவுகளுக்குரிய கற்கக் கூடிய துறைகள் 14 வது பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் 82ம் பக்கம், 83ம் பக்கம், கற்கை நெறிகளிற்கான குறியீடுகள், கற்கை நெறி, குறிப்பிட்ட கற்கை நெறியுள்ள பல்கலைக்கழகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் வழங்கப்பட்ட குறியீடுகள் 81ம் பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இவற்றை வாசித்து தெளிந்த பின்பு நிரப்புதல் வேண்டும்.

18.மேலிருந்து கீழ்நோக்கி, நிலைக்குத்தாக, கற்க விரும்பும் துறைகளின் விரும்பு அடிப்படையில் கூடு முடியும் வரை குறிப்பிட வேண்டும். 25 கூடும் நிரப்ப வேண்டும்.

19.இடமிருந்து வலம் நோக்கி விரும்பமான குறிப்பிட்ட துறையுள்ள பல்கலைக்கழகங்கள் விரும்பு அடிப்படையில் குறிப்பிட வேண்டும்.

20.விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதி பூர்த்தி செய்து சரியென உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே மட்டும் மூலப் பிரதி நிரப்பப்படல் வேண்டும்.

21. பின்வரும் விலாசத்துக்கு விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும்.

**Assistant Secretary-University Admissions, University Grants Commission,20Ward place, Colombo 07**

22.சில துறைகள் சில பல்கலைக்கழகங்களில் மட்டும் உண்டு. ஆகவே இப் பல்கலைக்கழகங்கள் நடத்துகின்ற உளச்சார்பு பரீட்சையில் தவறாது கலந்து கொள்ள வேண்டும். இது கைநூலில் அல்லது பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்படும்.

இ.ரட்ணம்
தலைவர்,
சந்தைப்படுத்தல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய வெங்காய தாய்க்குமிழ்கள் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு

## முதற்கட்ட நடவடிக்கை மன்னார் தீவின் தரவின்கோட்டையில் நடைபெற்றது

**(மன்னார்)**

**மன்னார் மாவட்டத்தில் US AID நிறுவனத்தின் Solid திட்டத்தின் அனுசரணையின் கீழ், விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆலோசனையுடன் சாதகமற்ற காலங்களில் பெரிய வெங்காயச் செய்கையினை ஊக்குவிக்கும் நோக்கோடு, உண்மை விதை உற்பத்திக்காக பெரிய வெங்காய தாய்க்குமிழ்களை விவசாயகளிடமிருந்து கொள்வனவு செய்யும் நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி விவசாய திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரோகான் விஜயகோன் பங்கேற்றலுடன் மன்னார் தீவில் தரவன்கோட்டை எனும் கிராமத்தில் முதற்கட்ட நிகழ்வு நடைபெற்றது என மன்னார் மாவட்ட பிரதிமாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது, சாதகமற்ற காலங்களில் பெரியவெங்காயச் செய்கையினை ஊக்குவிக்கும் நோக்கோடு சிலாவத்துறை,தேக்கம்,உயிலங்குளம் தவிர்ந்த அனைத்து விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலுமிருந்து 323 பயனாளிகள் தெரிவுசெய்யப் பட்டிருந்தனர்.

ஒருபயனாளிக்கு 1/4 ஏக்கர் நிலப் பரப்பிற்கான விதைகள் மற்றும் நாற்று மேடையினை பாதுகாப்பதற்கானபொலித்தீன் போன்றவை கடந்த 23.11.2014அல் விநியோகிக் கப்பட்டன.

நாற்று மேடைதயாரித்தல்,பராமரிப்பு மற்றும் நாற்று நடுகை போன்ற பயிரியல் நடவடிக்கைகளும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குமாகப் யனாளிகளுக்கு 20 இற்கும் மேற்பட்ட களப்பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. விவசாயப் போதனாசிரியர்கள், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தொடர் கள விஜயங்களை மேற்கொண்டு ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்.

மேலும் நாட்டின் பலபாகங்களிலும் பெய்த கடும் மழையினால் பெரியவெங்காயச் செய்கைபெரிதும் பாதிப்படைந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் வெற்றிகரமாக பயிர் செய்து விவசாயிகள் அறுவடை மேற்கொண்டுள்ளனர்.

இவ் அறுவடை செய்ததும் புள்ளி தெரிவு எனும் இனமானது தாய்க குமிழ் உற்பத்திக்காக விவசாயத் திணைக்களம் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து வருகின்றது. இதன் ஒரு கட்டமாக தாய்க் குமிழ்களை கொள்வனவு செய்யும் வைபவம் விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாய கத்தின் பங்கேற்லுவுடன் நிகழ் வானது மன்னார்தீவில் தரவன் கோட்டை எனும் கிராமத்தில் நடைபெற்றது.





இந் நிகழ்வில் விவசாயிகள் சம்பிரதாயபூர்வமாக தாய்க்குமிழ் உற்பத்திக்காக பெரிய வெங்காய குமிழ்களை விவசாய திணைக் களப் பணிப்பாளர் நாயகத்திடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் விவசாயிகளுக் கான காசோலைகளும் வழங்க ப்பட்டன. இந்நிகழ் வில் USAID நிறுவனத்தின் குழுத் தலைவர் டேவிட் டையர் உயரதிகாரிகள், விவசாயத் திணைக்களத்தின் உயரதிகாரிகளும் பங்கு பற்றியிருந்தனர். (2)

# கிளி.பொதுச்சந்தை வர்த்தகர்கள் மாபெரும் கண்டனப் போராட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்களின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முச்சக்கரவண்டி உரிமையாளர்,தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் மற்றும் பேருந்து நிலைய வர்த்தகர்கள் ஆகியோர் இணைந்து மாபெரும் கண்டனப் போராட்டம் ஒன்றை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடத்தவுள்ளனர்.

இப்போராட்டம் கிளிநொச்சி பொதுச்சந்தை முன்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் முடிவு பெறவுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

புங்குடுதீவில் பாடசாலை மாணவி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்க வலியுறுத்தியும், குற்றவாளிகள் சார்பாக எந்தவொரு சட்டத்தரணியும் ஆஜராகக் கூடாது என்பதையும் வலியுறுத்தியும் மேற்படி கண்டனப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இக்கண்டனப் போராட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் பொது மக்கள், புத்திஜீவிகள், பாடசாலை சமூகத்தினர், பொதுஅமைப்புக்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல்வாதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-271)






**புதுக்குடியிருப்பு பிரதேச உடையார்கட்டு வடக்கு கலைமகள் முன்பள்ளியில் இவ்வாண்டிற்கான விளையாட்டு விழாவும்,திருக்குறள் போட்டியும் அண்மையில் நடைபெற்ற போது...**

# மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கடற்றொழில் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலக அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த நான்கு மீனவர்களையும் தொடர்ந்து 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் முகம்மது சம்சுதீன் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, இதன்படி குறித்த நான்கு மீனவர்களும் கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே, குறித்த நான்கு மீனவர்களுக்கும் பிணை வழங்குமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கேட்டுக்கொண்டார். எனினும், குறித்த மீனவர்களுக்கு பிணை வழங்குவதற்கு பொலிஸார் மறுப்பு தெரிவித்தனர். அதனையடுத்து, அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரைவிளக்கமறியளில் வைக்கும் படி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார். முல்லைத்தீவு நந்திக் கடலில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வந்த மீனவர்களை பிடிப்பதற்காக குறித்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கடந்த புதன்கிழமைமாலை நந்திக்கடலில்ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது குறித்த அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினரை சுற்றி வளைத்த நான்கு மீனவர்களும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவச் சங்க பிரதிநிதிகளிடம் தரக்குறைவான வார்த்தைகளால் பேசியதுடன், வாக்குவாதங்க ளிலும் ஈடுபட்டுள்ளனர். இது குறித்து கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் முள்ளியவளை பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, அங்குசென்ற பொலிஸார் குறித்த நான்கு [illegible] கத்தின் பேரில் கை[illegible] (2)

# மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம்

இவ்வருடத்துக்கான வரவு-செலவு திட்டத்தின் கீழ், 180 நாட்கள் கடமையாற்றிய மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளர்கள் 11 பேருக்கான நிரந்தர நியமனங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் நியமனம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது மன்னார் நகர சபையில் 180 நாட்கள் கடமை புரிந்தவர்களை உள்வாங்கும் அடிப்படையில் 11 சுத்திகரிப்பு பணியாளர்களுக்கு இவ்வாறு நிரந்தர நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



குறித்த நிகழ்வில்மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.துரம், மன்னார் நகர சபையின் செயலாளர் லெனாட்பிரிட்டோ, நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ்ஜேசுதாஸ் மற்றும் நகர சபை உறுப்பினர்களான இரட்ணசிங்கம் குமரேஸ், மெரினஸ் பெரேரா, செல்வக்குமரன்(டிலான்) ஆகியோர் இணைந்து குறித்த சுத்திகரிப்பு பணியாளர்கள் 11 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதிக்கு 19ஆவது திருத்தச் சட்டம் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கோ பூச்சியம்

"சட்டம்என்பதுஅனைவருக்கும் ஒன்றே என்பதனால் ஒவ்வொருவருக்குமான மதிப்பீடுகளும்ஒரே மாதிரியான அடிப்படையிலேயேதீர்மானிக்கப்பட்டு அவரவருக்கு சேரவேண்டியவை அதன்படியே அவரவருக்கு நடக்கும் என்ற நம்பிக்கை எப்போதுமே உங்களுக்கு இருக்குமானால் 60 வருடங்களுக்கு முன்னர் ஒரு அடிப்படைவாதி (Radical) ஆகவும் 30 வருடங்களுக்கு முன்னர் சுயாதீனவாதியாகவும் (Liberal) தற்போது ஓர் இனவாதிய கவுமே (Racist) நீங்கள் முத்திரை குத்தப்பட்டிருப்பீர்கள்.'' இதைக்கூறியது அமெரிக்க எழுத்தாசிரியரும் அரசியல் தத்துவஞானியும் ஒரு பொருளாதார விற்ன்னருமான தொமஸ் சோவெல் எனும் ஓர் அமெரிக்கரே யாவார். இலங்கை அரசியலமைப்பிற்கான 19 ஆவது திருத்தச் சட்டம் 2015 ஏப்ரல் 28 ஆம் திகதியன்று இலங்கை பாராளுமன்றத்தில் அதன் உறுப்பினர்களால் வெற்றிகரமான முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. உறுப்பினர்கள் 225 பேரைக் கொண்ட பாராளுமன்றத்தில் அதன் 212 அங்கத்தவர் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தது ஒரு வரலாற்றுச் சாதனையேயாகும். வழமையாக அரசதரப்பும் எதிர்த்தரப்பும் தமது வாக்குகளை எதிரெதிராகப் பிரயோகிப்பதே வழக்கம்.


இலங்கையின் தற்போதைய அரசாங்கம் ஒரு சிறு பான்மை அரசாங்கமாக இருப் பினும் இந்த 19 ஆவது திருத்தம் பெரும் ஆதரவு டனேயே ஏற்றுக் கொள் ளப்பட்டிருக்கிறது. முன் னாள் ஜனாதிபதிக்கு நெரு க்கமாக இருந்த ஒவ்வொரு வருமே இதனை ஆதரித்து வாக்களித்திருந்தனர். இந்தத் திருத்தமானது ஜனா திபதிக்கான நிறைவேற்று அதிகாரங்களை அல்லது மேலதிக அதிகாரங்களை அகற்றுவதற்காகவே கொண் டுவரப்பட்டதாக பரவலாகவே அறியப்பட்டதாயி ருந்தபோதிலும் அதில் வேறு அம்சங்களும் உள்ளன.


உள்ளூர் அரசியல் தலைவர்களைப் பொறுத்தமட்டில் இலங்கையில் ஜனநாய கம் மீளவும் நிலை நிறுத் தப்பட்டது. ஆனால் நிச்சயம் அது உண்மையே அல்ல. ஜனநாயகமென்பது பரந்து பட்ட பல அம்சங்களையும் தன்ன கத்தே கொண் டுள்ள தால் 19 ஆவது திருத்தத் தினை வெறுமனே நிறைவேற்றுவதன்மூலம் அது நிறைவு பெற்றதாகி விடாது. நாட்டின் ஒரு பிரிவு மக்களுக்கே என்றில்லாமல் குடிமக்கள் அனைவருக்கும் ஜனநாயகம் பொதுவானதேயாகும். நாட்டின் இனப்பிரச்சினையானது அர்த்தமுள்ள விதத்தில் தீர்த்து வைக்கப்படாதவரையில் ஜனநாயகம் நிலவுமென்பது முடியாத ஒன்றேயாகும். இலங்கையில் மீள் இணக்கப்பாடு ஏற்படுத்தப்படவேண்டிய அவசியம் பற்றிய வலியுறுத்தல் சர்வதேசத்திடமிருந்து எப்போதாவது எழுகின்ற சந்தர்ப்பங்களில் இலங்கையின் 30 வருடகாலப் போர் மற்றும் பயங்கரவாதம் பற்றிய ஒரேவிதமான கதைகளே ஒரு பதிலாக தொடர்ந்துமிருந்துவருகின்றது. மே 2009 இல் போர் முடிவுக்கு வந்து விட்டபின்னரும் இனப்பிரச்சினை விடயத்தில் என்ன நடவடிக்கை இது வரை எடுக்கப்பட்டிருக்கிறது? வழமை போல் பேச்சுக்கள் இடம்பெறுவது போன்ற வழமையான காட்சிப்படுத்தல்களே தொடர்கின்றன. இதற்கு முன்னர் இருந்த அரசாங்கத்தில் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதியொருவர் இருந்தும் அவர் தனக்குச் சாதகமான அனைத்தையும் செய்வதற்கென்றே அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொண்டார். அவர்களுக்குப் பாராளுமன்றத்திலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருந்தது. ஆனாலும் இனப்பிரச்சினை தீர்வு பற்றிய விடயம் முன்வருகின்றபோதெல்லாம் சர்வதேச சமூகத்திற்கு ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்த வாக்குறுதிகளனைத்தும் மறைந்து பாராளுமன்ற தெரிவுக்குழு என்ற பேச்சே மாறாத ஒரே பதிலாக இருந்து வந்தது. இந்தப் பாராளுமன்ற தெரிவுக் குழு இன்று எங்கே போய்விட்டது? இது அவர்கள் தமது அடிப்படைக் கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மேற்கொள்ளும் இழுத்தடிப்பு வேலையே என்பது வெளிப்படை. சிங்கள மயப்படுத்தல், பெளத்த மயப்படுத்தல், இராணுவ மயப்படுத்தல் போன்ற விடயங்களை செயற்படுத்துவதுடன் வடக்கிலும் கிழக்கிலும் நில அபகரிப்புக்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்து கொள்ளும் வரையிலான இழுத்தடிப்புக்களேயாகும். ஆறுவருடங்கள் அவர்கள் அதிகாரத்தில் இருந்துங்கூட உண்மையான மீள் இணக்கப்பாட்டிற்கென எதனையுமே செய்துவிடவில்லை. போர் முடிந்ததும் அதிகாரப் பகிர்வு (Devolution) என்பது அபிவிருத்தியே (Development) என்றாகிவிட்டது.





**தென்பகுதிக்கு 19 ஆவது திருத்தம் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கோ பூச்சியம் எனும் தலைப்பில் சண்டே லீடர் பத்திரிகையில் எஸ்.வி. கிருபாகரன் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**







**தேசிய அரசு**

தற்போது சிறுபான்மை அரசு ஒன்றுடன் கூடிய புதிய ஜனாதிபதியொருவரே உள்ளார். ஆனாலும் இந்த தேசிய அரசானது ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளையும் சேர்ந்த அமைச்சர்களையும்உள்ளடக்கியதாக வேயுள்ளது. குழப்பத்தன்மையான கூத்துக்கள், போலித்தனங்கள் ஒன்றிணைந்த விதமாக அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஆதரவுடனேயே 19ஆவது திருத்தம் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இலங்கையில் நிகழ்ந்த இந்த வித அசாதாரண சாதனையை புத்தி சாதுரியமிக்க மக்கள் எப்போதும் பகுப்பாய்வு செய்தே பார்ப்பர். இதிலுள்ள நான்கு காரணிகளை நாம் கருத்திற் கொள்ளலாம்.

முதலாவதாக புதிய ஜனாதிபதி வடக்கு, கிழக்கு மற்றும் மலை நாட்டைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவுடனேயே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அதாவது இந்த ஜனாதிபதி தேர்தலை தமிழர்கள் பகிஷ்கரித்திருந்தால் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியே 3ஆவது தடவையும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார்.

இரண்டாவதாக இது ஓர் சிறுபான்மை அரசாக இருக்கிறபோதும் தேசிய அரசுமாகும்.

மூன்றாவதாக எதிர்க்கட்சியை சேர்ந்த அனைவரதும் ஒருமித்த உண்மை ஆதரவு அதற்கில்லை.

நான்காவதாக பதவியிலிருந்து வெளியேறும் முன்னாள் ஜனாதிபதி தனது தோல்விக்கு தமிழ் வாக்காளர்களே காரணமென்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலே தனது தினசரி பிரசாரத்தை தேர்தலை அடுத்தே ஆரம்பித்து உத்வேகத்துடன் முன்னெடுத்து வருகிறார்.

இவ்விதமான ஓர் காட்சிப் புலப் பின்னணியில் இந்த 19 ஆவது திருத்தம் எவ்வாறு இவ்வித பாரிய பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற் றப்ப ட்டது. சாதகமாக வாக்களிப் பதற்கு எதிர்க்கட்சிக்கு எவ்வாறு நம்பிக்கையூட்டப்பட்டது? நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இலங்கையர் ஒருவரை (நண்பர்) நான் சந்தித்தபோது ஒருகட்டத் தில் இலங்கை அரசியல்பற்றி பேச ஆரம்பித்தோம். அதன்போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களனைவரையும் 19ஆவது திருத்தத்திற்கு சாதகமாக வாக்களிப்பதற்கு நம்பிக்கையூட்ட பயன்படுத்திய பிரசாரக் கருவிகள் சில பற்றி அறிந்து கொண் ட போது அதிர்ச்சியடைந்தேன்.

என்ன விதமான தந்திரமிக்க தேசாபிமானிகள் அவர்கள். உண்மையில் முகமூடியணிந்த போலி மனிதர்கள் அவர்களே தான்!

**இழுத்தடிப்பிற்குள்ளாகும் தமிழர்களது உரிமைகள்**

தமிழர்களுக்கான எந்தவித அரசியல் தீர்வினையும் இழுத்தடிப்பிற்கு வசதியான மிகச் சிறந்த தீர்ப்பே இதுவாகும் என்றே பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலருக்குக் கூறப்பட்டுள்ளது. இனப்பிரச்சினை கூடியளவு விரைவிலேயே தீர்க்கப்படவேண்டுமென்ற அழுத்தம் இந்தியா மற்றும் சர்வதேச சமூகத்திடமிருந்து தொடர்ந்துகொண்டு தானுள்ளது. ஆதலால் இந்த 19ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதைத் தவிர வேறுவழியெதுவுமில்லை.

19ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக பிரசாரம் செய்தவர்க ளுள் சிலர் அப்பாவிகளாயிருந் தனர். ஆனாலும் பாராளுமன்ற உறுப்பினர்களில் அநேகமானோர் விசேடமாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இலங்கைத் தமிழர்களுக்கான எந்த அரசியல் தீர்வுகளும் இழுத்தடிப் பிற்குள்ளாக வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காகவே அதற்கு ஆதரவளிக்கச் சம்மதித்தனர்.

*தொடரும்...*

தமிழில்:-யோகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி மோசடி பொலிஸ் பிரிவுக்கு எதிராக மகிந்த மனுத்தாக்கல்

(கொழும்பு)

**நிதி மோசடி பொலிஸ் பிரிவுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இந்த அடிப்படை உரிமை மீறல் மனு இன்னும் சில நாட்களுக்குள் தாக்கல் செய்யப்படவுள்ளது.

ஒருவருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கத்தில் பல்வேறு விடயங்கள் குறித்து நிதி மோசடி பொலிஸ் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருவதால் இதைத் தடுக்க இவ்வாறு அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாக சிரேஷ்ட அரசியல்வாதியொருவர் தெரிவித்துள்ளார்.

டுபாயிலுள்ள பிரதான ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் இலங்கையின் பிரபல அரசியல்வாதியொருவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அநாமதேய முறைப்பாட்டின் படி நிதி மோசடி குறித்த பொலிஸ் பிரிவு எதுவித விசாரணைகளுமின்றி நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## மதுஅருந்தும் இளைஞர்களை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்திற்குச் செல்லும் வீதியில் இளைஞர்கள் தினமும் குழுக்களாக வந்து மது அருந்துவதாக அப் பகுதிப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இளைஞர்கள் இவ்வாறு மது அருந்து வதனால் அப்பகுதியூடாக செல்வோர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப் படுகிறது. குறிப்பாக பெண்கள் சிறுவர்கள், மாணவர்கள் அவ்வீதியூடாகச் செல்லும்போது அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே பொதுமக்களின் நலன்கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3)

## உள்ளூராட்சிமன்ற தேர்தல் ஒரே நாளில் நடத்தப்படும்

உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்துக்கும் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்கு பின்னர் ஒரே நாளில் தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக புத்தசாசன பொது நிர்வாக மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் கருஜயசூரிய தெரிவித்தார். மொத்தமுள்ள 335 உள்ளூராட்சி சபைகளில் தம்புள்ள, பண்டாரவளை, அக்கரைப்பற்று மாநகர சபைகள் உட்பட 234 உள்ளூராட்சி சபைகள் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் கலைக்கப்பட்டது. இந்த உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைந்தன. அதன் பின்னர் இச்சபைகளுக்கு மே 15 ஆம் திகதி வரையான ஒன்றரை மாதகால நீடிப்பு வழங்கப்பட்டது. இதன் படி கடந்த வெள்ளிக்கிழமை இச்சபைகள் கலைக்கப்பட்டன.

ஏனைய உள்ளூராட்சி சபைகளில் சிலவற்றின் காலம் எதிர்வரும் ஜூலை மாதமும் சிலவற்றின் பதவிக்காலம் செப்டெம்பர் மாதமும் முடிவடைகின்றன. இவைகள் அனைத்தும் குறிப்பிட்ட காலத்தில் கலைக்கப்படும். செப்டெம்பர் மாதத்துக்குப் பின்னர் நாட்டிலுள்ள 335 உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒரேநாளில் தேர்தல் நடத்தப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 50 | 40 | 40 |
| தக்காளி | 80 | 100 | 100 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 | 40 |
| கோவா | 80 | 60 | 80 | 50 | 60 |
| கரட் | 100 | 100 | 140 | 120-180 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 50 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 40 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 120 | 50-100 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 120 | 140 | 130 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 160 | 50 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | — | 70 |
| பயற்றங்காய் | 200 | 120 | 100 | 140-180 | 220 |
| லீக்ஸ் | 180 | 130 | 200 | 140 | 180 |
| பீற்றூட் | 60 | 60 | 100 | 70 | 50 |
| கறிமிளகாய் | 80 | 70 | 100 | 50 | 70 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 400 | 300-400 | 400 |
| போஞ்சி | 200 | 150 | 160 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 40 | — | 60 |
| கீரை – 1 பிடி | 30 | 40 | 40 | 30-50 | 30 |
| தேசிக்காய் | 160 | 140 | 160 | 200 | 35 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 140 | — | 140 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 140 | 60 | 80 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 10 | 25 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 374


இலக்கியா நகுலன்




ருக்சி சிவகுமார்





தாரணி பரமசிவம்




பிரவின் தாஸ்




ராஜா தனு




தர்சன் கவிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







**வா**ன் வழியே ஒரு தேவதை பறந்து சென்றுகொண்டு இருந்தாள்.

அப்போது, கீழே இருந்து மக்களின் அவலக் குரல் அவள் காதுகளைத் தீண்டியது.

பார்த்தாள். சிதையில் கிடத்தப்பட்டு இருந்த ஓர் உடலைச் சூழ்ந்து கொண்டு, மக்கள் கண்ணீர் விட்டுக் கதறுவது தெரிந்தது.

உடனே, தேவதை மனிதப் பெண்போல் உருவம்கொண்டு, மக்கள் கூட்டத்தோடு தானும் ஒருத்தியாய்க் கலந்தாள்.

இறந்துபோனவன் அந்த மக்களின் ஒப்பற்ற தலைவன். நாட்டிலே கொடுங்கோல் ஆட்சி புரிந்து, மக்களைத் துன்புறுத்திய பிங்களன் என்ற அரக்கனை எதிர்த்த மக்கள் போராளி.

தன்னலமற்ற அந்தத் தலைவனை அமைதிப் பேச்சுக்கு வருமாறு அழைத்து இருக்கிறான் பிங்களன்.

அதை நம்பிச் சென்றான் அந்தத் தலைவன். பாம்பினும் கொடியவனான பிங்களன், வஞ்சகமாய் உணவிலே நஞ்சைக் கலந்து தலைவனைக் கொன்று விட்டான்.

இந்தச் செய்திகளை மக்களிடம் உரையாடித் தெரிந்துகொண்டாள் தேவதை.

பிங்கள அரக்கன் அந்த நாட்டு மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளைக் கேட்டு அறிந்த தேவதையின் விழிகளும் கண்ணீர் சொரிந்தன.

தலைவனின் உடல் விறகுகளால் மூடப்பட்டு எரியூட்டப்பட்டது. மக்கள் கொஞ்சம் கொஞ்சமாய்க் கலைந்தார்கள்.

இறுதியில் தேவதை மட்டுமே எஞ்சி நின்றாள். சிதையின் நெருப்பு அணைந்து அடங்கியது. எஞ்சி இருந்த சாம்பல் குவியலின் நடுவே, அந்தத் தலைவனின் இதயம் மட்டும் எரியாமல் இருப்பதைத் தேவதை கண்ணுற்றாள். பெருவியப்புக்கொண்ட தேவதை, நெருங்கிச் சென்று அந்த இதயத்தைக் கையில் எடுத்தாள். அடுத்த நொடியே, அந்த இதயம் பொன் நிறமாக மாறியது. "லப்டப்... லப்டப்' என்று துடிக்கவும் செய்தது.

தேவதை எத்தனையோ விந்தைகளைக் கண்டவள். கணக்கில் அடங்கா விந்தைகளை அவளே நிகழ்த்திக்காட்டியவள். ஆனால், இப்படி ஒரு விந்தையை அவள் கண்டது இல்லை. தன் மக்களுக்காக இறந்த பின்னும் துடித்துக் கொண்டு இருக்கும் தலைவனின் ஒப்பற்ற இதயத்தை எடுத்துக் கொண்டாள் தேவதை. தன் சிறகுகளை விரித்து விண்ணிலே பறந்தாள்.

அவள் மனமோ கனத்துக்கிடந்தது. தேவதை நினைத்தால், அந்த அரக்கனை சில நிமிடங்களில் கொன்றுவிட முடியும். ஆனால், அதில் அவளுக்கு விருப்பம் இல்லை.

சில நாட்களுக்குப் பிறகு...

அன்று பிங்கள அரக்கனின் பிறந்த நாள். கப்பம் கட்டும் சிற்றரசர்களும், நட்புப் பாராட்டும் பேரரசுகளின் தூதுவர்களும் தலைநகரிலே குழுமி இருந்தார்கள்.

அரக்கனைப் போற்றிப் புகழ்ந்து பரிசுகளை அளித்தார்கள். நம் தேவதையும் கையிலே ஓர் அழகிய தந்தப் பேழையுடன் பெண் புலவர் போல் அரண்மனைக்கு வந்தாள். பிங்கள அரக்கனைச் சந்தித்தாள்.

"பார் போற்றும் வேந்தே, யாம் விந்தியப் பேரரசின் தூதுவராய் வந்துள்ளோம். எம் பேரரசர் உம்மை வாழ்த்துகிறார். குறிப்பாக, கலகக்காரர்களின் தலைவனைப் பேச்சுக்கு அழைத்து, நஞ்சு கொடுத்துக் கொன்ற உம் அறிவையும் திறமையையும் அவர் மெச்சிப் பாராட்டுகிறார். உரிமை கேட்கும் மக்களை அடக்கி நசுக்குவதுதான் எம் நாட்டின் கொள்கையும். அந்த வகையிலே எம் பேரரசர் உம்மைப் பாராட்டி மகிழ்கிறார்." என்றாள்.

தேவதையின் புகழ்ச்சியைக் கேட்டு அரக்கன் புன்னகையோடு தலையசைத்துக் கொண்டான். தேவதை மேலும் தொடர்ந்தாள்.

"அரசே, தாங்கள் ஒரு விந்தையான உடல் அமைப்பைக் கொண்டவர் என்பதை நாடு அறியும்.

தங்களுக்கு இதயம் என்ற உறுப்பே கிடையாது. இத்தகைய தனித்தன்மை உள்ள மந்திர ஆற்றல் மிக்க உம்மை, அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மக்கள், "இதயம் இல்லாதவன்' என்று தூற்றுவதைக் கேள்விப்பட்டு, எம் பேரரசர் பெரிதும் மனம் வருந்தினார்.

இதயம் இல்லை என்ற குற்றச்சாட்டை நீக்கும் வண்ணமாகப் பொன்னால் ஆன ஓர் இதயத்தை உமக்குப் பரிசாகக் கொடுத்து அனுப்பி உள்ளார்.

இந்தப் பொன் இதயத்தைத் தாங்கள் அணிந்துகொள்ள வேண்டும். இது தங்கள் நட்பை விரும்பும் விந்தியப் பேரரசரின் அன்புப் பரிசு."

இவ்வாறு கூறிய தேவதை, கையில் இருந்த தந்தப் பேழையைத் திறந்தாள்.

துடித்துக்கொண்டு இருந்த தலைவனின் இதயத்தை வெளியே எடுத்தாள்.

அதன் கண்கூசும் ஒளியையும் அழகையும் கண்டு அவையோர் திகைத்தார்கள். பிங்கள அரக்கன் அகமகிழ்ந் தான்.

ஆவலுடன் அதை வாங்கி, ஒரு விருதுபோல் தன் இடது மார்பிலே பொருத்திக்கொண்டான்.

அடுத்த நொடியே ஒரு பெரிய மாற்றம் ஏற்படுவதை உணர்ந்தான்.

ஆம். தலைவனின் ஒப்பற்ற இதயம் கொடுங்கோலனை மாற்றியது.

அந்தத் தலைவனின் குணம் அத்தனையும் பிங்களனுக்கு வந்தது. அவன் நல்மனம் கொண்டவனாய் மாறினான்.

தேவதை மனநிறைவுடன் தன் வான் வழிப் பயணத்தைத் தொடர்ந்தாள்.

ΩΩΩΩΩΩΩΩΩΩΩ




- 1565 - ஓட்டோமான் படைகள் மால்ட்டாவை அடைந்தன. மால்ட்டாவின் ஆக்கிரமிப்பு ஆரம்பமாகியது.
- 1652 - வட அமெரிக்காவிலேயே முதன் முதலில் அடிமைத் தொழிலை இல்லாதொழிக்கும் சட்டத்தை ரோட் தீவு கொணர்ந்தது.
- 1765 - கனடாவின் மொன்ட்றியால் நகரத்தின் பெரும் பகுதி தீயினால் அழிந்தது.
- 1803 - ஐக்கிய இராச்சியம் பிரான்ஸ் மீது போரை அறிவித்தது.
- 1804 - முதலாம் நெப்போலியனை பிரெஞ்சு மன்னனாக செனட் தெரிவு செய்தது.
- 1869 - ஏசோ குடியரசு கலைக்கப்பட்டு ஜப்பானுடன் இணைக்கப்பட்டது.
- 1896 - கோடின்கா துயரம்: ரஷ்ய மன்னன் இரண்டாம் நிக்கலாசின் முடிசூடும் நிகழ்வுக் கொண்டாட்டத்தின்போது "கோடின்கா" என்ற இடத்தில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 1,389 பேர் இறந்தனர்.
- 1897 - ஐரிய எழுத்தாளர் பிராம் ஸ்டோக்கர் எழுதிய டிராக்குலா புதினம் வெளியிடப்பட்டது.
- 1900 - தொங்கா ஐக்கிய இராச்சியத்தின் பகுதியாக்கப்பட்டது.
- 1910 - ஹேலியின் வால்வெள்ளியின் வாலினூடாக பூமி சென்றது.
- 1944 - கிரிமிய தார்த்தார்கள் சோவியத் அரசினால் வெளியேற்றப்பட்டனர்.
- 1956 - உலகின் 4 ஆவது பெரிய மலையான லகோத்ஸே மலையின் உச்சியை முதன் முதலில் சுவிட்சர்லாந்து மலையேறிகள் எட்டினர்.
- 1969 - அப்பல்லோ 10 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1974 - சிரிக்கும் புத்தர் என்ற பெயரிடப்பட்ட திட்டத்தில் இந்தியா தனது முதலாவது அணுகுண்டை வெற்றிகரமாக சோதித்தது.
- 1990 - பிரான்சில் TGV தொடருந்து உலகின் அதி உயர் வேகத்தில் (515.3கிமீ/மணி) சென்றது.
- 1991 - ஹெலன் ஷார்மன் விண்வெளிக்குச் சென்ற முதலாவது பிரித்தானியர் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1991 - வடக்கு சோமாலியா சோமாலிலாந்து என்ற பெயரில் மீதமான சோமாலியாவில் இருந்து விடுதலையை அறிவித்தது. ஆனாலும் அனைத்துலகம் இதனை அங்கீகரிக்கவில்லை.
- 2006 - நேபாளம் மதசார்பற்ற நாடாகவும் அதன் மன்னர் ஒரு சம்பிரதாய மன்னராகவே இருப்பாரெனவும் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேறியது.
- 2009 - ஈழப்போர் முடிவுக்கு வந்ததாக இலங்கை அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது. பல்லாயிரக்கணக்கான பூர்வகுடி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட நாள்.


**பிறப்புக்கள்**

- 1048 - ஒமார் கையாம், பார்சியக் கவிஞர், கணிதவியலாளர் (இ. 1131)
- 1908 - இயான் பிளெமிங், ஆங்கில எழுத்தாளர் (இ. 1964)
- 1920 - திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் (இ. 2005)
- 1913 - நீலம் சஞ்சீவ ரெட்டி, இந்தியாவின் 5 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1996)
- 1933 - தேவகவுடா, இந்தியாவின் 11 ஆவது பிரதமர்
- 1939 - பீட்டர் குருன்பெர்க், ஜேர்மனிய இயற்பியலாளர்

**சிறப்பு நாள்**

- அனைத்துலக அருங்காட்சியக தினம்
- போர்க்கால இறுதி தினம்

**போர்க்கால இறுதி தினம்**




போர்க் கால இறுதி நாள் (மே 18) என்பது 2009 ஜனவரி முதல் மே வரையிலான ஐந்து மாதங்களில் இலங்கைத் தமிழினத்திற்கு எதிராக நடைபெற்ற போரின் கடைசி நாள் ஆகும்.

இப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகநாடுகளின் கவனத்தை ஈர்த்து போர்க் குற்றம் புரிந்தவர்களுக்கு உரிய தண்டனையை வலியுறுத்தும் விதத்தில் உலகெங்கும் உள்ள தமிழர்களால் மே 18 போர்க்குற்ற நாளாக, இன அழிப்பிற்கெதிரான நாளாக, கரி நாளாக இந்நாள் அடையாளப்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலையி

## தீராத் துயரின் ஆறாம் ஆண்டு

கூடாரங்கள் மேவிய திசை ஒன்றில்
அவலத்தின் சுருக்கங்களை முகத்தில் பொருத்தி
பிடி மண்ணுமற்றலையும்
என் உயிர்ப்பிண்டம் பற்றிய கதையாடல்களை
யாரோ சொல்லியிருப்பர் அல்லது சொல்லுவர்

குருதியோடிய கூந்தலில் வீழ்ந்தொட்டின இலையான்கள்
மண்ணுண்டு கிடந்தது கிழித்தெடுத்த முலைகள்
கருகி யோனி குகை பிளந்து உளுத்திருந்தது எறும்படுக்க
பார்த்தேன்

எரிகணை பட்டுத் தெறிக்க, காயம்பட்ட
இரண்டரை வயதுக் குழந்தையின் கைகளை
மயக்க மருந்தின்றி அறுக்கின்ற மருத்துவன்
இக்கணம் கடவுள்
நீரற்ற விழிகளுடன் அலறும் தாய் ஒரு பிசாசு

பிணக்குவியலில் தடுக்கி விழுந்தெழுந்து
இறுகிய விழிகளை உன் பக்கம் திருப்புகிறேன்
கழுத்திலிருந்து குருதி வழிய வருகிறாய் நீ
நிமிர்ந்த உன் நெஞ்சு உனை அடையாளப்படுத்திய தெனக்கு
தலை கழன்று முண்டமாய் நீ ஆனபின்னும்

இருண்ட காலத்திலும் பாடல் இசைக்குமா?
ஆம், இசைக்கும், இருண்ட காலத்தைப் பற்றிய பாடல்.

அகதி முகாமாயினும் புலம் பெயர் உலகாயினும் எங்கிருந்து படை க்கப்பட்டாலும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் பின் ஈழக்கவிதைகள் சிதைந்த உடலினூடாக வதைக்கப்பட்ட மனதின் எதிரொலியாகவே இருக்கின்றன. எண்பதுகளில் துவங்கி இன்றளவும் போர் சார்ந்த துயர நிலையை இவை அடிச்சரடாகக் கொண்டுள்ளன என்பது தெளிவு. ஏன் மீண்டும் மீண்டும் துயரும் வன்முறையும் ஈழக் கவிதைகளின் களமாகின்றன என்பதே ஈழக் கவிதைகள் எதிர்கொள்ளும் விமர்சனமாகும். இனப்படுகொலைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிற சமூகங்களின் படைப்புகளும் இப்படித் தான் இருக்கின்றனவா?

வதைபடும் உடலின் மூலம் வன்முறையையும் மீளாப்பெருந்துயரையும் முன்னிறுத்தும் இக்கவிதைகளில் வெளிப்படும் அனுபவம் ஆங்கிலத்தில் trauma எனப்படுகிறது. தமிழில் அதற்கு இணையான ஒரு சொல்லைத் தேடுவதிலிருந்து இக்கட்டுரை துவங்குகிறது. கிரேக்கச் சொல்லான trauma உடலின் பெருங்காயத்தைத்தான் முதலில் குறித்தது. பின்னர் உடலின் ஆறாத வடு, மனதின் காயம் அல்லது சொற்களுக்குள் அடங்காத வடுவின் குறியீடாக அது அமைந்தது. Trauma என்ற சொல்லுக்கு மனவடு என்ற சொல்லைத் தற்போது நான் பயன்படுத்தினாலும் இச்சொல் 'traumatized bodies' என்பதை எப்படி உணர்த்தும் என்ற கேள்வி எழுகிறது. இச்சொல்லின் போதாமையை உணர்ந்தே இதைப் பயன்படுத்துகிறேன்.

பிராய்டு 'மனவடு' என்ற சொல்லை 'மனதின் தற்காப்பு வளையத்தை உடைத்தெறியும் புற உலகால் ஏற்படும் உணர்ச்சிப் பெருக்கு' என்று விளக்கினார். 1 குறிப்பாகப் போரின் பேரழிவு, வன்முறை, வதை இவற்றின் பெரும்பாதிப்பை, அதாவது எதிர்பாராது நிகழும் பெருந்துயரை உளக்கூறாக்கும் மனவடு, மனதில் ஏற்படுத்தும் ஒரு ஆறாத காயமே அது என்றார். அந்தப் பாதிப்பிலிருந்து வெளியேற இயலாத மனம் மீண்டும் மீண்டும் அதைச் சொற்களில் வடிவம் கொடுக்கும் முயற்சியில் பலமுறை அத்துயர்மிகு சம்பவங்களை/அனுபவங்களை அசைபோடுகிறது என்றும் கூறுகிறார். மீண்டும் மீண்டும் மொழியப்படுவது என்பது trauma பற்றி இங்கு அவதானிக்கப்பட வேண்டிய முக்கிய கருத்தாகும்.

கட்டுரையின் தொடக்கத்திலிருக்கும் கேள்விக்கான விடை இங்குதான் காணக் கிடைக்கிறது. அதாவது மனவடு என்ற அனுபவம் ஈழக்கவிதைகளில் உள்ளுறைந்து தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. பா.அகிலன் தன்னுடைய 'சரமகவிகள்' தொகுப்பின் பின்னுரையில் தன் கவிதைகள் 'பல்லாயிரம் புண்ணுண்ட மனங்களின் வசிப்பிடம்' என்கிறார். மனவடு பற்றிய இலக்கிய வகைப்பாட்டுக்குள் (trauma literature) தன் கவிதைகளை நிறுவி அவர் முன்வைக்கும் கருத்துக்கள் முக்கியமானவை. நானறிந்த வரையில் மனவடுவைக் கவிதையுடன் தொடர்புபடுத்தும் கருத்[illegible] முறையாகத் தமிழ் இலக்கியச் சூழலில் முன்வைத்தவர் பா. அகிலன். மனவடு வெளிப்பாட்டின் மொழி குறித்த பா. அகிலனின் கருத்தாக்கத்தை இங்கு நினைவு கூர்வது மிக முக்கியம் என எண்ணுகிறேன்: "அசாதாரணமான அனுபவங்களும் - பெருங் காயங்களின் அனுபவங்களும் மொழியிலும் - மொழிதலிலும் அதன் வழமைகளுக்கு அப்பாலான பாய்ச்சலை இயல்பாகக் கோருகின்றன. அவற்றுக்கு ஒரு புதிய சொல்லுடல் தேவைப்படுகிறது. இவ்வகைப்பட்ட படைப்பாக்க நிலவரங்கள் மொழியை அதிகம் உரு வகப்படுத்துகின்றன. படிமங்களும் - குறியீடுகளும் அதன் இயற்கையாகி விடுகின்றன. அவை மொழியை அதிக வேளையில் அதன் வழமைப் பிரகாரமான ஒழுங்கு நிலைக்கு வெளியால் வேறொரு விதமாய்ப் புணர்த்துகின்றன. சொற்கள் ஒவ்வொன்றும் ஒரு உயிரி போல தொழிற்படத் தொடங்குகின்றன. சிலவேளைகளில் எல்லாக் கவிதைகளும் ஒரு கவிதையாக அல்லது ஒன்றின் பல காட்சித் துண்டுகளாகி விடுகின்றன". அகிலனின் படைப்புகளுக்கு மட்டுமல்ல ஈழக் கவிதைகளுக்கும் இந்த விளக்கம் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது என்று கூறலாம்.









இருண்ட அனுபவங்களை வெளிப்படுத்தும் முகமாக ஈழக்கவிதைகளின் படிமங்களும் குறியீடுகளும் ஆறாப் பெருந்துயர் என்ற தளத்திலேயே இயங்குகின்றன. இக்கவிதைகளின் மீதெழுந்த விமர்சனப் பார்வை சமகால ஈழக்கவிதைகளைப் பற்றிய ஆய்வுகளின் போதாமையைத் தான் காட்டுகின்றது. இக்கவிதைகள் 'மனவடு' என்ற சிறிய வகைப்பாட்டுக்குள் ஒரு பெரிய ஆய்வு வெளியைக் கட்டமைத்துள்ளன என்று உறுதியாகச் சொல்ல இயலும்.

ஈழக் கவிதைகளின் படைப்புவெளி இது போன்ற ஆய்வுகளை மேற்கொள்ள ஒரு பெரும்புலத்தை உருவாக்கியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகால இலக்கியச் செறிவின் பின்புலத்தில் வெளிப்பட்டிருக்கும் இக்கவிதைகள் ஐரோப்பியப் படிவத்தைப் பின்பற்றுகின்றனவா அல்லது மாற்றுத் தளத்தில் இயங்குகின்றனவா என்பதும், மனவடுவின் பதிவாக வெளிப்படும் இவற்றின் கவிதை மொழியில் நிகழ்ந்த மாற்றம் என்ன என்பதும் மிக முக்கியமான கேள்விகள். இக்கவிதைகளில் உருக்கொள்ளும் மனவடு இலக்கிய அழகியலை (aesthetics of trauma literature) எவ்வாறு வரையறுக்கலாம்? பிராய்டிய மனவடு கோட்பாட்டுச் சட்டகத்தை விலக்கி மனவடுவைக் கண்டறிய இயலாது. ஆனால் அது கவிதையாக மொழியப்படுவதிலுள்ள பண்பாட்டு, சமூக, இலக்கியச் சார்புநிலைகளை எவ்வாறு உள்ளடக்கின்றன? இது போன்ற கேள்விகளையும் இப்போது சிந்திக்க வேண்டியுள்ளது.

உலகளவில் இதுவரை மனவடு குறித்த பெரும்பான்மை ஆய்வுகள் சிறுகதைகள் மற்றும் நாவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஹாலோகஸ்டு கவிதைகள், சில லத்தின் அமெரிக்க கவிதைகள் மற்றும் சில்வியா பிளாத் போன்ற ஒரு சில படைப்பாளிகளின் கவிதைகள் மட்டுமே இப்போக்கிற்கு விதிவிலக்காக உள்ளன. ஆனால் கவிதையே மனவடுவின் வெளிப்பாட்டில் ஆய்வு செய்வ தற்கு ஏற்ற களம். அதற்கு முதற் காரணம் உரைநடையைவிட கவிதை மன எழுச்சி சார்ந்த உடலைக் கொண்டுள்ளது. இரண்டாவது, சமகாலக் கவிதைகளில் பல்பொருள் உணர் த்தும் சொற்கள் (ambiguity), தொடர்பற்ற வரிகள், படிமங்[கள்] மற்றும் குறியீடுகள் உள்ளோடியுள்ளன. மன[வடு] அனுபவ த்தையும் மனம் இப்படித்தான் நினை[வு] கொள் கிறது, இப்படித்தான் துண்டிக்கப்ப[ட்ட] நினைவுக ளாய் மீட்டுருவாக்கம் செய்கிற[து]. அதனால் கவிதைகளில் வெளிப்படும் குரலு[ம்] மனவடுவின் மீட்டுருவாக்கமும் நெருங்[கிய] தொடர்புடையன. அதனாலேயே ஈழக்கவிதை[கள்] இத்தகைய ஆய்வு களைத் தமிழ்ச் சூழல[ில்] சாத்தியமாக்குகின்றன.

வன்முறைக்குட்பட்ட உடலையே தளமா[கக்] கொண்டு மனவடுவை அந்த உடலின் மீ[து] கட்டமைப்பது இவ்வகைக் கவிதைகளின் [...]வான கூறு. அதனால் மனவடு பெண் படைப்பா[ளி]களின் கவிதைகளுடன் நெருங்கிய தொடர்பு[டை]யது. குறிப்பாக ஈழப்பெண் படைப்பாளிகள் கவிதைகளில் மனவடு எவ்வகையில் கையா[ளப்] பட்டுள்ளது என்பது மிக முக்கியமான கேள்[வி]. ஏனென்றால் 90 களில் 'சித்திரவதைப்பட்ட உட[ல்]

முதன்மை
வதற்கு அ
பெண் படை
யும் இன்றிய
உட்படுத்த
மனவடு, கெ
அந்த அனு
வெளிப்படு
மொழி இல்
கும் மனவடு
சார்ந்த வ
வாழ்வில்
இயல் மன
sonal trau
வெட்டியும்
கட்டமைக்க
கூட்டு மன
எவ்வாறு இ
சமகால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யின் பின் ஈழம்











முதன்மையான கவிதைக்களமாக உருப்பெறுவதற்கு அப்போது தோன்றிய ஓவியங்களுடன் பெண் படைப்பாளிகளின் கவிதைகளின் பங்களிப்பும் இன்றியமையாத ஒன்றாகும். வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட உடலின் மூலம் உருக்கொள்ளும் மனவடு, சொற்கட்டுக்குள் சிறைப்படுத்த இயலாத அந்த அனுபவம், பெண் மொழியில் எவ்வாறு வெளிப்படுகிறது? போரின் கொடுமைகள் சொல்லும் மொழி இல்லம் சார்ந்த வன்முறையினால் உருவாகும் மனவடுவை (நான் இங்கு குறிப்பிடுவது உடல் சார்ந்த வன்முறை மட்டுமல்ல, பெண்களின் வாழ்வில் அமிழ்ந்து வெளித்தெரியா, சொல்ல இயலா மனவடுவையும் இணைத்து தான்-personal trauma) எவ்வாறு இயைந்தும் இடைவெட்டியும் கவிதையாகின்றன? எவ்வகையில் கட்டமைக்கப்படுகின்றன? தனிப்பட்ட மனவடுவும் கூட்டு மனவடுவும் (collective trauma) எவ்வாறு இக்கவிதைகளில் ஊடாடுகின்றன?

சமகாலக் கவிதை மட்டுமல்லாமல் பக்தி இலக்கியங்கள் மற்றும் சங்க இலக்கியங்களிலும் மனவடுக் கோட்பாட்டுச் சட்டகத்துள் மீள்பார்வை இடுவதற்கான வெளி இருக்கிறது. இவ்வகையில் புறநானூற்றுப் பாடலொன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்:

**ஐயோ வெனின் புலியஞ் சுவலே**
**அணைத்தனன் கொளினே யகன்**
**மார் பெடுக்கவல்லேன்**
**என்போற் பெருவிதிர்ப் புறுக**
**நின்னை**
**இன்னா துற்ற வறனில் கூற்றே**
**நிரைவளை முன்கை பற்றி**
**வரை நிழற் சேர்க நடத்திசிற்**
**சிறிதே** (புறம் 255)

பெரும்காயமுற்று இறக்கப்போகும் தலைவனைச் சுமக்க இயலாமலும் தானுற்ற பெருந்துயரை எவரோடும் பகிர முடியாமலும், அழ இயலாமலும் தற்காலிக நிமலைத் தவிர அவளால் வேறு எதையும் பற்றிக்கொள்ள இயலவில்லை. அந்தப் பெண்ணின் குரல் அவளுற்ற மனவடுவின் உச்சமாக வெளிப்படுகிறது.

மனவடுவின் மற்றொரு பாகமாய் இருப்பது மீளாத் துயரும் இரங்கலும் (mourning and melancholia). சமகாலத் தமிழ்க் கவிதைகளில் இரங்கற் பாடல் என்றொரு வடிவம் இல்லாமல் போய்விட்டது. கலிங்கத்துப் பரணி மற்றும் சிலத் தனிப் பாடல்களுக்குப் பிறகு இரங்கற் பாடல் சமகாலத்தில் கவிதையாக இயங்கவில்லை எனலாம். ஈழக்கவிதைகள் கடந்த நாற்பது ஆண்டுகளாகவே இரங்கற் பாடல் வடிவத்தை மீள எழுப்பியுள்ளன. இவை ஒடுக்கு முறைக்கான எதிர்ப்புக் கவிதையாக (poetry of resistance) மட்டுமல்லாமல், இரங்கற் பாடல் என்ற வடிவத்துக்கும் எதிர்ப்புக் கவிதையாக உள்ளன. அதன் காரணம் செவ்விலக்கியங்களிலும் அதற்குப் பிறகு வந்த இலக்கியங்களிலும் இரங்கல் என்பது ஆறுதல் தரும் முகமாக எழுந்தது. ஆனால் சமகால ஈழக்கவிதைகளோ மீண்டும் மீண்டும் புண்ணைக் கீறி, துயரிலிருந்து துயரையே பாடுவதால் அவை இரங்கற் பாடலின் வடிவம் மற்றும் அதன் கட்டுமானத்தைக் குலைக்கின்றன. பிறழச் செய்கின்றன.

அமெரிக்காவின் விஸ்கான்ஸின் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம் மற்றும் மானுடப் பண்பியலின் பேராசிரியராக இருக்கும் கும்கும் சங்கரி, விரகக் கவிதைகளைப் பற்றி பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றுள் ஒரு கட்டுரையில் இந்திய பாகிஸ்தான் பிரிவினையின்போது வெளிவந்த கவிதைகள் எப்படி விரக பாவத்தை, துயரப் பாடல்களாக மீட்டுருவாக்கம் செய்தன என்று நிறுவுகிறார்.

பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டு வரை விரகமாக வெளிப்பட்ட காதல், பிரிவினையின் கொடுமைகளை உள்ளொடுக்கி மீளாத் துயர்மிகும் மொழியாகக் கவிதைகளிலும் அப்போதைய ஹிந்தி திரைப்படப் பாடல்களிலும் விரவியதாகக் கூறுகிறார்.

அவுஸ்திரேலியாவில் உளவியல் துறைப் பேராசிரியராக இருக்கும், ஈழத்தைச் சார்ந்த தயா சோமசுந்தரத்தின் 'Scarred Communities' என்ற மனவடு குறித்த நூல் மேற்கின் மனவடு கோட்பாட்டுச் சட்டகத்தின் மாற்றாகத் தமிழ்ச் சமூகம் மனவடுவின் ஆறாத் துயரை எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதை நிறுவுகிறது.

இந்த நூல் உருவாக்கும் கோட்பாடு நமது இலக்கியங்களில் மனவடு குறித்த ஆய்வுகளுக்கு உறுதுணையாக அமையும்.

**தீப்பந்தம் கொண்டு**
**நிர்வாண மணப் பெண்களை**
**அவர்கள் எரித்த னர்**
**கருகிய உடல்கள் உருண்டு**
**இடறிச்**
**. சாவுக்கு இரையா கின**
**கதவுகளை அறை ந்து சாத்தி**
**என்னருகே இறந்து கிடந்த**
**பெண்ணிடம் கேட் டேன்:**
**"எவ்விதம்**
**பிடுங்கி எடுப்பேன்**
**என் விழிகளை?"**

நூறாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இவ்வரிகள் ஏன் இன்னும் அதிர்ந்து கொண்டிருக்கின்றன?

சாதாரணமாக இயங்கும் கவிதைகளைவிட இவ்வகைக் கவிதைகளை வாசித்துக் கடப்பது சுலபமல்ல. வாசகரின் புரிதலுக்கும் உள்வாங்கும் தன்மைக்கும் இவற்றின் படிமதளங்களும் அவை கட்டி எழுப்பும் அவலமான உணர்வுகளும் அதற்குச் சவாலாக அமைகின்றன. அதைவிடப் பெரிய சவால் அவற்றிலுள்ள அழகியலை அணுகுவது.

மானுடத்தின் உச்சகட்ட கொடுமைக்கு எதிர்ப்புக்குரலாகவும் சாட்சியாகவும் செயற்படும் இக்கவிதைகள் மறக்கப் படாமலிருத்தல் அவசியமாகும்.

அதற்கு முதற்கட்டமாக துயரின் சாயலுற்ற அனு பவம் வெறும் அனுபவமாகச் சிறைப்படும் படைப்புகளுக்கும், அனுபவம் மொழியைப் புணர்ந்து கவிதையாகும் படைப்புகளுக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்து உணர்ச்சிப் பெருக்குகளுக்கு இடம் தராமல் கவிதைகள் தொகுக்கப்பட வேண்டும். அப்போது தான் அடுத்தக்கட்ட ஆய்வுகள் சாத்தியப்படும்.

இறுதியாக, மனவடு கோட்பாட்டுச் சட்டகத்தளம் என்பது கவிதை வாசிப்பின் ஒரு வகை மட்டுமே. இந்த ஒற்றைப் பார்வைக்குள் மட்டுமே அவை வாசிக்கப்பட வேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் ஈழக்கவிதைகள் இப்படி ஒரு தளத்தை நிறுவி இவ்வகையான வாசிப்புக்கு இடமளிக்கின்றன என்பதை மறுக்க இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2015~15.06.2015



**தகராறு நீங்கி தனவரவு கிடைக்கும் நேரம்! நீதியை பின்பற்றி நிகழ்காலத்தை அமைத்துக் கொள்ளும் கும்ப இராசி நேயர்களே!**

## தகராறு நீங்கி தனவரவு கிடைக்கும் நேரம்!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அஷ்டமத்தில் ராகுவும், 2இல் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உச்ச குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்தில் பதிகிறது. எனவே தன ஸ்தானம் புனிதமடைகிறது. பணப்புழக்கம் நன்றாக இருக்கும். பாக்கிகள் வசூலாகி பரவசப் படுத்தும். பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் தொழிலுக்கு உறு துணை புரியும் விதத்தில் நடந்து கொள்வர்.

தனலாபாதிபதி குரு உச்சம் பெறுவது நன்மைதான். என்றாலும் 6 ஆம் இடத்தில் உச்சம் பெறுவதால் மறைமுக எதிர்ப்புகள் ஏற்படத்தான் செய்யும். இருந்தாலும் அவற்றால் பாதிப்புகள் வராது. அதே நேரத்தில் ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்ய உடல் நிலை இடம் கொடுக்காது போகலாம். உள்ளத்தில் உற்சாகம் குறையலாம்.

மருத்துவச் செலவுகள் கூடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். வீட்டுத் தேவைகளை உடனுக்குடன் பூர்த்திசெய்து குடும்ப உறுப்பினர்களின் அன்பிற்கு பாத்திரமாவீர்கள்.

புத சுக்ரப் பரிவர்த்தனை உங்களுக்கு யோகம் தருவதாகவே அமைகிறது. பிள்ளைகளால் நன்மையும், பிரச்சினைகளிலிருந்து விடுபடும்சூழ்நிலையும்உருவாகும். இடம், வீடு வாங்குவதற்குப் போட்ட திட்டம் நிறைவேறும். என்ன இருந்தாலும் ராசிநாதன் சனி, துலாம் ராசிக்கு வக்ரம் பெற்றுச் செல்வதால் இம்மாதக் கடைசியிலிருந்து சுமார் 3 மாத காலங்களுக்கு விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. விரதங்களும், வழிபாடுகளும் வியக்கும் வாழ்வை அமைத்துக் கொடுக்கும்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

மே 24 ஆம் திகதி மேட ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். புத்திர ஸ்தானாதிபதி வக்ரம் பெறுவதால் பிள்ளைகளின் போக்கில் மாற்றம் தென்படலாம். அவர்களின் கனவுகளை நனவாக்க முயற்சி எடுப்பது நல்லது. பூர்வீக சொத்து விற்பனையால் இலாபம் கிட்டும். ஜூன் 6 ஆம் திகதி மீண்டும் இடபத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். அப்பொழுது புத ஆதித்ய யோகம் செயற்படும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். அரசியல் மற்றும் பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். பிரபலஸ்தர்கள் உங்களுக்குப்பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். கைநழுவ விட்ட வாய்ப்புகள் மீண்டும் கைகூடிவரும் நேரமிது.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

கடக ராசியில் மே 30 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான ஆடம்பரப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. கூடுதல் இலாபம் தொழிலில் கிடைத்தாலும் நிம்மதி கொஞ்சம் குறைவாகவே இருக்கும்.

**வக்ர சனியின் ஆதிக்கக் காலம்!**




ஜூன் 12 ஆம் திகதி துலாம் ராசிக்கு சனி வக்ர இயக்கத்தில் செல்கிறார். 12இற்கு அதிபதியாகவும், ராசி நாதனாகவும் விளங்கும் கிரகம் சனி 9 இல் வக்ரம் பெறும் பொழுது அந்நிய தேசத்தில் இருப்பவர்கள் தாய்நாடு திரும்பும் வாய்ப்பு கிட்டும்.

பயணங்களால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படலாம். வாகனப் பழுதுச் செலவுகள் உண்டு. சனிக்கிழமை தோறும் சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்வதன்மூலம் சஞ்சலங்களிலிருந்து விடுபட லாம்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூன் 15 ஆம் திகதி மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 3, 10இற்கு அதிபதி 5 இல் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் வேலை சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உதிரி வருமானங்கள் பெருகும். வாங்கிய சொத்தை விற்பதில் இலாபம் கூடுதலாக வந்து சேரும். இம்மாதம் பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் 8 இல் ராகு இருப்பதால் மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும். எதிர்மறைச் சிந்தனைகளைக் குறைத்துக் கொள்வது நல்லது. குடும்ப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் குடும்பச் சுமை அதிகரித்தாலும் அதைச் சமாளிப்பீர்கள்.

வாங்கல்- கொடுக்கல்களில் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை. புத, சுக்ர பரிவர்த்தனை இருப்பதால் பிள்ளை கள் சம்பந்தமாக எடுத்த முயற்சியில் அனுகூலமாக இருக்கும்.

திருமணம் கைகூடும். குல தெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். முருகன் வழிபாடு முனனேற்றம் வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**உன்னத வாழ்விற்கு உறவினர்கள் ஒத்துழைக்கும் நேரம்! நண்பர்களிடம் நகைச்சுவையாக பேசும் மீன இராசி நேயர்களே!**

## உன்னத வாழ்விற்கு உறவினர் ஒத்துழைக்கும் நேரம்!

வைகாசி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசியில் உச்சம் பெற்ற குருவின் பார்வை பதிகின்றது. உங்கள் ராசியிலேயே சந்திரன் கேதுவோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். குரு பார்வை இருப்பதால் குழப்பங்கள் தீரும் என்றாலும்கூட சந்திர கேதுவின் சஞ்சாரம் அவ்வளவு நல்லதல்ல.

சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கும் பொழுது தடைகளும், தாமதங்களும் வந்து கொண்டே இருக்கும். வேலைப் பளு அதிகரிக்கும். எந்த முயற்சிகள் செய்தாலும் அது பாதியில் நிற்கிறதே என்ற கவலை மேலோங்கும். சப்தம ஸ்தானத்தில் ராகு இருப்பதால் வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அப்பொழுதுதான் குடும்பத்தில் அமைதி நிலவும். கூடுதல் முன்னேற்றம் காண சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்வது நல்லது.

பன்னிரெண்டாமிடத்திற்கும், பதினோராமிடத்திற்கும் அதிபதியான சனிபகவான் மீண்டும் அஷ்டமத்துச் சனியாக ஒரு சில மாதங்கள் துலாம் ராசிக்குள் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, இது போன்ற நேரங்களில் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவதன் மூலமே குழப்பங்களிலிருந்து விடுபட இயலும். அஷ்டமத்துச் சனியாக இருந்தாலும் அது வக்ர இயக்கத்தில் இருந்தாலும் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது.

பிரியமானவர்களை பிரிய வைக்கும், பிரச்சினைகள் தரும், உரிய பலன் கிடைக்காமல் உள்ளம் வாட வைக்கும்... என்றெல்லாம் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தை குறிப்பிடுவார்கள். அதில் இருந்து விடுபட்டு நல்ல வாய்ப்புகளை நாம் வரவழைத்துக் கொள்ள வேண்டுமானால் சனியின் சன்னிதிக்குச் சென்று முறையாக வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். தீபம் ஏற்றினால் தெளிவு பிறக்கும். கோபத்தைக் குறைத்துக்கொண்டால் குடும்பத்தில் அமைதி நிலவும்.

**வக்ர புதனின் ஆதிக்கம்!**

உங்கள் ராசிக்கு 4, 7 இற்கு அதிபதியானவர் புதன். அவர் வக்ர இயக்கத்தில் மேடத்தில் மே 24 ஆம் திகதி வரப்போகிறார். எனவே, யாருக்கேனும் வாக்குக் கொடுத்தால் கொடுக்கப் போகும் முன்னால் யோசித்து கொடுப்பது நல்லது. உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வரன்கள் வந்து வந்து விட்டுப் போகிறதே என்று கவலைப்படுவீர்கள். தொழிலில் நண்பர்களால் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். ஜூன் 6 ஆம் திகதி வக்ர நிவர்த்தியான பிறகு சகோதர ஒற்றுமை பலப்படும். வருமானம் திருப்தி தரும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 30 ஆம் திகதி 3, 8 இற்கு அதிபதியான சுக்ரன் 5 இல் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் செலவிடும் சூழ்நிலை உண்டு. அதன் கல்விக்காகவோ, கடல் தாண்டும் முயற்சிக்காகவோ செய்த ஏற்பாடுகள் வெற்றி பெறும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். அடமானம் வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு கிட்டும்.

**சனியின் வக்ர இயக்க காலம்!**

ஜூன் 12 ஆம் திகதி துலாம் ராசிக்கு சனி வக்ரமாக செல்கிறார். இதன் விளைவாக அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் மீண்டும் உருவாகிறது. ஒருசில மாதங்கள் மட்டுமே சனி வக்ர இயக்கத்திலிருந்து மீண்டும் விருச்சிகத்திற்கு செல்லப்போகிறார்.




இதுபோன்ற நேரங்களில் சில நன்மைகளும் அமையும். வீடு மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றங்கள் விரும்பும் விதத்தில் அமையும். ஒரு சிலருக்கு நாடு மாற்றமும் ஏற்படும்.

**மிதுன செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூன் 15 ஆம் திகதி மிதுனத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் உங்களுக்கு ஒரு இனிய காலமாக அமையும். பணப் புழக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்.

விற்ற சொத்துக்கு பதிலாக புதிய சொத்தை வாங்குவீர்கள். இம்மாதம் கந்தன் வழிபாடு கவலையைப் போக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். ஊர்மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்.

கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தாலும் 8 இல் வரும் சனியால் இடையூறுகள் ஏற்படலாம். கணவன், மனைவிக்குள் அன்பும், அனுசரிப்பும், இல்லத்தில் அமைதியை வழங்கும். குழந்தைகளுக்கு எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும்.

சர்ப்ப பரிகாரங்கள் செய்து கொள்வதன் மூலம் தனவரவில் இருந்த தடை அகலும். விசாகத்தன்று சண்முகநாதர் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலநறுவை பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் முற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப் பிரதேசத்தில் உள்ள சாதாரண மக்களுடன் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

### யுத்தக் குற்றங்கள் குறித்து

# மைத்திரி அரசு நேர்மையாக விசாரணை நடத்த வேண்டும்

## கனடா பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது நடைபெற்ற குற்றங்கள் குறித்து மைத்திரி தலைமையிலான புதிய அரசு நேர்மையாக விசாரணை நடத்த வேண்டும் என கனடாவின் பாதுகாப்பு துறை அமைச்சர் ஜேஸன் கென்னி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து 6 ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதி வரும்போதெல்லாம் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் காரணமாக 25 ஆண்டுகளாக தமிழர்கள் அனுபவித்த துன்பங்களே நம் நினைவுக்கு வரும்.

கனடாவில் உள்ள தமிழ் அமைப்புகளின் உறுப்பினர்களுடன் சேர்ந்து நானும் இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதை நினைவு கூருகின்றேன். இலங்கையில் ஏற்பட்ட கொடுமையான யுத்தத்தின் காரணமாக ஏராளமான தமிழர்கள் கனடாவுக்கு அகதிகளாக வந்ததை நாங்கள் நினைத்து பார்க்கின்றோம்.

இலங்கை யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூர வேண்டும் என்று கனடா அரசு உறுதி பூண்டுள்ளது. இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது அரச படைகளால் கொல்லப்பட்ட தமிழர்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என எமது நாட்டு அரசு தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றது.

இனப்படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2013ஆம் ஆண்டு இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை புறக்கணித்தது போல் கனடா அரசு இந்த விவகாரத்தில் உண்மையான விசாரணைக்காக என்றும் வலியுறுத்தும்.

முன்னதாக இந்த வருடத்தின் தொடக்கத்தில் நடைபெற்ற தேர்தலில் இலங்கை தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்ஷவை புறக்கணித்து விட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் புதிய அரசை தேர்ந்தெடுத்துள்ளனர்.

இந்த புதிய அரசு இலங்கையில் உள்ள தமிழர்களுடன் நல்லுறவில் ஈடுபடும் என்றும் கடந்த ஆட்சியின் போது நடைபெற்ற குற்றங்கள் குறித்து நேர்மையாக விசாரணை நடத்தும் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.

இலங்கை யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழர்களுக்கு நாம் மரியாதை செலுத்த விரும்பினால் இலங்கையின் புதிய அரசுடன் சேர்ந்தும் உலக நாடுகளுடன் சேர்ந்தும் உண்மை, நீதி ஆகியவை கிடைக்க பாடுபட வேண்டும்.

இதேவேளை மீண்டுமொரு முள்ளிவாய்க்கால் அவலம் ஏற்படுவதை தடுக்க வேண்டும் என்றும் அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

# தமிழீழ தேசிய துக்கநாளில் நாமும் பங்கெடுக்கிறோம்!

(கொழும்பு)

இலங்கையில் யுத்தத்தால் இறந்தவர்களுக்காகவும், கொடூர யுத்தத்தின் தாக்கத்தினால் இடம்பெயர்ந்தவர்களின் துன்பத்திலும் நாங்களும் கலந்து கொண்டு அவர்களுக்காக அந்நாளினை துக்க நாளாக அனுஷ்டிக்கிறோம் என கனடா பிரம்ரன் முதல்வர் லின்டா ஜெவ்ரி வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு.

எனது நகர சபை சகாக்கள் மற்றும் அனைத்து பிரம்ரன் நகர ஊழியர்கள் சார்பாகவும் நாங்கள் எங்கள் தமிழ் சமூகத்தின் நண்பர்களுடன் இலங்கையின் உள்நாட்டு போரில் ஏற்பட்ட பாரிய உயிர் இழப்பையும் உள்நாட்டு போரின் முடிவையும் உணர்வுடன் நினைவு கூருகின்றோம்.

எங்கள் சிந்தனைகள் மற்றும் பிரார்த்தனைகள் பிரம்ரன் தமிழ் சமூகத்தினருக்கும் நாடு பூராகவும் உலகளாவிய ரீதியாகவும் இருக்கும். இவர்களின் அன்புக்குரியவர்கள் மற்றும் நண்பர்களின் இழப்பிற்கு நாங்கள் தொடர்ந்தும் துக்கம் அனுஷ்டிப்போம்.

தங்கள் உயிர்களை இழந்த ஆயிரக்கணக்கான அப்பாவி குடிமக்களை அல்லது போரின் போதும் அதற்கு பின்னரும் இடம்பெயர்க்கப்பட்டவர்களை நினைவு கூரும் இந்த சந்தர்ப்பத்தில் அனைத்து பிரம்ரன் வாழ் குடிமக்களையும் பிரம்ரன் தமிழ் சமூகத்தினருடன் ஒன்றிணைந்து ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

# முயன்றால் முடியும்

நடக்கும் என்று நம்பினால் நடக்கும். முடியும் என்று முயன்றால் முடியும். தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் என்கிறது பைபிள் வாசகம்.

தட்டினால்தான் திறக்கும் தட்டாமல் எந்தக் கதவும் திறப்பதில்லை. முயற்சியே இல்லாமல் எந்தச் செயல்களும் நடப்பதில்லை. எந்த விளைவுகளும் ஏற்படுவதுமில்லை .

விதைக்கிறவனே அறுக்கிறான். உழைக்கிறவனே ஊதியம் பெறுகிறான். கேட்கிறவனுக்கே கிடைக்கிறது. உழைக்காமல் எந்தக் காரியமும் நடப்பதில்லை. பலன் கிடைக்க வேண்டும் என்று எண்ணுகிறவன் பாடுபடுகிறவனாகவும் இருக்க வேண்டும்.

மெய்வருத்த கூலிதரும் என்கிறார் வள்ளுவர். உடலை வருத்தினால் அதற்குரிய கூலி கிடைக்கும் என்கிறார் அவர். அதாவது உழைத்தால் உழைப்பதற்கேற்ற ஊதியம் கிடைப்பது உறுதி என்கிறார் திருவள்ளுவர். வள்ளுவர் இதை மட்டும் சொல்லவில்லை. அதற்கு முன்னால் இன்னொன்றையும் சொல்லிவிட்டுத்தான் மெய்வருத்த கூலி வரும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். தெய்வத்தின் செயல் ஒருவனுக்கு அனுகூலமாக இல்லாமல் போனாலும் அவன் எந்த அளவுக்கு உழைக்கிறானோ அந்த அளவுக்கு பலன் கிடைக்கும் என்கிறார் வள்ளுவர்.

அதாவது விதி நமக்கு பாதகமாக இருப்பினும் கூட நம் உழைப்புக்கேற்ற பலன் கிடைக்காமல் போகாது என்று வள்ளுவர் திட்டவட்டமாக தெரிவிக்கிறார்.

ஆகவே மனித முயற்சியை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. விதியைக் கூட புறமுதுகிட்டு ஓடச் செய்து விட முடியும் என்று வள்ளுவர் சொல்கிறார். சோம்பல் இல்லாமல் தொடர்ந்து முயற்சியை மேற்கொள்கின்றவர்கள் விதியை ஓட ஓட விரட்டுகின்ற சக்தி படைத்தவர்களாகி விடுகிறார்கள் என்பது வள்ளுவரின் கூற்று.

**ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றி**
**தாழாது உஞற்று பவர்**

என்பது குறள்.

ஆக, முயற்சி வலிமை வாய்ந்தது. தோல்விகள் வந்தபோதும் துவளாமல் செயற்பட்டுக்கொண்டே போனால் வெற்றியைத் தரிசிக்கும் வாய்ப்பு நிச்சயம் ஏற்படவே செய்கிறது. ஆனால் உழைப்பு என்பது கண்மூடித்தனமான உழைப்பாக இருந்து பயனில்லை. அது உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்த உழைப்பாக இருக்க வேண்டும். ஏனெனில் உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கக் கூடிய சூழ்நிலையை நம்பிக்கைதான் நமக்கு உருவாக்கிக் கொடுக்கிறது.

எண்ணத்தில் உறுதி இருந்தால் எண்ணிய விடயங்கள் ஈடேறுகின்றன. நீங்கள் எண்ணுகிறபடியே எல்லாம் நடக்கும். உங்களுடைய எண்ணத்தில் மட்டும் நீங்கள் உறுதியாக இருந்தால் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். ஆக ஒன்று நடக்க வேண்டுமென எண்ணுவது மட்டும் போதாது. அந்த எண்ணத்தில் அழுத்தமான உறுதி நமக்கு இருக்க வேண்டும்.

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்**
**திண்ணியர் ஆகப்பெறின்**

எண்ணத்துக்கு உரியவர்கள் உறுதியான மனப்பான்மை உடையவர்களாக இருந்தால் அவர்கள் எதை எண்ணுகிறார்களோ அது நிச்சயம் நடக்கும் என்பது வள்ளுவர் வாக்கு.

இன்றைய மனோதத்துவ ஆராய்ச்சிகள் கண்டு பிடித்துச் சொல்வதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே வள்ளுவர் எண்ணம் வலிமையானதாக இருந்தால் தான் செயல்கள் நடக்கும் என்கிற உண்மையை தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டி இருக்கிறார்.

இரண்டு அடிப்படைகளில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

ஒன்று எண்ணம். இன்னொன்று முயற்சி.எண்ணம் வெறும் எண்ணமாக இருந்து மட்டும் பயனில்லை. அந்த எண்ணத்திற்கு நாம் வலிமை சேர்க்க வேண்டும். நம்பிக்கையின் மூலமாகத்தான் இந்த வலிமையை உண்டாக்க முடியும். நம்பிக்கை என்பது பல அரிய சாதனைகளுக்கு அடித்தளமாக இருந்து வந்திருக்கிறது. உலக வரலாற்றின் வெற்றிக் கதைகள் அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த கதைகளே.

இந்தக் கண்ணோட்டத்தோடு வரலாற்றைப் படித்தால் பல உண்மைகள் தெளிவாகும். உலக அளவில் சாதனைகள் புரிந்தவர்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள் என்று எண்ண வேண்டாம். நம்மைச் சுற்றிலும் இருக்கிற சாதனையாளர்கள் அனைவரும் கூட நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு வெற்றி பெற்றவர்களே.

மரக்கட்டைகளாலான வீட்டில் குடியிருந்த ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாகி வெள்ளை மாளிகையில் குடியேறிய வரலாறு அமெரிக்காவில் மட்டுமே நிகழக்கூடிய சம்பவம் என்று நாம் கணக்குப் போட வேண்டியதில்லை.

ஆகவே எண்ணங்களுக்குள்ள வலிமையை நீங்கள் முதலில் நம்ப வேண்டும். பிறகு உங்கள் எண்ணத்தை செயற்படுத்த முடியும் என்கிற நம்பிக்கை உங்களுக்கு ஏற்பட வேண்டும். இந்த நம்பிக்கை வலிமையாகும்போது நீங்கள் தானாகவே முயற்சிகளிலே ஈடுபடுகிறீர்கள். முயற்சி தொடர பலன்கள் கிடைக்க ஆரம்பிக்கின்றன. பலன்கள் புதிய நம்பிக்கைக்கு அஸ்திவாரமாகின்றன. இதுவே ஒரு சக்கரச்செயல் முறையாகி மேலும் மேலும் வெற்றிகளைக் குவிக்கும் சக்தியாக மாற்றம் பெற்று விடுகிறது.

இதனால்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த வள்ளுவரிலிருந்து இன்றைய மனோதத்துவ நிபுணர்கள் வரை 'நம்பினால் நடக்கும்' என்று சொன்னார்கள்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகக்கட்டுப்பாட்டினை இழந்த பேருந்து பாலத்தினுள் பாய்ந்தது

(வவுனியா)

இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்தொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்ததில் வீதிக்கு அருகில் இருந்த பாலத்திற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் வவுனியா சாந்தசோலை ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் பேருந்து சாரதி சிறுகாயங்களுக்குள்ளானார் எனவும் பயணிகளுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லையெனவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.



குறித்த பேருந்து முச்சக்கரவண்டியொன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்-து பாலத்திற்குள் பாய்ந்துள்ளது. (2)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதனுக்கு ஒதுக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டுக் கான அபிவிருத்தி நிதியிலிருந்து ஜெயபுரத்தில் இயங்கி வரும் நூலகத்திற்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள், நூல்கள் என்பன அண்மையில் வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# சிறுதானிய செய்கை பாரியளவில் பாதிப்பு

## முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக சிறு தானிய பயிர்ச்செய்கை பாரிய அளவில் பாதிப்படைந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் வயல் நிலங்களில் அதிகளவில் நிலக்கடலை, எள்ளு, பயறு, கௌப்பி போன்ற சிறுதானிய பயிர்ச் செய்கை விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அந்த வகையில் முத்தையன்கட்டு, துணுக்காய், ஒட்டுசுட்டான் ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவில் ஒரு மாதகால பயிரான நிலக்கடலை பெய்து வரும் மழையை அடுத்து வயலினுள் நீர் தேங்கி நிற்பதன் காரணமாக பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

அத்துடன் வயல் நிலங்களில் எள்ளுப் பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் அறுவடை நிலையிலும் பயிரான நிலை யிலும் நீர்தேங்கி நிற்பதால் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக சிறுபோக நெற்செய்கைக்கான கால அட்டவணைப்படி பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாது இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9)

# வற்றாப்பளை பொங்கலை முன்னிட்டு பாக்குத்தெண்டல் நிகழ்வு இன்று

(முள்ளியவளை)

வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இப் பொங்கல் விழாவை முன்னிட்டு காலாகாலமாக நடைபெற்று வருகின்ற பாக்குத்தெண்டல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெறும்.

இது குறித்து வற்றாப்பளைப் பொங்கலின் பரம்பரை வழியிலான பூசகர் குலசேகரம் கிருஷ்ணபவன் விபரிக்கையில்,

வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கல் விழாவின் முதற்கட்ட நிகழ்வாக இந்த பாக்குத் தெண்டும் நிகழ்வு காலாகாலமாக பாரம்பரிய முறையில் பரம்பரை வழியாக நடைபெற்று வருகிறது.

குறித்த நிகழ்வான பொங்கல் தினமாகிய திங்களுக்கு முதற்திங்களுக்கு முந்திய திங்கட்கிழமை நடைபெறும். இதற்கு அமைய அதிகாலை 3 மணிக்கு முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்திலிருந்து குறித்த பரம்பரையைச் சேர்ந்த ஒருவரும் அவருக்கு துணையாக லாம்பு (தற்போது டோச்லைற்) பிடிப்பதற்கு உதவிக்கு ஒருவருமாக இருவர் வாய்கள் கட்டப்பட்டு வாய் பேசாத நிலையில் மஞ்சள் துவைத்த வெள்ளைத்துணியை தம்முடன் எடுத்துக் கொண்டு முள்ளியவளை,தண்ணீரூற்று, வற்றாப்பளை ஆகிய மூன்று கிராமங்களில் உள்ள ஒன்பது வீடுகளுக்குச் சென்று அவர்களின் வாசலில் நின்று வாய் பேசாத நிலையில் அவர்களால் வழங்கப்படும் மங்களகரமான பொருட்களாகிய மஞ்சள், வெற்றிலை, பாக்கு, நெல்,வெள்ளி, பொன், காசு போன்ற பொருட்களை தாம் எடுத்துச் சென்ற துணியினுள் வாங்கி சூரிய உதயத்திற்கு முன் மீண்டும் காட்டாவிநாயகர் ஆலயத்தி ற்கு திரும்பி தம்முடன் எடுத்து வந்த பொருட்கள் அடங்கிய துணியினை முடிச்சாக ஆலயத்திலுள்ள வேப்ப மரத்தில் கட்டி வைப்பார்கள்.

இதன் அடுத்த நிகழ்வாக எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்க்கிழமை காட்டாவிநாயகர் ஆலயத்திலிருந்து சிலாவத்தை சென்று அங்கு கடல் நீரில் தீர்த்தம் எடுத்துவந்து காட்டாவிநாயகர் ஆலயத்தில் தொடர்ச்சியாக அடுத்த திங்கள் வரை கடல் நீரில் விளக்கு எரியும் அற்புத நிகழ்வு நடைபெறும் முதலாம் திகதி அதிகாலை3மணிக்குகாடாவிநாயகர்ஆலயத்திலிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் நோக்கி மடைப்பண்டம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பொங்கல் நிகழ்வு நடைபெறும் என அவர் தெரிவித்தார். (2-302)

# நினைவேந்தல் தீபம் ஏற்றல்

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம், தமிழ் விருட்சம், கற்குழி முத்துமாரி அம்மன் நிர்வாக சபை ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்துள்ள முள்ளிவாய்க்காலில் மடிந்த எம் உறவுகளுக்கும் யுத்தத்தில் இறந்த எம் அனைத்து உறவுகளுக்குமான ஆத்மா சாந்தி பூசையும் நினைவேந்தல் தீபம் ஏற்றலும் நண்பகல் 12 மணிக்கு கற்குழி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறும்.

எனவே அனைவரையும் தவறாது கலந்து கொண்டு உறவுகளுக்கு பிரார்த்திக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (2-29)




# துணுக்காய் வலயமட்ட பெருவிளையாட்டுக்களின் முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வலயமட்ட மெய்வல்லுநர் போட்டியில் பெரு விளையாட்டுக்களில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற பாடசாலைகளின் விபரங்களை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். அதன்படி,

**15 வயதுக்குட்பட்ட பெண்கள்-சதுரங்கம்**

மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம், மு/ஒட்டுசுட்டான் ம.வி.

**19 வயதுக்குட்பட்ட பெண்கள்-சதுரங்கம்**

மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம், மு/ஒட்டுசுட்டான் ம.வி., மு/யோகபுரம் ம.வி.

**15 வயதுக்குட்பட்ட பெண்கள்-கரம்**

மு/யோகபுரம் ம.வி, ம/வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, மு/ஒட்டுசுட்டான் ம.வி.

**19 வயதுக்குட்பட்ட பெண்கள்-கரம்**

மு/யோகபுரம் ம.வி., மு/வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, மு/மாங்குளம் ம.வி.

**15 வயதுக்குட்பட்ட பெண்கள்-பூப்பந்தாட்டம்**

மு/வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலை, மு/ஒட்டுசுட்டான் ம.வி.

**19 வயதுக்குட்பட்ட பெண்கள்-பூப்பந்தாட்டம்**

மு/வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலை, மு/துணுக்காய் அ.த.க. பாடசாலை, மு/மாங் குளம் ம.வி.

**15 வயதுக்குட்பட்ட பெண்கள்-கபடி**

மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, மு/பாலிநகர் ம.வி, மு/ஒட்டு சுட்டான் ம.வி.

**19 வயதுக்குட்பட்ட பெண்கள்-கபடி**

மு/கற்சிலைமடுஅ.த.க. பாடசாலை, மு/முத்தையன்கட்டு வலது கரை ம.வி., மு/பாலிநகர் ம.வி.

**15 வயதின் கீழ் பெண்கள்-கரப்பந்தாட்டம்**

மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மு/பாண்டியன்குளம் ம.வி.

**17 வயதின் கீழ் பெண்கள்-கரப்பந்தாட்டம்**

மு/வன்னிவிளாங்குளம் அ.த.க. பாட சாலை, மு/பாண்டியன்குளம் ம.வி., மு/முத்தையன் கட்டு இடது கரை அ.த.க.

**19 வயதின் கீழ் பெண்கள்-கரப்பந்தாட்டம்**

மு/பாண்டியன்குளம் ம.வி., மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, மு/முத்தையன்கட்டு வலதுகரை ம.வி.

**15 வயதின் கீழ் பெண்கள்-வலைப்பந்தாட்டம்**

மு/தண்டுவான் அ.த.க.பாடசாலை,மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, மு/ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை.

**17 வயதின் கீழ் பெண்கள்-வலைப்பந்தாட்டம்**

மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, மு/தண்டுவான் அ.த.க.பாடசாலை, மு/ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை.

**19 வயதின் கீழ் பெண்கள்-வலைப்பந்தாட்டம்**

மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, மு/ஐயங்கன்குளம் அ.த.க. பாடசாலை, மு/மல்லாவி மத்திய கல்லூரி.

**19 வயதின் கீழ் பெண்கள்-எறிபந்து**

மு/கோட்டைகட்டியகுளம் அ.த.க.பாடசாலை, மு/பாலிநகர் ம.வி., மு/ஒட்டுசுட்டான் ம.வி.

**19 வயதின் கீழ் பெண்கள்-துடுப்பாட்டம்**

மு/கூழாமுறிப்பு அ.த.க.பாடசாலை, மு/ஒட்டுசுட்டான் ம.வி., மு/வன்னிவிளான்குளம் அ.த.க.பாடசாலை.

**19 வயதின் கீழ் பெண்கள்-எல்லே**

மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, மு/தேறாங்கண்டல் அ.த.க. பாடசாலை, மு/மல்லாவி மத்திய கல்லூரி.

**19 வயதின் கீழ் பெண்கள்-உதைபந்தாட்டம்**

மு/கற்சிலைமடு அ.த.க.பாட-சாலை, மு/ஒட்டுசுட்டான் ம.வி., மு/கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலை.

**19 வயதின் கீழ் பெண்கள்-கூடைப்பந்தாட்டம்**

மு/மல்லாவி மத்திய கல்லூரி. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை நடந்தது என்ன?

02


கொலை செய்யப்பட்ட மாணவி வித்தியா

பொன் கொடு தீவு என்பதுதான் புங்குடுதீவு என்று மருவியது என ஊர்ப் பெயருக்குக் காரணம் கூறுவர். புங்கை மரங்களின் செறிவு காரணமாகவும் இப்பெயர் ஏற்பட்டது என்ற கருத்துக்களும் இருக்கவே செய்கிறது.

எதுவாயினும் விவசாயம், கடற்றொழில் என்பவற்றோடு வர்த்தகம் எழுச்சி பெற்ற ஊராகப் புங்குடுதீவைப் பார்க்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 32 கிலோமீற்றர் தொலைவில் உள்ள புங்குடுதீவு வேலணைப் பிரதேச செயலகத்தின் நிர்வாகப் பரப்பிற்கு உட்பட்டது. வர்த்தகம், அரசியல், அரசபணி, கல்வித்துறை எனப் பல துறைகளிலும் புங்குடுதீவு மக்களின் வகிபங்கு காத்திரமாக இருந்த போதிலும் புங்குடுதீவைச் சேர்ந்த மக்கள் தொகையில் கணிசமானவர்கள் தீவகம் என்ற எல்லையைத் தாண்டி வாழ்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


வித்தியாவின் வீடு

இந்தச் சூழ்நிலையில் புங்குடுதீவில் வாழ்கின்ற சொற்பமான குடும்பங்களில் சிவலோகநாதனின் குடும்பமும் ஒன்று.

புங்குடுதீவு ஆலடிச் சந்தியின் தென்முகம் நோக்கிய பாதையூடாகச் சென்றடையும் புங்குடுதீவு தென்கிழக்கு கடலோரமாக வீராமலை என்ற குறிச்சி உண்டு. இங்குதான் சிவலோகநாதனின் வீடு இருக்கிறது.

கடலோரம் வீற்றிருக்கும் கண்ணகை அம்மன் ஆலயச் சூழலும் கடல் வெளி உப்புக்காற்றும் அந்தப் பகுதிக்கு ரம்மியமான அனுபவங்களைக் கொடுத்திருந்தது.

சிவலோகநாதன் தம் பதியருக்கு ஒரு மகனும் இரண்டு மகள்களுமாக மூன்று பிள்ளைகள்.

மூத்த மகள் வவுனியா பல்கலைக்கழக வளாகத்தில் முகாமைத்துவப் பட்டத்தை மேற்கொண்டு வருகிறார். மூன்றாவது மகள்தான் இறந்து போன வித்தியா.

1991களில் புங்குடுதீவில் ஏற்பட்ட இடப்பெயர்வுக்கு சிவலோகநாதன் குடும்பமும் ஆளாகியிருந்தது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, துணுக்காய் இப்படியே இடப்பெயர்வுக் காற்று அவர்களையும் இடம்மாற்றிக் கொள்ள, கடைசிமகள் வித்தியாவை பாரிய சிரமங்களுக்கு மத்தியில் கொழும்பில் உள்ள உறவினர்களிடம் அனுப்பி வைத்தனர்.

கல்வி கற்கவேண்டும் என்ற நோக்கத்தை மையமாகக் கொண்டு பெற்றோர் செயற்பட்டதற்கு வித்தியாவும் கல்வியில் சிறந்து விளங்கினார்.

கொழும்பில் வித்தியாவின் கல்வி தொடர்ந்து கொண்டிருந்தது.

2009 இல் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த போரில் அகப்பட்டு மீண்ட சிவலோகநாதன் குடும்பம் வவுனியா அருணாசலம் முகாமில் தங்கியிருந்தது.

2010 இல் அவர்கள் சொந்த ஊருக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டபோது தாம் பிறந்த புங்குடுதீவு மண்ணில் நிம்மதியாக வாழலாம் என்ற நம்பிக்கையோடு அவர்களின் மீள்குடியமர்வு நடந்தேறியது.

தாய், தந்தை, சகோதரர்கள் புங்குடுதீவில் குடியேறிய 2010 இல் கொழும்பில் படித்துக் கொண்டிருந்த வித்தியாவும் புங்குடுதீவுக்கு வந்துசேர்ந்தார். புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் அவரின் கல்வி தொடர்ந்தது.

மாணவி வித்தியா கல்வியில் மிகவும் ஆர்வமானவர். ஆங்கிலத்திலும் அவர் தேர்ச்சியடைந்திருந்தார்.

க.பொ.த சாதாரண தரத்தில் நல்ல பெறுபேற்றைப் பெற்றிருந்த அவர் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் கலைப் பிரிவில் உயர்தரத்தைத் தொடர்ந்தார்.


ஊடகக் கற்கைநெறி, புவியியல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைக் கற்றுவந்த வித்தியா பாடசாலைக்கு நல்ல பெறுபேற்றைப் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கையைக் கொடுத்துள்ளார். அந்த நம்பிக்கை 2015 ஒகஸ்ட் மாதம் நிறைவேறும் என எதிர்பார்க்கப்பட்ட போது..

(தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த சவப்பெட்டியில்கூட பணம் சம்பாதிக்க முயற்சி!



மகிந்த அரசாங்கம் சவப்பெட்டியில் கூட பணம் சம்பாதிக்க முயற்சித்தது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்த போதிலும், அவற்றுக்காக பணம் செலுத்தப்படவில்லை. பணம் செலுத்தும் பொறுப்பு இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மகிந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்கள் எல்லா விடயங்களிலும் பணம் சம்பாதிக்க முயற்சித்தனர். சவப்பெட்டியில் கூட பணம் சம்பாதிக்கவே முயற்சித்தனர்.

ஜூன் மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

20ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றது.

எனினும் புதிய தேர்தல் முறைமை ஒன்றுக்கு மக்கள் பழகுவதற்கு இரண்டு மூன்றாண்டுகள் காலஅவகாசம் தேவைப்படும்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனை அரசியல் பழிவாங்கல் என சிலர் பிரசாரம் செய்து வருவதாக நேற்று முன்தினம் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற போது பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-5)

# மின்சாரம் தடைப்படும்

வடமாகாணத்தில் உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடமாகாணத்தில் உள்ள சில பிரதேசங்களில் இன்று திங்கட்கிழமை முதல் 23 ஆம் திகதி சனிக்கிழமை வரை காலை 8.30 மணிதொடக்கம்மாலை 5.30 மணி வரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

18.05.2015 திங்கட்கிழமை யாழ் பிரதேசத்தில் உசன், விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி, நாகர்கோவில், குடாரப்பு, மாமுனை, செம்பியன் பற்று, மருதங்கேணி, தாழையடி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, முள்ளியான், கேவில், மாதகல், மாதகல் ஜெற்றி, யம்புகோளப்பட்டினம், கட்டுப்புலம்ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் இராசேந்திரகுளம், சூடுவெந்தபுலவு, உளுக்குளம்ஆகிய பிரதேசங்களிலும்

19.05.2015 செவ்வாய்க்கிழமை வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, இரட்டைப்பெரியகுளம், கற்குண்டமடு, அழகல்ல, அவுசதாப்பிட்டிய, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வட்டுப்பித்தன்மடுவிலிருந்து புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும்.

20.05.2015 புதன்கிழமை யாழ் பிரதேசத்தில் மாதகல், மாதகல் ஜெற்றி, யம்புகோளப்பட்டினம், கட்டுப்புலம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் இரட்டைப் பெரியகுளம், கற்குண்டமடு, அழகல்ல, அவுசதாப்பிட்டிய ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும்.

21.05.2015 வியாழக்கிழமை யாழ். பிரதேசத்தில் நகுலேஸ்வரம், மாவை கலட்டி, கொல்லன் கலட்டி, மாவிட்டபுரம், கீரிமலை, கீரிமலை துணைக் கடற்படை முகாம், காங்கேசன்துறை, வசாவிளான், டொலர் கூட்டுத்தாபனம், கரிசன் 5ஆவது பொறியியல் படை முகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், காங்கேசன்துறை இலங்கை கப்பற்கூட்டுத்தாபனம், பலாலி இராணுவத்தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படை முகாம், பலாலி இலங்கை விமானப் படை முகாம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படை முகாம் (புதியது), பலாலி விமானப் படை ஓய்வுகால விடுதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத் தில் மாமடுவிலிருந்து மகாகச்சக் கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன் மடு, வேப்பங்குளம், நெளுக்குளம், பம்பைமடு, CEC கல்லுடைக்கும் ஆலை, ஓமேகா லைன், தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா பல்கலைக் கழகம் மற்றும் பல்கலைக்கழக விடுதி ஆகிய பிரதேசங்களிலும்.

22.05.2015 வெள்ளிக்கிழமை யாழ் பிரதேசத்தில் உசன், விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி, மாதகல், மாதகல் ஜெற்றி, யம்புகோளப்பட்டினம், கட்டுப்புலம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும்.

23.05.2015 சனிக்கிழமை யாழ் பிரதேசத்தில் நாவற்குழி, கைதடி, மறவன்புலோ, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கைதடி, நுணாவில், மட்டுவில், வாகையடி, அறுகுவெளி, வடமாகாணசபை அலுவலகம், சங்கத்தானை, கச்சாய் வீதி, சாவகச்சேரி நகரம், அரசடி, சம்மந்தர் கடை, கிழவி தோட்டம், யாக்கரு, கலிகை, துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திரஅம்மன் கோவிலடி, கப்பூது, கல்வயல், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தொகுதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, நெளுக்குளத்திலிருந்து பம்பைமடு வரை, சின்னவ்லயாங்கட்டு, பரசன்குளம், விளாத்திக்குளம், இரணை இலுப்பைக் குளம், கோவில்புளியங்குளம், கல்மடு, கல்மடு மக்கள் வங்கி, CEC கல்லுடைக்கும் ஆலை, தொழில்நுட்பக்கல்லூரி, வவுனியா பல்கலைக் கழகம் மற்றும் பல்கலைக்கழக விடுதி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# மகிந்த தலைமையில் போர் வெற்றி விழா!

(கொழும்பு) —

**போர் வெற்றி நிகழ்வு இந்த முறையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொண்டாடப்படவுள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**



கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் இந்த நிகழ்வு நடத்தப்படவுள்ளது. தாய்நாடு அமைப்பு என்ற அமைப்பே இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது.

இந்த அமைப்பு அண்மையில் அரசியல்வாதிகள் மற்றும் தென்னிலங்கை புத்திஜீவிகளால் ஸ்தாபிக்கப்பட்டது.இந்த அமைப்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசனும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புலம்பெயர்ந்த தமிழர்களாலும், சர்வதேச நாடுகளாலும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்களின் கீழ் உண்மையான சமாதானத்தை பெறமுடியாது என்று முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே போர் வெற்றி நாளை போரினால் இறந்தவர்களுக்கான அனுஷ்டிப்பு நாளாக அரசாங்கம் நினைவுகூரவுள்ள நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷவின் தரப்பு அதனை போர் வெற்றி விழாவாக கொண்டாடவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இரு பொலிஸ் அதிகாரிகள் வாகனவிபத்தில் உயிரிழப்பு

கண்டி, மஹியங்கனை வீதி உடுதும்புர சேனாபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் அதிகாரிகள் பயணித்த வான், டிப்பர் ஒன்றுடன் மோதியதினாலே இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். இதே வேளை விபத்தில்காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### அலோசியஸ் பொன்ராஜா

(ஓய்வு பெற்ற புகையிரத ஊழியர்)

பாண்டியந்தாழ்வைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அலோசியஸ் பொன்ராஜா கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருவுடல் நாளை புனித நிக்கோலஸ் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி மயில்வாகனம் ஞானசகுந்தலா

கொக்குவில் மாத்தனையைப் பிறப்பிடமாகவும் கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் ஞானசகுந்தலா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் மு.ப.10 -நண்பகல்12மணிவரை Chapel Funerel home,8911 woodbine Ave, markham எனும் இடத்தில்நடைபெற்றுபின்னர் பூதவுடல்தகனம்செய்யப்படும்.



### யோகேந்திரன் நாகேந்திரன்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட யோகேந்திரன் நாகேந்திரன் கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல்12.30 மணியளவில் Elgin Mills Crematorium and Visitation Centre,1591 Elgin Mills Rd E,Richmond Hill, ON L4S 1M9,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சிவப்பிரகாசம் சிவராமலிங்கம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பை பிறப்பிடமாகவும் நல்லூர் தெகிவளை களுபோவிலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் சிவராமலிங்கம் கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை Mawson Chapel, Centennial park, Goodwood RD, Pasadena 5042 Australia என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### மகேந்திரன் தாமோதிரபிள்ளை

புங்குடுதீவு பெருங்காடு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் தாமோதிரபிள்ளை கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப.10மணிமுதல் ந.ப.12.30மணிவரை Stadtfriedhof Lahrer-Feld-Strasse 19,30659 Hannover, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிகோரி போராட்டம்



புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட மாணவிக்கு நீதி கோரியும் குற்றவாளி தரப்பில் சட்டத்தரணி ஆஜராகக் கூடாது என கோரியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தினை நல்லூர் கந்தன் ஆலயமுன்றலில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் முன்னெடுத்துள்ளனர்.

சட்டத்தரணிகளே உங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடக்காதீர்கள், கொடூர காமுகர்களை தூக்கிலிடுங்கள், இவர்களுக்கு கொடுக்கும் தண்டனை மற்றவர்களுக்கு பாடமாய் அமையட்டும் என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஊர்வலம் சென்று வடக்கு மாகாண முதலமைச்சருக்கு மகஜர் கையளிக்கப்பட்டதோடு அதன் பிரதிகள் பொலிஸாருக்கு கையளிக்கப்பட்டது.(இ-4)

# போராட்டம் தொடர்கிறது

திறந்த பல்கலைக்கழக பாட நெறி கட்டணத்தை அதிகரிக்க மேற்கொண்ட தீர்மானமானது, அநீதியானது என பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிராக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டிருந்தது. திறந்த பல்கலைக்கழகத்தின் பாடநெறி கட்டணத்தை குறைக்குமாறும், மாணவ ஒடுக்கு முறையை நிறுத்தி மாணவர்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறும் திறந்த பல்கலைக்கழக மாணவ ஒன்றிய இணைப்பாளர் அமில சந்தருவன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதியினுள், இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கபெறும் என தாம் நம்புவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார். (இ-5)

# மாணவியின் குடும்பத்திற்கு விஜயகலா எம்.பி.நிதியுதவி

(யாழ்ப்பாணம்)



புங்குடுதீவுமாணவி வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமைதொடர்பில் மகளிர் விவகார பிரதி அமைச்சர் ஊர்காவற்றுறை பொலிஸ் அத்தியட்சகரினை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக் காலை புங்குடுதீவிற்கு விஜயம் செய்த பிரதியமைச்சர் அங்கு ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரி எப். ஆர். பெனரரா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சேனரத்ன ஆகியோரினை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன் போது குறித்த மாணவி கொலை செய்யப்பட்டமை தொடர்பில் தீவிர விசாரணை மேற்கொண்டு வருவதாகவும்ஏற்கனவே மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து கொலை செய்யப்பட்ட மாணவியின் குடும்பத்தினருக்கு நிதியுதவியினையும் பிரதி அமைச்சர் வழங்கி வைத்தார். (இ-4)

# தவறான இந்திய வரைபடத்தை நீக்கியுள்ள முகநூல் நிறுவனம்

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் இடம் பெறாத, தவறான இந்திய வரைபடத்தை முகநூல் (பேஸ்புக்) நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி மார்க் ஜக்கர்பர்க், தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டதற்கு, நாடு முழுவதும் கடும் எதிர்ப்புக் கிளம்பியதையடுத்து, அந்த வரைபடத்தை தனது முகநூல் பக்கத்திலிருந்து அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை நீக்கியுள்ளார்.

முகநூல்நிறுவனத்தின்தலைமை செயல் அதிகாரியான மார்க் ஜக்கர்பர்க், ஆபிரிக்க நாடான மலாவியில், சமூக வலைத்தள நிறுவனத்தை அண்மையில் தொடங்கி வைத்தார். இந்த நிறுவனத்துக்காக, இணையதளம் மூலம் சேவை நோக்குடன் பணியாற்றும் இந்தியர்களுக்கு, இணையதள வசதி இலவசமாக வழங்கப்படும் என்று முகநூல் நிறுவனம் அறிவித்தது.

இந்த அறிவிப்புடன், மார்க் ஜக்கர்பர்க் தனது முகநூல் பக்கத்தில் ஜம்மு-காஷ்மீர் மாநிலம் இடம்பெறாத தவறான இந்திய வரைபடத்தை வெளியிட்டிருந்தார்.

இதற்கு நாடு முழுவதும் இணைத்தள பயன்பாட்டாளர்கள், தங்களது முகநூல் பக்கத்தில் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அவர்கள், இதுதொடர்பான தங்களது பதிவில், "தவறான இந்திய வரைபடம், முகநூல் பக்கத்திலிருந்து நீக்கப்படாவிட்டால், இந்தியர்கள் அனைவரும் தங்களது முகநூல்கணக்கை முடித்துக்கொள்ள வேண்டிவரும்" என்று காட்டமாக தெரிவித்திருந்தனர். (இ-5)




# டில்லியில் கடந்த 4 மாதங்களில் மட்டும் 2,100 குழந்தைகளைக் காணவில்லை!

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு

டில்லியில் கடந்த 4 மாதங்களில் மட்டும், 2,100 குழந்தைகளை காணவில்லை என அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

2015ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து ஏப்ரல் 15ஆம் திகதி வரையில் தேசிய தலைநகர் டில்லியில் 2,100 குழந்தைகளை காணவில்லை என்றும், கடந்த சிலவருடங்களாக குழந்தைகள் மாயமாகி வருகின்றனர் என்றும் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும் பொலிஸார் காணாமல்போன குழந்தைகளை தேடி, ஒவ்வொரு வருடமும் பாதி குழந்தைகளை போராடி மீட்கின்றனர். ஆனால் அதிகமான குழந்தைகளை காப்பாற்ற முடியாத அவலநிலையே உள்ளது. இவற்றில் பெரும்பாலான குழந்தைகள் பெண்கள் என்பதால், அவர்கள் விபசாரத்திற்கு தள்ளப்படலாம் என்ற கவலையும் அதிகரித்துள்ளது.

டில்லி பொலிஸ் தகவலின்படி, 2015ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து ஏப்ரல் 15ஆம் திகதி வரையில் 2,168 குழந்தைகளை காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 1,212 குழந்தைகள் பெண்கள், 956 குழந்தைகள் ஆண்கள் ஆவர். இந்த குழந்தைகளில் 1,202 பேர் மீட்கப்பட்டு விட்டனர். ஆனால் 586 பெண் குழந்தைகளும், 380 ஆண் குழந்தைகளும் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. கடந்தவருடம் மட்டும் தலைநகர் டில்லியில் 7,572 குழந்தைகளை காணவில்லை. இவர்களில் 4,166 பேர் பெண் குழந்தைகள் ஆகும். 3,406 ஆண் குழந்தைகள் ஆகும். காணாமல் போன இந்த குழந்தைகளில் 5,695 பேரை பொலிஸார் மீட்டு அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளனர். 1,199 பெண் குழந்தைகள் உட்பட 1,877 குழந்தைகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

2013ஆம் ஆண்டு 5,809 குழந்தைகள் மாயமாகி உள்ளனர். இவர்களில் 1,025 பேர் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. "படிப்பதற்கு பயம்,குடும்ப பிரச்சினை, ஓடிப்போதல் மற்றும் பெற்றோர்கள் திட்டுதல் உள்ள சில பிரச்சனைகள் காரணமாக குழந்தைகள் தங்களது வீட்டை விட்டு ஓடி விடுகின்றனர். அவர்கள், குழந்தை கடத்தல் கும்பல் மற்றும் பாலியல் தொழில் செய்பவர்களால் கடத்தப்பட்டு விடுகின்றனர்," என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. டில்லி பொலிஸ் இந்த நிலையை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என தெரியவருகிறது. (இ-5)

# இந்தியாவில் புற்றுநோயால் தினமும் 1,300 பேர் மரணம்

இந்தியாவில் புற்றுநோய்க்கு தினமும்1,300-க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகிஉள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையின்(ICMR), தேசிய புற்றுநோய் பதிவக திட்ட, தகவலின்படி 2012ஆம் ஆண்டு முதல், 2014ஆம் ஆண்டுவரையில் புற்றுநோய் காரணமாக இந்தியாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கையானது 6 சதவீதம்உயர்ந்து உள்ளது என்பதை காட்டுகிறது. மத்திய சுகாதாரத் துறைதகவலின்படி "2014ஆம்ஆண்டு மட்டும் புற்றுநோய் காரணமாக இந்தியாவில் சுமார் 5 இலட்சம் பேர் வரையிலானோர் உயிரிழந்தனர்," என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 28,20,179 ஆக பதிவாகியுள்ளது. இறப்பு எண்ணிக்கையானது 4இலட்சத்து 91ஆயிரத்து 598 பேராகும்

2013ஆம் ஆண்டில் புற்று நோய் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 29,34,314 பேராகும், இதே வருடத்தில் புற்றுநோய் காரணமாக 4இலட்சத்து78ஆயிரத்து 180 பேர் உயிரிழந்துள்ளனர். 2012ஆம் ஆண்டில் புற்றுநோய்க்கு சுமார் 4,65,169 பேர் தங்களது உயிரை இழந்துள்ளனர். இதே வருடத்தில் புற்றுநோய் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 30,16, 628 ஆகும்.

"வயது முதிர்வு, ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைகளைகள், புகையிலை மற்றும் புகையிலை பொருட்கள் பயன்படுத்துதல், ஆரோக்கியமற்ற உணவுமுறைகள், நோய் நிர்ணய பரிசோதனை வசதிகள் குறைபாடு ஆகிய சில காரணங்களால் புற்றுநோயினால் இறப்போர் எண் ணிக்கை உயர்ந்து உள்ளது," என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

நாட்டில் புற்றுநோய் சிறப்பு ஆலோசனைக்கும், வசதிகளை வலுப்படுத்தும் வழிமுறைகளை மாநிலங்களில் பரப்பவும் மத்திய அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியது. புற்றுநோயை தொடர்ந்து இந்தியாவில் அதிகபேரது உயிரை வாங்கிய நோயாக காசநோய்உள்ளது. நாட்டில்2011ம்ஆண்டு காசநோய்க்கு 63,265 பேரும், 2012ஆம் ஆண்டு 61,887 பேரும், 2013ஆம் ஆண்டு 57,095 பேரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்படி பதிவுசெய்யப்பட்டு உள்ள தகவல்கள் இதனை காட்டுகிறது. அரசு நோயாளிகளுக்கு காசநோய் எதிர்ப்பு மருந்து உட்பட பல்வேறு வசதிகளை செய்து கொடுத்து வருகிறது.

சுமார் ஒரு இலட்சம் மக்கள் வசிக்கும் பகுதியில், தரமான ஆய்வுக்கு நுண்ணோக்கியியல் மையங்களை அரசு நிறுவிஉள்ளது. இதே போல் 50 ஆயிரம் மக்கள் வசிக்கும் பழங்குடியின மற்றும் மலைப் பகுதிகளிலும் ஆய்வு மையங்களை அரசு அமைத்து உள்ளது. நாட்டில் அரசு 13,000 நுண்ணோக்கியியல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 6 லட்சம்நேரடி சிகிச்சை மையங்களும் அமைக்கப்பட்டுள்ளது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# உலகின் வல்லமை வாய்ந்த செல்பி

(பீஜிங்)



சீனாவிற்கு அண்மையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அங்கு சீனப் பிரதமர் லீ கேகியாங் உடன்எடுத்துக் கொண்ட செல்பியை 'உலகின் வல்லமை வாய்ந்த செல்பி" என்று பிரபல 'போர்ப்ஸ்" இதழ் புகழ்ந்துள்ளது.

தனது சுற்றுப் பயணத்தின் போது மோடி, சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள 'சொர்க் கக் கோயில்" அமைந்திருக்கும் இடத்துக்குச் சென்றார். அங்கு சீன மாணவர்களின் "தாய் சீ" பயிற்சிகளைக் கண்டுகளித்தார்.

அப்போது அவருடன் லீ கேகியாங்கும் உடனிருந்தார். உடனே அவரைத் தன் அருகில் அழைத்து மோடி செல்பி எடுத்துக்கொண் டார். அந்தப் புகைப்படத்தை "இது செல்பி நேரம்! மிக்க நன்றி பிரதமர் லீ" என்ற வாசகத்துடன் தனது சமூக வலைத்தளப் பக்கங்களில் மோடி பகிர்ந்துகொண்டார்.

பேஸ்புக்கில் இந்தப் புகைப்படம் பதிவேற்றப்பட்ட 6 மணி நேரத்துக்குள் சுமார் 5 இலட்சத்துக்கும் அதிகமானவர்களால் "லைக்" செய்யப்பட்டுள்ளது. அவர்களில் பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுகர்பெர்க்கும் ஒருவர் ஆவார். டுவிட்டரில் இந்தப் படம் 3 ஆயிரத்துக்கும் அதிகமான முறை 'ரீடுவீட்" செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புகைப்படம் குறித்து 'போர்ப்ஸ்" இதழ் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில், "இரண்டு வல்லவர்களை ஒருங்கே கொண்டிருக்கும்வல்லமை வாய்ந்த செல்பி" என்று கூறியுள்ளது.

இந்தப் புகைப்படத்தைப் பார்த்த பெரும்பாலான சீனர்கள் தங்கள் பிரதமருக்கு வாழ்த்துகள் தெரிவித்துள்ளனர். மற்றும் பலர், இந்திய அரசியல் தலைவர்களைப் போல ஏன் சீனத் தலைவர்கள் சமூக வலைத்தளங்களில் ஈடுபாடு காட்டுவதில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் ஜனாதிபதிக்கு மரண தண்டனை எதிரொலி

# எகிப்தில் 3 நீதிபதிகள் சுட்டுப் படுகொலை!

(சினாய்)

**எகிப்தில் முன்னாள் ஜனாதிபதி முகமது மோர்ஸிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், எகிப்தின் சினாய் பகுதியில் மூன்று நீதிபதிகள் மர்ம நபர்களால் நேற்று முன்தினம் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை மேலும் 3 நீதிபதிகள் படுகாயம் அடைந்துள்ளனர்.**


மோர்ஸி

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முகமது மோர்ஸிக்கும் அவரது ஆதரவாளர்கள் 100 பேருக்கும் கெய்ரோ நீதிமன்றம் நேற்று முன்தினம் மரண தண்டனை விதித்தது. 2011 ஆம் ஆண்டில் மோர்ஸியின் ஆதரவாளர்கள் சுமார் 20 ஆயிரம் பேர் சிறையை உடைத்து வெளியேறிய வழக்கில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பால் எகிப்தில் பதற்றமான சூழ்நிலை எழுந்துள்ளது. மோர்ஸியின் 'முஸ்லிம் சகோதரர்கள்' கட்சியினர் ஆங்காங்கே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் மோர்ஸிக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்ட சில மணி நேரத்தில் சினாய் பகுதியில் அல் ஆரிஷ் நகரில் நீதிபதிகள் சென்ற பேருந்தை குறிவைத்து மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டனர். இதில் மூன்று நீதிபதிகள் உயிரிழந்தனர். மேலும் 3 நீதிபதிகள் படுகாயம் அடைந்தனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. ஆனால் மோர்ஸிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதை கண்டித்து இத்தாக்குதல் நடைபெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். தாக்குதல் நடந்த பகுதி 'அன்சார் பெய்ட் எல் மக்தஸ்' என்ற தீவிரவாத குழுவின் ஆதிக்கம் மிக்க பகுதியாகும். இந்த அமைப்பு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு ஆதரவானது ஆகும்.

ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாத அமைப்புக்கும் முஸ்லிம் சகோதரர்கள் கட்சிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக தற்போதை எகிப்து ஜனாதிபதி அல் சிசி பகிரங்கமாக குற்றம் சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 55 பேர் சுட்டுப் படுகொலை

இரண்டு கிராமங்கள்மீது போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது 55 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

'போகோ ஹராம்' என்ற தீவிரவாத அமைப்பு நைஜீரிய அரசுக்கு எதிரான வன்முறை செயல்களில் ஈடுபட்டு வருகிறது. வெடிகுண்டு தாக்குதல் மற்றும் அப்பாவி மக்களை சுட்டு கொல்வது என பல்வேறு தாக்குதல்களை நடத்தி ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை பறித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நைஜீரியாவின் வடகிழக்கில் உள்ள மைதுகுரி நகரின் அருகே இருக்கும் பேல் மற்றும் காயாமலா என்ற இரு கிராமங்கள் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் பேல் கிராமத்தை சேர்ந்த 30 பேரும் காயாமலா கிராமத்தில் 25 பேரையும் தீவிரவாதிகள் சுட்டு கொன்றுள்ளனர். (இ-3-5)

## விமானக் குண்டுவீச்சில் 22 தீவிரவாதிகள் பலி!

அமெரிக்கா -பாகிஸ்தான் விமானப்படை விமானங்கள் தீவிரவாதிகளை இலக்கு வைத்து மேற்கொண்ட தாக்குதலில் 22 தீவிரவாதிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. கராச்சி நகரில் கடந்த 13 ஆம் திகதி இஸ்மாயிலி முஸ்லிம்கள் தங்கள் வழிபாட்டு தலத்துக்கு பேருந்தில் சென்று கொண்டிருந்த போது. தீவிரவாதிகள் வழிமறித்து தாக்குதல் நடத்தினர்.

இந்த கொடூர தாக்குதலில் 57 அப்பாவி சிறுபான்மை மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தான் தலிபான் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற ஜுண்டுல்லா மற்றும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாத இயக்கங்கள் பொறுப்பேற்றுள்ளன.

இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தானில் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் விமானப்படை விமானங்கள் அதிரடியாக குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதில் 22 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகள் வேட்டையை தீவிரப்படுத்திய பாகிஸ்தான், நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள வடக்கு வசிரிஸ்தானின் வாரேக்கா மண்டி பகுதியில் விமான தாக்குதலை நடத்தியது. இதேவேளை அமெரிக்க விமானங்களும் குண்டு வீசி தாக்குத் நடத்தின. உஸ்பெகிஸ்தான். ஆப்கானிஸ்தான் நாடுகளை சேர்ந்தவர்களும். பாகிஸ்தான் தலிபான் தீவிர வாதிகளும் கொல்லப்பட்டதாக தகவ ல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (இ-5)

## தத்தளிக்கும் குடியேற்றவாசிகளை மீண்டும் கடலில் தள்ளிவிடாதீர்கள்

### ஐ.நா.மனிதவுரிமை ஆணையாளர் ஹூஸைன் வேண்டுகோள்

கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் குடியேறிகளை மீண்டும் கடலில் தள்ளிவிட வேண்டாமென தாய்லாந்து, இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர்செயிட் அல்ஹூஸைன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்நாடுகளின் கொள்கைகள் பயங்கரமானதாக உள்ளது. படகுப் பயணம் மேற்கொண்ட குடியேறிகள் 6 ஆயிரம் பேர் வரை, கடலில் தத்தளித்துக் கொண்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ள நிலையில், இவர்களது உயிரைக் காப்பாற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.



சட்டவிரோதக் குடியேறிகள் 800 பேர் வரை, இந்தோனேசியா வந்தடைந்த சிறிது நேரத்தில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இதில் பங்களாதேஷைச் சார்ந்தவர்களும், அடக்குமுறை, அச்சம் காரணமாக மியன்மாரிலிருந்து வெளியேறும் ரொஹிங்யா முஸ்லிம்களும் உள்ளனர். முஸ்லிம்கள் எதிர்நோக்கும் கடுமையான மனிதவுரிமை நிலைமைகள் குறித்து மியன்மார் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்என ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)




## 1000 ஆண்டுகள் பழைமையான இந்துக் கோவில் கண்டுபிடிப்பு

(தாகா)

பங்க தேசத்தில், ஆயிரம் ஆண்டுகள் பழைமையான இந்து கோவிலின் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பங்க தேசத்தின் தினாஜ்பூர் என்ற இடத்தில், அரசு நிலத்தில் சிலர் விவசாயம் செய்து வந்தனர்.



சில நாட்களுக்கு முன், அந்த இடத்தை தோண்டிய போது, பழங்கால செங்கற்கள் மற்றும் கோவில் இருந்ததற்கான அடையாளம் தென்பட்டது.

இந்தத் தகவல், தொல்பொருள் ஆய்வுத்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் மேற்கொண்ட விரிவான ஆய்வில், புதைந்து, சிதைந்து கிடந்த கோவில் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கிருந்த சிலைகள், கட்டட மிச்சங்களை வைத்து பா[illegible]கும்போது, கோவில், எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என தெரிய வந்துள்ளது. மேற்கொண்டு அந்தப் பகுதியில், அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த மாதமும், இந்தப் பகுதியில் மற்றொரு கோவிலின் சிதறல்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வங்கதேசத்தின் தலைநகர் தாகா அருகே உள்ளது தாகேஸ்வரி கோவில். அந்நாட்டின் மிக பழைமையான இந்து கோவிலாக கருதப்படும் இக்கோவில், 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என தெரிய வருகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோழை பலமுறை செத்துப் பிழைக்கிறான்.
ஆனால் வீரன் ஒருமுறைதான் சாகிறான்.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## காப்பாற்ற வழி ஏதுமின்றி கதறி அழுத நாளின் நினைவு...

வன்னிப்பெரு நிலப்பரப்பில் நடந்த கொடூர யுத்தத்தின் இறுதிநாளின் நினைவு இன்று. இந்த நாள் பலருக்கு இறுதிப் பயணமுமாயிற்று.

வன்னியில் போர் ஆரம்பித்த நாள் முதல் எத்தனையோ இடப்பெயர்வு, பதுங்குகுழி வாழ்க்கை, ஒரு நேரம் உண்பதற்கும் உணவில்லாக் கொடுமை.

மருத்துவ வசதியில்லாமல் மரணித்த சோகங்கள், இதனிடையே விமானக் குண்டு வீச்சுக்கள். ஆயுதம் ஏந்துவதற்கான ஆட்சேர்ப்புக்கள். எந்த வகையிலும் மீளமுடியாமல் ஓடி ஓடி முள்ளிவாய்க்காலில் சரணடைந்த துன்பத்தில் முற்றுப்பெற்ற யுத்தம் பல்லாயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கையை முடித்து வைத்துவிட்டு முடிந்துபோனது.

ஓ! சர்வதேசமே எங்களைக் காப்பாற்று; உயிர்ப்பிச்சைதா என்றெல்லாம் கத்திக் கதறி எந்தப் பலனும் இல்லாமல் பறிபோனவை போக, நந்திக் கடல் [illegible]ண்டிய அந்த மனிதவதை நாளின் ஆறாவது ஆண்டு நினைவு இன்று.

இலங்கையின் பேரினவாத பாசிசத்துக்கு தமிழ் இனம் காலத்திற்குக் காலம் இரையாகிப் போனாலும் தமிழ் இனத்தைக் கொன்றொழி என்ற கட்டளையை நிறைவேற்றவே வன்னி யுத்தம் நடந்தது என்பதால் முள்ளிவாய்க்கால் கொடூர யுத்தம் முன்பு எப்போதும் நடந்திராத பேரழிவு. ஆதலால் எங்கும் மனித உடலங்கள் பெருகிக் கிடந்தன.

தாயை, தந்தையை, பிள்ளைகளை, மனைவியை, கணவனை... எப்படியாக இழப்பின் துயரத்தைச் சொல்லி அழமுடியும்?

பெற்ற தாய் வெடிபட்டு தன் மண்ணை குருதியால் நனைத்துக் கிடக்கையில் தாயின் உடலை திரும்பிப் பார்த்தபடியே ஓடிச் சென்ற சோகக் கதைகள் கொஞ்சமல்ல.

க[illegible]கிரேதாயுகத்தில் இராமாயண யுத்தம். துவாபர யுகத்தில் பாரதப்போர். கலியுகத்தில் வன்னிப் பெரும் போர். முன்னைய யுகங்களில் நடந்த யுத்தங்களில் தர்மம் வென்றது. யுத்தத்தில் ஈடுபட்ட போர் வீரர்களே கொல்லப்பட்டனர். அவ்வாறு போரில் இறந்தவர்களுக்கும் இறுதிக் கடன்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆனால் கலியுகத்தில் நடந்த வன்னி யுத்தத்தில் அதர்மம் வென்றது. போரில் பொதுமக்களும் கொல்லப்பட்டனர். யுத்தத்தில் சிக்கி மரணித்தவர்களின் இறுதிக் கடன்களைச் செய்வார் யாருமின்றி உடலங்கள் நிலத்தில் கிடந்து போயின.

உறவினர்களைப் பறிகொடுத்தவர்கள் கூடியிருந்து ஒப்பாரி வைத்து அழுது ஆற்றுப்படுவதற்கும் தடை விதித்து முட்கம்பி வேலிக்குள் முடக்கிய கொடுமைகள்.

அழுதால், பிள்ளை இறந்த செய்தி தெரிந்து விடுமே என்ற ஏக்கத்தில் கண்ணீராய் பீறிய குருதியை மீளவும் இதயத்தில் செலுத்தி துன்பம் எனும் சாவியால் இறுக்கி பூட்டிய அந்த நினைவுகள்.

ஆம், இன்று மே 18. 2009 மே 18இல் முடிவுற்றுப் போன யுத்தம் தந்த ஒட்டுமொத்த உறவுகளின் உயிரிழப்பை நினைவுகூருகின்ற நாள். இந்த நாளில் தீபம் ஏந்தி அஞ்சலிப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமை. இந்த நாளிலும் எரிகின்ற தீப ஒளியில் அரசியல் ஆதாயம் தேடுகின்ற கயமைத்தனத்தை விடுவதே நல்லது.

எங்களால் காப்பாற்ற முடியாமல் போன எங்கள் உறவுகளின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போம். பிரார்த்தனை அமைதியாகத் துயில் கொள்ளும் ஆன்மாக்களுக்கு ஆறுதல் தருவதாக இருக்கட்டும்.

அழுகையும் எரிகின்ற தீப ஒளியும் அமைதியாய் தூங்குகின்ற ஆத்மாக்களை கலங்கச் செய்து விடலாகாது. இறைவனோடு இரண்டறக் கலக்கச் செய்யட்டும். உளப் பூர்வமாய் பிரார்த்திப்போம்.

# குற்றவாளிகளை காப்பாற்றாதீர்கள் அதிகபட்ச தண்டனை கொடுங்கள்

## மாணவி கொலை குறித்து அமைச்சர் டெனீஸ்வரன்

வடமாகாணத்தில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் பொலிஸாரும் பொதுமக்களும் கூடிய கவனம் செலுத்துவதன் மூலமே குற்றங்களை கட்டுப்படுத்த முயும் என வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எமது தமிழ் மக்கள் யுத்தத்தினால் கொல்லப்பட்ட பின்பு தற்போது ஒரு சுமுகமான சூழலில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான வேளையில் வாள்வெட்டுக்களும், கொள்ளைகளும், கொலைகளும், பாலியல் பலாத்காரங்களும் அதிகரித்துள்ளமை மிகவும் வேதனையளிக்கின்ற விடயமாகும். அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்திலே பாலியல் பலாத்காரங்களும் கொலைகளும் அதிகரித்துள்ளது. குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் பொலிஸாரும் பொதுமக்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

யாழ் மாவட்டத்திலும் சரி ஏனைய மாவட்டங்களிலும் தற்போது போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமையும் கொலைகள் கொள்ளைகளுக்கு காரணமாக அமைகின்றன. இவ் விடயத்தில் பொலிஸாருடன் இணைந்து எமது சமூக அமைப்புக்களும் சிவில் குழுக்களும் இணைந்து குற்றவாளிகளையும் அதற்கு உடந்தையாக உள்ளவர்களையும் இனம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி அதிகூடிய தண்டனையை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்

கடந்த காலங்களில் பல குற்றவாளிகள் ஏதோ ஒருவகையில் தண்டனையில் இருந்து தப்பி விடுகின்றனர். இதனால் குற்றம் செய்பவர்களுக்கு பயம் அற்று விட்டது. இனிவரும் காலங்களில் குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக் கொடுக்க சட்டத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும். குற்றவாளிகளை காப்பாற்றும் முனைப்புடன் செயற்பட வேண்டாம். அதிகபட்ச தண்டனைகளை வழங்குவதன் ஊடாகவே சமூகத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் என மீன்பிடி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை புங்குடுதீவில் கூட்டு வன்புணர்வின் மூலம் கொடூரமாக கொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவியின் கொலை தொடர்பாக அக் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தனது அனுதாபங்களை தெரி விப்பதுடன் இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அதிகபட்ச தண்டனையை பெற்றுக் கொடுக்க பொலிஸார் தீவிரமாக செயறபட வேண்டும் என்றும் தனது அறிக்கையில் அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார். (இ)

## சூதாட்டம் நால்வர்; கைது

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நான்கு பேரை நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் கைது செய்துள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

சூதாடுவதாக தங்களுக்கு கிடைத்த தகவலை அடுத்து, மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சந்தேக நபர்களிடமிருந்து காட்ஸ் பக்கெட் உள்ளிட்டவற்றை கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சந்தேக நபர்களை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ)

# இலங்கையை சேர்ந்த 40 பேர் கறுப்புப் பணம் பதுக்கிவைப்பு

(கொழும்பு)

சுவிஸ் வங்கியில் இலங்கையை சேர்ந்த 40 பேர் கறுப்பு பணம் பதுக்கி வைத்துள்ளதாக சர்வதேச செய்தியாளர்களின் கூட்டமைப்பினர் வெளியிட்டுள்ள தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பிரான்ஸ் நாட்டின் செய்தித்தாள் ஒன்றில் வெளியாகியுள்ள செய்தியில் இருந்து இந்த விபரம் பெறப்பட்டுள்ளது.

அதன்படி உலகம் முழுவதும் இலங்கையை சேர்ந்த ஒரு இலட்சம் பேர் சுவிஸ் வங்கியில் கணக்கு வைத்துள்ளனர்.

இவ்வாறு புதைந்துள்ளவற்றில் 60 ஆயிரம் கணக்குகளில் விவரங்கள் முன்னரே கசிந்தன. இந்நிலையில் மீதமுள்ள கணக்குகளின் விவரங்கள் இப்போது வெளியாகியுள்ளன.

அதன்படி எட்மண்ட் விஜினாய்க பாலசூரிய என்பவர் மற்றும் அவரின் குடும்பத்தினரின் பெயரில் அதிகளவு பணம் செலுத்தப்பட்டுள்ளது. இவருக்கு வடக்கு கொழும்பில் விளையாட்டு பொருட்கள் அங்காடியுள்ளது என வங்கி கணக்கு ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவரது மனைவியின் கணக்கில் 10, 668, 094 அமெரிக்க டொலர், மகளின் கணக்கில் 1,989, 370 டொலர், உட்பட பாலசூரிய மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களில் வங்கி கணக்கில் 16, 325, 742 அமெரிக்க டொலர் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை பாலசூரியவுக்கு சுவிஸ் வங்கியில் பல வருடங்களாக கணக்கு இருப்பதாக வங்கிசார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் வங்கி கணக்கை முடித்து கொண்டவர்கள் பட்டியலில் இலங்கையின் உயர்ந்த விருதுகளில் ஒன்றான தேசாமான்ய விருதை பெற்றவரான ஜீவக லலித் புபேந்திர கொட்டிலவாலா பெயரும் உள்ளதாக அத்தகவலின் மூலம் அறிய முடிகின்றது.

அவர் கடந்த 1988 முதல் 1997 வரை தனது கணக்கின் மூலம் பரிவர்த்தனை செய்துள்ளார்.

இலங்கையில் இருப்பதாக விலாசம் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான கணக்குகள் வைத்திருப்பவர்கள் அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகளில் வசிப்பதாகவும் அச்செய்தி குறிப்பிடுகின்றது.

இலங்கையில் உள்ளவர்கள் வெளிநாடுகளில் வங்கி கணக்கு வைத்துகொள்ள உரிமையுள்ளதா என்ற கேள்விக்கு இலங்கையின் செலாவணி கட்டுப்பாட்டாளர் ரூபசிங்க பதில் கூற மறுத்துவிட்டார். (இ-5)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## குடும்பம் அமைதிபெற



இணக்கத்தை வற்புறுத்தும் போதும், பிணக்கத்தை தீர்க்கும் போதும் இன்சொல்லையே உள்ளமும், உதடும் உபயோகப்படுத்த வேண்டும். இன்சொல்லினால் கெடுதல் ஒழிய நன்மைகள் பல பெறலாம்.

குடும்ப அமைதியைப் பெற, சலனமில்லாததும், விசாலமானதுமான மனம் வேண்டும்.எதையும் தாங்கும் இதயம் என்பார்களே அது இங்கே தான் வேண்டும். பொறுமை,சகிப்புத்தன்மை இவை எல்லையின்றித் தேவையாகும். எவ்வளவு பெரிய குழப்பமானாலும் பொறுமை ஒன்றினாலேயே வெற்றி கண்டு விடலாம்.

பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமையும், பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழிகளாகும். அதேபோல் பிறர் கூறும் கடுஞ்சொற்களையும் அவை சொல்லப்படாததுபோல் பாவித்து ஒதுக்கிவிட வேண்டும். அப்போதுதான் அமைதி பிழைக்கும்.

தற்போது அம்மா மகளுக்கிடையே கூடப் பிணக்குகள் தோன்றுவதையும்,வளர்வதையும் பார்க்கிறோம். அவர்களுக்கிடையே கூட, விட்டுக் கொடுத்தல் (Adjustment) இல்லையானால் வேறு யாரிடம் அதைத் தேடுவது? அம்மாவுக்குப்பெண்ணாக இருக்கும் போதே இப்படி என்றால், பின்னால் வாழ்க்கை எப்படி அமையும்?அப்புறம் யார் மேல் குற்றம் சொல்வது?

தன் [illegible] வாழ்க்கைத் துணை ஒத்துக்கொள்ளவில்லையென்றால் அது எவ்வளவு [illegible]யானாலும் சிறிது காலத்திற்கு அவர்கள் ஒத்துக் கொள்ளும் வரை [illegible]வைக்க வேண்டியதுதான். [illegible] அமைதியை இழந்து பெறுவது ஞானமேயாயினும்அதனால் ஒரு பயனும் வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்வி வலய மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இதில் பெண்களுக்கான போட்டியில் முதல் மூன்று இடங்கள் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

13 வயதுப் பிரிவு

100 மீற்றர் ஓட்டம்

ஜே. ஆர்த்தி (15.1செகி) சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, எம். நிருத்திகா சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, ஜி.றிஸ்மிறிசா வேம்படி மகளிர் கல்லூரி, 200 மீற்றர் ஓட்டம்- ஜே. ஆர்த்தி (32.6 செகி) சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, கே. நந்திகா புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம், ஜி. றிஸ்மிறிசா வேம்படி மகளிர் கல்லூரி

நீளம் பாய்தல்

ஆர். இளவேனி (3.86 மீ) சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஜி. றிஸ்மிறிசா வேம்படி மகளிர் கல்லூரி, கே.நந்திகா புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம்.

உயரம் பாய்தல்

கே. நந்திகா (1.20 மீ) புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம் , ஐ.தமயந்தி யாழ். இந்து மகளிர் கல்லூரி, இ. சுஜிதா கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.

15 வயதுப் பிரிவு

100 மீற்றர் ஓட்டம்

எஸ்.சுகந்தி நாவாந்துறை றோ.க.த.பாடசாலை, என்.விதுசனா கொக்குவில் இந்துக் கல்லூரி, எல்.நெகேமியா திருக்குடும்ப கன்னியர் மடம்.

200 மீற்றர் ஓட்டம்

எஸ்.சுகந்தி நாவாந்துறை றோ.க.த.பாடசாலை, எல்.நெகேமியா திருக்குடும்ப கன்னியர் மடம், எம்.சங்கீதா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

400 மீற்றர் ஓட்டம்

கே.கிசோமிகா நடராஜ இராமலிங்க வித்தியாலயம், கே. விதுசா உரும்பிராய் இந்துக்கல்லூரி, ஆர்.கம்சிகா பெரியபுலம் மகா வித்தியாலயம்.

நீளம் பாய்தல்

என்.விதுசனா கொக்குவில் இந்துக் கல்லூரி, எம்.சகானா பெரியபுலம் மகா வித்தியாலயம், எம்.சங்கீதா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

உயரம் பாய்தல்

எம்.நிசாந்தினி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இ.பிரவீனா அத்தியார் இந்துக் கல்லூரி, ஜே.பிரியதர்சினி கொக்குவில் இந்துக் கல்லூரி

குண்டுபோடுதல்

பி.சிந்துரா ஆவரங்கால் நடராஜ இராமலிங்கவித்தியாலயம், ஜி.பைரவி வேம்படி மகளிர் கல்லூரி, ஜே.நியோமி ஜொனா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

தட்டெறிதல்

எஸ். கஜனி வாதரவத்தை வித்தியாலயம், இ.டர்சி உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், ரி.சுகன்ஜா அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு

100 மீற்றர் ஓட்டம்

யு.மானசீதா வேம்படி மகளிர் கல்லூரி, எ.மேரிதர்சிகா சுண்டுக்குளிமகளிர் கல்லூரி, ஆர்.லக்சனா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

200 மீற்றர் ஓட்டம்

யு.மானசீதா வேம்படி மகளிர் கல்லூரி, எ.மேரிதர்சிகா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஜே.சாம்பவி கனகரத்தினம் மகா வித்தியாலயம்

400 மீற்றர் ஓட்டம்

என்.எப்சிபா திருக்குடும்ப கன்னியர் மடம், கே.அஜந்தினி யாழ். இந்துமகளிர் கல்லூரி , எஸ். அன்கேலா சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்.

800 மீற்றர் ஓட்டம்

யு.புவிநிலா யாழ். இந்துக் கல்லூரி , ஆர்.அஜந்தா உயரப்புலம் மகா வித்தியாலயம், இ. தமிழரசி வாதாரத்தை வித்தியாலயம்.

1500 மீற்றர் ஓட்டம்

ஆர்.அஜந்தா உயரப்புலம் மகா வித்தியாலயம், கே.நிதர்சனா திருக்குடும்ப கன்னியர் மடம், என்.சிவானுஜா யாழ். இந்து மகளிர் கல்லூரி.

நீளம் பாய்தல்

யு.மானசீதா வேம்படி மகளிர் கல்லூரி, எ.மேரிதர்சிகா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி., ரி.விதூசனா ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்,

உயரம்பாய்தல்

எ.நர்மதா யாழ். இந்து மகளிர் கல்லூரி, கே.தமிழரசி கொக்குவில் இந்துக் கல்லூரி, எஸ்.பவதர்சினி வேம்படி மகளிர் கல்லூரி

குண்டு போடுதல்

ஆர்.சுஜீபா வைத்தீஸ்வரா கல்லூரி, ஆர்.தட்சாயினி வேம்படி மகளிர் கல்லூரி, இ.சிவாகினி யாழ். இந்து மகளிர் கல்லூரி.

தட்டெறிதல்

என்.சிவானுஜா யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஆர்.சுஜீபா வைத்தீஸ்வராக் கல்லூரி, வை.யாழினி வாதரவத்தை வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு

100 மீற்றர் ஓட்டம்

எஸ். நிதுசனா யாழ். இந்து கல்லூரி, எம்.மதுசாளினி இடைக்காடு மகா வித்தியாலயம், எஸ்.பிருந்தா அத்தியார் இந்துக் கல்லூரி

200 மீற்றர் ஓட்டம்

எஸ்.நிதுசனா யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஜே.சித்திரா சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, பி.இந்துஜா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

400 மீற்றர் ஓட்டம்

ஜே.சித்திரா சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, பி.இந்துஜா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. கே.பௌளா சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்.

800 மீற்றர் ஓட்டம்

கே. பௌளா சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்., ஜே.சித்திரா சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, எஸ்.சாதனி அத்தியார் இந்துக் கல்லூரி,

1500 மீற்றர் ஓட்டம்

கே.கம்சிகா அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம், வி.விஜிதா அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், கே.பௌளா சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்.

5000 மீற்றர் ஓட்டம்

வி.விஜிதா அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம், ஆர்.டயானி அத்தியார் இந்துக் கல்லூரி , கே.கம்சிகா அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.

400 மீற்றர் தடைதாண்டல்

ஜே.பி.டேனுஜா வேம்படி மகளிர் கல்லூரி, எம்.புவஸ்தினா வேம்படி மகளிர் கல்லூரி

நீளம் பாய்தல்

கே. நிரோசா உயரப்புலம் மகா வித்தியாலயம், ஆர்.அன்றியா சாதினி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆர். கோவரதனி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

உயரம் பாய்தல்

ரி.ஜனாடிலுஸ்மினி சுண்டுக் குளி மகளிர் கல்லூரி, பி.சானுஜா யாழ். இந்து மகளிர் கல்லூரி , ஜே.தபிஷா சுண்டுக் குளி மகளிர் கல்லூரி

குண்டுபோடுதல்

கே.சர்மிளா யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஜே.ஜெனிதா இடைக்காடு மகா வித்தியாலயம், ஜே.சுதர்சிகா சுண்டுக் குளி மகளிர் கல்லூரி

தட்டெறிதல்

ஜே.சுதர்சிகசுண்டுக் குளி மகளிர் கல்லாரி. ய.மரில்ண்மா சுண்டுக் குளி மகளிர் கல்லூரி, கே. சர்மிளா யாழ். இந்து மகளிர் கல்லூரி.

21 வயதுப்பிரிவு

100 மீற்றர் ஓட்டம்

பி.தர்சிகா அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி, ஜி.மேரி சிந்துஜா திருக்குடும்ப கன்னியர் மடம், ஏ.பிரியங்கா பெரியபுலம் மகா வித்தியாலயம்.

200 மீற்றர் ஓட்டம்

பி.தர்சிகா அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி, ஜி.மேரி சிந்துஜா திருக்குடும்ப கன்னியர் மடம், ஆர்.ஜி.பிருந்தா திருக்குடும்ப கன்னியர் மடம்.

400 மீற்றர் ஓட்டம்

எல்.ஆன்மிடோனா திருக்குடும்ப கன்னியர்மடம், ஜி.மேரிசிந்துஜா திருக்குடும்ப கன்னியர் மடம். எம். நளாயினியாழ். இந்துமகளிர்கல்லூரி,

800 மீற்றர் ஓட்டம்

ரி.அருள்டிசாறா திருக்குடும்ப கன்னியர் மடம், கே. சர்விகா புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, என்.பார்மினி முத்துத்தம்பி வித்தியாலயம்.

1500 மீற்றர் ஓட்டம்.

ரி.அருள் டிசாறா திருக்குடும்ப கன்னியர் மடம், கே.பரணிகா இடைக்காடு மகா வித்தியாலயம்

5000 மீற்றர் ஓட்டம்

ரி.அருள் டிசாறா திருக்குடும்ப கன்னியர் மடம்

நீளம் பாய்தல்

ரி.பிருந்தா அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி, பி.உமாரஞ்சினி அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி, எஸ்.சாம்பவி யாழ். இந்து மகளிர் கல்லூரி

உயரம் பாய்தல்

கே.துவாரகா வேம்படி மகளிர் கல்லூரி, ரி.பிருந்தா அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி, எஸ். காயத்திரி , ரி.பிருந்தா அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி

குண்டு போடுதல்

ஜே.ஜொ.டிசானி திருக்குடும்ப கன்னியர் மடம், பி.லக்சனா அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரி, ஏ.டிபோறா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

தட்டெறிதல்

கே.டசோ முத்துத்தம்பி மகா வித்தியாலயம், ஏ.டிபோறா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஆர்.நிதர்சினி புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி (க)

## ஆஸி.விக்கெட் கீப்பர் ஹாடின் ஒருநாள் போட்டியிலிருந்து ஓய்வு

உலக கோப்பையை வென்ற அவுஸ்திரேலிய அணியில் விக்கெட் கீப்பராக பணியாற்றிய பிராட் ஹாடின், ஒரு நாள் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

பி.ஜே. என்ற பட்டப்பெயரால் அழைக்கப்படும் ஹாடின் இடது கை துடுப்பாட்டவீரராவார். இதுவரை 126 போட்டிகளில் பங்கேற்றுள்ள இவர், 115 இன்னிங்சில் விளையாடியுள்ளார். 2 சதங்களையும், 16 அரை சதங்களையும் அடித்துள்ள இவர், இதுவரை 3122 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அதே போல் விக்கெட் கீப்பர் பொறுப்பில் 170 கட்ச்களை பிடித்துள்ளதுடன், 11 ஸ்டம்பிட்களையும் செய்துள்ளார். இந்நிலையில் ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக தற்போது அறிவித்துள்ளார். (க)



## மகன்களை தயார்படுத்தும் 'தடுப்பு சுவர்' டிராவிட்



இந்திய கிரிக்கெட் அணியின் "தடுப்பு சுவர்" என்று வர்ணிக்கப்படும் முன்னாள் வீரர் டிராவிட் தனது இரு மகன்களை கிரிக்கெட் பயிற்சியில் ஈடுபடுத்தியுள்ளார்.

கடந்த வெள்ளி அன்று மும்பையின் ப்ராபோர்ன் அரங்கில் டிராவிட்டின் மகன்களான சமித் மற்றும் அன்வய் ஆகிய இருவரும் அசால்ட்டாக டைவ் அடித்து பயிற்சி செய்தது, பல சர்வதேச வீரர்களை திரும்பிப் பார்க்க வைத்தது.

இதில் அவுஸ்திரேலிய வீரர் 'ஸ்டீவ் ஸ்மித்' இருவருக்கும் சில கிரிக்கெட் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

டிராவிட் தன் 12ம் வயதிலிருந்து கிரிக்கெட் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். ஆனால் சமித் (9), அன்வய் (6) மிகவும் இளவயதிலே கிரிக்கெட் பற்றி கற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

டிராவிட் தற்போது ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு ஆலோசகராக இருப்பதால், அவருடன் சர்வதேச மைதானங்களை வலம் வந்து எப்போதும் இருவரும் கிரிக்கெட்டையே சுவாசித்து வருகின்றனர். (க)

## ரோம் சர்வதேச டென்னிஸ் இறுதிப் போட்டியில் சானியா




இத்தாலியில் நடந்து வரும் ரோம் சர்வதேச டென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் விளையாட, இந்தியாவின் சானியா மிர்சா - மார்டினா ஹிங்கிஸ் (சுவிஸ்) ஜோடி தகுதி பெற்றது. அரை இறுதியில் கரோலின் கார்சியா (பிரான்ஸ்) - கேதரினா ஸ்ரெபோட்னிக் (ஸ்லோவகியா) ஜோடியுடன் நேற்று மோதிய சானியா ஜோடி 6-2 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றது. இரண்டாவது செட்டில் கார்சியா - ஸ்ரெபோட்னிக் ஜோடி கடும் நெருக்கடி கொடுத்ததால், ஆட்டம் டை பிரேக்கர் வரை இழுபறியாக நீடித்தது. மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில், சானியா ஜோடி 1 மணி, 26 நிமிடம் போராடி 6-2, 7-6 (7-5) என்ற நேர் செட்களில் வென்று இறுதிக்கு முன்னேறியது.

மகளிர் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில் நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) 6-3, 6-2 என்ற நேர் செட்களில் விக்டோரியா அசரென்காவை (பெலாரஸ்) வீழ்த்தி அரை இறுதிக்கு தகுதி பெற்றார். சக ரஷ்ய வீராங்கனை தாரியா காவ்ரிலோவாவை அவர் அரை இறுதியில் எதிர்கொள்கிறார்.

நேற்று முன்தினம் நடந்த முதலாவது அரை இறுதியில் ரோமானியாவின் சிமோனா ஹாலெப் (2வது நிலை) 6-2, 3-6, 5-7 என்ற செட் கணக்கில் கர்[illegible] சுவாரஸ் நவர்ரோவிடம் ([illegible]யின்) அதிர்ச்சி தோல்வி அடைந்து ஏமாற்றத்துடன் வெளியேறினார். ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் நம்பர் 1 வீரர் நோவாக் ஜோகோவிச் (செர்பியா) - டேவிட் பெர்ரர் (ஸ்பெயின், 7 ஆவது நிலை) மோதினர். (க)

## இத்தாலி ஓபன் டென்னிஸ்; ஜோகோவிச், பெடரர் மோதல்



இத்தாலி ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் செர்பியாவின் ஜோகோவிச், சுவிட்சர்லாந்தின் பெடரர் மோதுகின்றனர்.

ரோம் நகரில் இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் "நம்பர்-1" வீரரான செர்பியாவின் ஜோகோவிச், ஸ்பெயினின் டேவிட் பெடரரை சந்தித்தார். முதல் செட்டை 6-4 என கைப்பற்றிய ஜோகோவிச், இரண்டாவது செட்டையும் 6-4 என தன்வசப்படுத்தினார். முடிவில், ஜோகோவிச் 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரையிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-4, 6-2 என சக வீரர் வாவ்ரின்காவை தோற்கடித்தார்.

இதன்மூலம் இறுதியில் ஜோகோவிச், பெடரர் சந்திக்கின்றனர். (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மேலும் நான்கு...

செல்லப்பட்டதையடுத்து, அவர்களுக்குத் தாங்களே தண்டனை வழங்கவேண்டும் என்றும், ஆகவே அந்த நால்வரையும் தம்மிடம் கையளிக்க வேண்டும் என்றும் புங்குடுதீவு மக்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு பொலிஸாரிடம் கோரினர். இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே முறுகல்நிலை ஏற்பட்டது.

மாணவி வித்யாவின் கொடூரமான கொலைக்கும், பாலியல் பலாத்காரத்துக்கும் இவர்களே காரணம் என கண்டறிந்து இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இந்த நான்கு பேரும் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களில் ஒருவர் வெளிநாட்டில் இருந்து இங்கு வந்துள்ளதாகவும் தமக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதை அறிந்த மக்கள், அவர்களை பொலிஸாரிடமிருந்து கைப்பற்றுவதற்காக பொலிஸ் வாகனத்தைச் செல்லவிடாமல் வீதிகளை மறித்து போராட்டம் நடத்தியுள்ளனர்.

எனினும், பொலிஸார் கைது செய்யப்பட்டவர்களைப் பாதுகாப்பாக குறிகாட்டுவான் பொலிஸ் நிலையத்திலிருந்து கடல் வழியாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்வதாகக் கூறப்பட்டது. எனினும் அவர்கள் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றதாக மற்றும்றொரு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் ஐவரும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பிந்திய செய்திகள் தெரிவித்தன.

ஊர் மக்கள் திரண்டு கைது செய்யப்பட்டவர்களைக் கைப்பற்ற மேற்கொண்டுள்ள முயற்சியையடுத்து, புங்குடுதீவுக்கு மேலதிக பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டனர்.

புங்குடுதீவில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமையை அறிந்து பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், வடமாகாண சபை உறுப்பினர்கள் பிரதேச சபை தவிசாளர் எனப் பலர் சம்பவ இடத்திற்கு சென்றனர்.

இதேவேளை பொலிஸார் சந்தேக நபர்களை கொண்டு செல்ல முற்பட்ட போது தகவல் அறிந்த பொது மக்கள் வீதிகளை மறித்து நின்றனர். ரயர்களை எரித்து தடைகளை ஏற்படுத்தினர். வேலணைத் துறை, வங்களாவடி போன்ற இடங்களிலும் பொது மக்கள் அதிகளவில் வீதிகளை மறித்துக் காணப்பட்டனர்.

புங்குடுதீவு மாணவி வித்யா பாடசாலைக்குச் சென்றபோது கடத்தப்பட்டு மறுநாள் காலை காட்டுப்பாங்கான பகுதியில் கோரமாகக் படுகொலை செய்யப்பட்டு சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஏற்கெனவே மூன்று பேரைக் கைது செய்திருந்தனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையிலேயே இந்த நான்கு பேர் நேற்று ஞாயிறன்று ைகது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் விசாரணையைத் துரிதப்படுத்துமாறு பெண்கள் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், ஊர்காவற்றுறை பொலிஸாரை நேற்றுக் கோரியிருந்த நிலையில் இக் கைதுகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவின் கொலை தொடர்பில் பதற்ற மும் அச்சமும் ஏற்பட்டுள்ள நிலையில் இக் கொலைகளைக் கண்டித்து பல்வேறு தரப்பினரும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## தமிழர் தாயகம்...

வரும் மக்களின் போக்குவரத்துக்காக 5 மாவட்டங்களிலுமிருந்து போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இறுதிப்போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் 2 ஆயிரம் பேர் பிதிர்க்கடன்களைச் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. காலை 6 மணிக்கு கீரிமலையில் பிதிர்க்கடன் நிறைவேற்றல் நடைபெறும்.

அதன் பின்னர் நகுலேஸ்வரத்தில் யாகம் நடைபெற்று அதன்பின்னர் உருத்திராபிஷேகம் நடைபெற்று, மோட்ச தீபம் காட்டப்படும்.

பிதிர்க்கடன் நிறைவேற்றத் தேவையான சகல பொருட்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உறவினர்கள் தாங்கள் விரும்பினால் பொருட்களை கொண்டு வரலாம்.

அல்லது அங்கு கொடுக்கும் பொருட்களை பயன்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை போரில் உயிரிழந்த மக்களை நினைவுகூருவதற்கு எவ்வித தடையும் இல்லை என பொலிஸ் தரப்பும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## வேலணையில்...

வெளிச்சமற்ற வாகனம் ஒன்றில் பொலிஸார் ஊர்காவற்றுறை நோக்கிச் சென்றுள்ளமையை சாதகமாகப் பயன்படுத்தி இவ் ஆட்டோ சென்ற நிலையில் பொதுமக்கள் அவ் ஆட்டோவை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

அதில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரின் சகோதரன் இருந்துள்ளார்.

இதனையடுத்து அவரை பொதுமக்கள் கடுமையாக தாக்கியுள்ளனர். இதனையடுத்து ஆட்டோவில் வந்த மற்றைய நபருடன் ஆட்டோ தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளான நபர் சுவிஸில் இருந்து வருகை தந்ததாக கூறப்பட்டது.

இவருக்கும் மாணவியின் கொலைக்கும் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகம் இருப்பதாக பொது மக்கள் கூறினர்.

எனினும் வான் ஒன்றில் வந்த அவரது மனைவி அவரை புங்குடுதீவுக்கு அழைத்துச் சென்றதாக கூறப்பட்டது. (எ-4)

# ஹைதராபாத்தை எளிதில் வீழ்த்தியது மும்பை

## தகுதிகாண் போட்டி – 1 இல் சென்னையை நாளை சந்திக்கிறது



சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை இலகுவாக வீழ்த்திய மும்பை அணி புள்ளிகள் பட்டியலில் 2ஆவது இடத்தை பிடித்து பிளே ஓவ் வாய்ப்புக்குள் நுழைந்தது.

ஹைதராபாத்தில் நேற்று நடந்த ஐ.பி.எல். சீசன் 8இன் கடைசி லீக் (56) போட்டியில் ஹைதராபாத்- மும்பை அணிகள் மோதின.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணி 2-வது இடத்தை பிடிக்கும் என்பதால் இந்த போட்டி மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி நம்பிக்கையுடன் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

ஆனால் அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்கள் ஆரம்பம் முதல் இறுதி வரை சொதப்பலான ஆட்டத்தையே வெளிப்படுத்தியதால்,

ஹைதராபாத் அணியால் 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

ஹைதராபாத் அணியின் துடுப்பாட்டத்தில் லோகேஸ் ராகுல் 25 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தார்.

பந்துவீச்சில் மும்பை அணி சார்பில் மக்லனகேன் 3, மலிங்க, சுசித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

114 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றியிலக்குடன் மும்பை அணியின் தொடக்க வீரர்களாக சிம்மன்ஸ், பட்டேல் இருவரும் களமிறங்கினர்.

இருவரும் தொடக்கம் முதலே நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களைச் சேர்த்தனர்.

வெற்றி பெறப்போவது நாங்கள்தான் என்று தெரிந்ததும் அவர்கள் நிதானமாக ஆட்டத்தை வெளிப்படுத்தினர் போலும்,

ஒரு கட்டத்தில் இருவரும் தமது 50 ஓட்டங்களை நெருங்கினர். ஒருவேளை இதுக்குதான் இவ்வளவு நிதானமா ஆடினார்களோ? என்று நினைக்கும் வகையில் பட்டேல் 50 ஓட்டங்களைக் கடந்தார்.


அடுத்து சிம்மன்ஸ் 50 ஓட்டங்களைக் கடப்பார் என்று ரசிகர்கள் நினைக்கையில் துரதிர்ஷ்டவசமாக 48 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஷர்மா சிக்ஸ் அடித்து ஆட்டத்தை சுபமாக முடித்து வைக்க,

இறுதியில் மும்பை அணி 13.5 வது ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 9 விக்கெட் டுக்களால் வெற்றியி லக்கை (114) அடைந்தது.


இதன்மூலம் புள்ளிப்பட்டியலில் 2-வது இடத்தைப் பிடித்த மும்பை, தகுதிக்காண் போட்டி - 1 இல் சென்னை அணியை நாளை எதிர்கொள்கிறது.

போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை அணியின் மக்லனேகன் தெரிவானார்.




### டில்லி – பெங்களூர் ஆட்டம் மழையால் இரத்து

# புள்ளிகள் அடிப்படையில் பெங்களூருக்கு 3ம் இடம்



டில்லி அணிக்கு எதிரான போட்டி மழையினால் கைவிடப்பட அப்போட்டியில் கிடைத்த ஒரு புள்ளியின் மூலம் தனது புள்ளிக் கணக்கை 16ஆக அதிகரித்துக் கொண்ட பெங்களூர் அணி குவாலிபயர் சுற்றுக்கு தகுதி பெற்றது.

8ஆவது ஐபிஎல் தொடரின் 55ஆவது போட்டி பெங்களூர் - டில்லி அணிகளுக்கு இடையில் நேற்று பெங்களூருவில் நடைபெற்றது.


போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூர் அணித் தலைவர் ஹோலி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி டி ஹொக், டுமினியின் அதிரடியான துடுப்பாட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களை எடுத்தது.

188 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பெங்களூர் அணி களம் இறங்கியது.

தொடக்க வீரர்களாக ஹெய்லும், விராட் ஹோலியும் களம் இறங்கினர்.

பெங்களூர் அணி 1.1 ஓவர்களில் 2 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது மழை குறுக்கிட்டது.





கனமழை பெய்ததால் போட்டியை கைவிட நடுவர்கள் தீர்மானித்தனர்.

இதனால் போட்டி இரத்து செய்யப்பட்டு இரண்டு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வழங்கப்பட்டது.

பெங்களூர் அணி 14 போட்டிகளில் 7 வெற்றி, 5 தோல்வி, இரண்டு போட்டி மழையினால் ரத்து ஆகியவை மூலம் 16 புள்ளிகள் பெற்று பிளே ஓப் சுற்றுக்கு முன்னேறியது.

ஓட்ட சராசரியின் அடிப்படையில் முன்னிலை வகித்தாலும் வெற்றிகளின் அடிப்படையில் 3ஆம் இடத்தைப் பிடித்த பெங்களூர்,

எலிமினேட்டர் போட்டியில் வரும் 20ஆம் திகதி ராஜஸ்தானை எதிர்கொள்ள இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் தாயகம்...

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் இதே நாளில் முள்ளிவாய்க் காலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கொல்லப்பட்ட நாளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யும் தமிழ்த்தேசிய துக்க நாள் என பிரகடனப்படுத்தியிருந்தன. இந் நிலையில் இன்று தமிழ்த் தேசிய துக்க நாள் உலகம் முழுவதும் அனுஷ டிக்கப்படவுள்ளது.

வடக்கில் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்து முள்ளி வாய்க்கால் தினத்தை உணர் வெழுச்சியுடன் இன்று காலை ஒன்பது மணியளவில் பல்கலைக் கழக வளாகத்தில் அனுஷ்டிக்கப் போவதாகவும் இந் நினைவேந்தல் நிகழ்வில் பல்கலைக்கழக சமூகம் சார்ந்த அனைத்து தரப்பினரையும் கலந்து கொண்டு எம்முடைய உறவு களுக்கு அஞ்சலி செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போரில் பல்லாயிரக்கணக் கான மக்கள் படுகொலை செய்யப் பட்ட இடமான முள்ளிவாய்க்காலில் இன்று காலை பத்து மணியளவில் வடக்கு மாகாண சபை அமைதி யான முறையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் ஈடுபட வுள்ளதாக அறிவித்துள்ளது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதல் அமைச்சரும் முன்னாள நீதியரசருமான சி.வி. விகனேஸ் வரன் பிரதான உரையொன்றி னையும் நிகழ்த்தவுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியினால் முள்ளிவாய்க் காலில் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த நினைவேந்தல் நிகழ் விற்கு முல்லைத்தீவு நீதிமன் றம் தடை வித்தித்துள்ள நிலை யில் பிரத்தியேக இடமொன் றில் அமைதியான முறையில் முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வை அனுஷ்டிக்க போவதாக அறிவித்துள்ளது. இந் நினைவேந்தல் நிகழ்வு கள் அனைத்தும் தமிழ் இனப் படுகொலைகளை நினைவு கூறும் வகையில் அமைய வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக சமூகம் கோரி யுள்ளது.

இதேவேளை இறுதிப்போரில் உயிரிழந்தவர்களுக்கு அவர்களது உறவினர்கள் இன்றைய தினம் கீரி மலையில் பிதிர்க்கடன் செய்வதற் கான சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாக ஐக் கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப் பாளர் தி.துவாரகேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

பிதிர்க்கடன் நிறை வேற்றுவதற்கு எவ்வித தடைகளும் இல்லை. அது திட்டமிட்டபடி நடக் கும். எவரும் பயப்படா மல் அதில் கலந்துகொள் ளலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிதிர்க்கடன் களை நிறைவேற்ற 500 சிவாச்சாரியர்கள் கீரி மலைக்கு வருகைதர வுள்ளனர்.

பிதிர்கடன் நிறைவேற்ற

23ஆம் பக்கம் பார்க்க....

## கொமாண்டோ...

பிரதேசமாக இருந்த போது இந்த முரு கன் ஆலயம் சிறப்புற பேணப்பட்டது.

இதன்பின் கடந்த 2007 ஆண்டு இராணுவத்தினர் இப்பிரதேசத்தில் ஆக்கிரமிப்பு செய்தபின் குடும்பிமலை யில் குடும்பிமலைக்கு சமீபமாக விகாரை ஒன்று படையினரால் அமைக்கப்பட்டு பெரிய இராணுவ முகாமும் அமைக்கப் பட்டுள்ளது.

அதன்பின் 2011-ம் ஆண்டு பிற்பகுதி யில் தொலைத் தொடர்பு கோபுரம் அந்த மலையில் அமைக்கப்பட்டு அதற்கான மின்மானி மற்றும் உபகரணங்களை பாதுகாக்கும் களஞ்சியமாக முருகன் ஆலய மூலஸ்தானத்தை பயன்படுத்து வதை தற்போது காண முடிகிறது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட சகல தர பினருக்கும் நடவடிக்கையை எடுக்கு மாறு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் முறையிட்டுள்ளார்.

இந்த முருகன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று மே 18-ம் திகதி ஆரம் பமாவது வழமை என்பது குறிப்பிடத்தக் கது. (செ)

## முச்சக்கர...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த அன்டன் ஜூட் பிரான்சிஸ் (வயது 45) என் பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கைதடியிலிருந்து கோப்பாய் நோக்கி சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டி, பருத்தித்துறை வீதிக்கு செல்ல முற்பட்ட போது, யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித் துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பேருந்து முச்சக்கரவண்டியை மோதியுள்ளது.

இதில் முச்சக்கரவண்டி வீதியின் கரையே உள்ள பெரிய வாய்க்காலையும தாண்டி தூக்கி வீசப்பட்டதுடன் அதில் பயணித்தவர்களில் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிசார் இது தொடர்பில் யாழ்.நீத வானுக்கு தெரியப்படுத்த அங்கு வருகை தந்த யாழ்.நீதவான் பெ.சிவகுமார் விபத் தினை பாரவையிட்டு சென்றிருந்தார்.

பேருந்து சாரதியை கைது செய்த கோப் பாய் பொலிஸார மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை யாழப்பாணத்தில நடைபெற்ற வீதிவிபத் தினால் இம் மாதத தில்ஏற்பட்ட நான்கா வது உயிரிழப்பு இது வென்பது குறிப்பிடத் தக்கது. (செ-4)

## ஆறு ஆண்டுகளாகியும்...

றுப் பெறாத நிலையிலேயே காணப் படுகின்றன.

அந்த வீடுகளின் சுவர்களுக் குரிய சீமெந்து பூச்சு வேலைகளை வீட்டு உரிமையாளர்களே செய்ய வேண்டும் என்று வீடுகளைக் கட்டிக் கொடுத்தவர்கள் தெரிவித்திருப் பதாக அவர்கள் தெரிவிக்கின்ற னர்.

சாப்பாட்டுக்கே வழியற்ற நிலை யில் வீட்டுச் சுவர்களுக்கான பூச்சு வேலைகளை எவ்வாறு மேற்கொள் வது என்று அவர்கள் கேள்வி எழுப பியிருக்கின்றனர்.

இருந்த போதிலும் கூடாரங் களிலும், கொட்டில்களிலும் சிரமப் பட்டுக் கொண்டிருந்த தங்களுக்கு இந்த கல்வீடுகள் பாதுகாப்பையும் நிம்மதியையும் அளித்திருப்பதாக வும் அவர்கள் நன்றியோடு குறிப் பிடுகின்றனர்.

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளுக் குப் போதிய நிதி இல்லாத காரணத் தினால் அந்த வீடுகளை முழுமை யாக நிர்மாணிக்க முடியாதிருப் பதாக இன்னும் சிலர் கூறுகின்ற னர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் னர் மீள்குடியேற்றப்பட்டுள்ள முள்ளி வாய்க்கால் பிரதேசத்தில் உட்கட்ட மைப்பு வசதிகள் உள்ளிட்ட அபிவி ருத்திப் பணிகள் அரசாங்கத்தினால முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும, இறுதி யுத்தத்தின் போது இந்தப் பிரதேசத்தில் நிகழ்ந்த மோசமான உயிரிழப்புக்கள், பாதிப்புகளில் இருந்து அந்த மக்கள் மீட்சி பெறும் வரையில் அங்கு உண்மையான அபிவிருத்தியைக் காண முடியாது என்று அங்கு வசிக்கும் பெண்மணி ஒருவர் தெரிவித்தார்.

யுத்த மோதல்களின்போது சீறி வந்த துப்பாக்கிக்குண்டுகள், எறி கணைகள் மற்றும் குண்டுகளின் தாக்குதல்களில் சிக்கி காயமடைந்த வர்களையும், இறந்தவர்களையும் ஏற்க முடியாமல் தவித்த தற்காலிக வைத்தியசாலையாகச் செயற்பட்ட முள்ளிவாய்க்கால் மேற்கு பாட சாலை இப்போது புதுப்பொலிவு பெற்று கல்வியிலும் சிறந்து விளங்கு வதாக அங்குள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் தெரிவித்தனர்.

மோசமான யுத்த மோதல்களில் சிக்கி, உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில், மரணத்தின் விளிம்பு வரை சென்று திரும்பியுள்ள தாங் கள், இப்போதுள்ள சூழலில் அங்கு வாழ முடியும் என்று கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை என்றும், அன்றைய நிலைமைகளை மீண் டும் எண்ணிப்பார்க்கும்போது, மரண பயமே தமது மனங்களைச் சூழ்ந்து கௌவுவதாகவும் அங்குள்ள பலரும் கூறுகின்றனர். (செ)


15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...

STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION – VISIT VISA

கனடா Express Entry Visa — தொழில்வாய்ப்புடன் குடியுரிமை(PR) Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

Student VISA — UK, Australia, Spain New Zealand, Switzerland, Canada & Malaysia

FREE Assessment

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions

ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள

www.sikaram.lk

Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி.
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004 / 021 222 00 11
(C1000)



B.A (கலைமாணி) பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி) பதிவுகள் கோரப்பட்டுள்ளன

- A/L மூன்று பாடங்களும் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப் பிக்க முடியும்.
- பதிவுகள் எமது நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.
- பதிவுக்கட்டணங்கள் எவையும் அறவிடப்படமாட்டாது.
- விரிவுரைகள் எமது நிறுவனத்தில் நடைபெறும். ஆரம்பம் 25.05.2015 காலை 9.00 மணி.
- கடந்த வருடம் பரீட்சை எழுதிய 57 மாணவர்களில் 56 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.
- இம்முறை எமது நிறுவனத்தினூடாக பதிவுகளை மேற்கொண்ட 54 மாணவர்களில் எவரிடமும் பதிவுக்கட்டணம் அறவிடப்படவில்லை.
- 18.05.2015 காலை 10.00 மணிமுதல் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

NJT பட்டப் படிப்புகள்
இல. 55, பலாலி றோட், இலுப்பையடிச் சந்தி. யாழ்ப்பாணம். மேலதிக தகவல்களுக்கு:- 0776624387
(503)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



- வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள் (498)

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்



உடனடி வேலைவாய்ப்பு

உலகளாவிய ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச கம்பனிக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் இருந்து ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தேவை.

- தகைமை O/L
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.
- பயிற்சியின் போது 15,000/- பின் 35,000 /-
- வயதெல்லை 18-30

(C-999)

தொடர்புகளுக்கு : 0777981471/ 0775566226



Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு -
(C-994)



BA (கலைமாணி) பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

நீண்டகாலம் பதிவினை மேற்கொள்ளப்படாமல் இருந்த கலைமாணிக்கான (B.A) க்குரிய பதிவுகள் மேற்படி பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையர்கள் ஆவர்.

பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறும். பரீட்சைக்கான கருத்தரங்குகள் யாவும் எமது நிறுவனத்தில் நடைபெறும்

(A/L)ல் பழைய, புதிய பாடத்திட்டத்தில் பரீட்சை எடுத்த மாணவர்கள் அனைவரும் பதிவினை மேற்கொள்ள முடியும்.

வட மாகாணத்தில் பேராதனை பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனம் எமது நிறுவனமாகும்.

பதிவுகள் முடிவுத் திகதி:- 30.06.2015
விரிவுரைகள் ஆரம்பம் :- 23.05.2015 (காலை 8 மணி)

(C-998)

குறிப்பு: விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்

விபரங்களுக்கு: S. அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
0215689947, 0212228148, 0778469721, 0778019187, 0776621856


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரா... ம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாண... முகவரியி... ளது அச்சகத்தில் 18.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org